Koviloor Digital Library

திருவருட்பா

என்னும் தேன்

57



A.No. 17184
R65: வள்ள

அருட்பா விளக்க உரை

Koviloor Digital Library

Koviloor Digital Library

4-3

திருவருட்பா என்னும் தேன்

அருட்பா விளக்க உரை

ஏ. எஸ். வழித்துணைராமன்

BOARD OF STUDIES SECTION

SPECIMEN COPY

பாரதி பதிப்பகம்

108, உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை-600 017.

Koviloor Digital Library

புதிய முதற் பதிப்பு : ஆகஸ்ட் 1991

முழு உரிமை : பாரதி பதிப்பகம், சென்னை-17.

விலை ரூ. 10-00

பதிப்புரை

"கண்டேன் சிற்றம்பலத்து ஆனந்த நாடகம் கண்டு களி
கொண்டேன் எல்லாம் வல்ல சித்தனைக் கூடிக் குலவி அமுது
உண்டேன் மெய்ஞ்ஞான உரு அடைந்தேன் பொய் உலக ஒழுக்கம்
விண்டேன் சமரச சன்மார்க்கம் பெற்ற வியப்பு இதுவே."

இவ்வாறு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைக் கண்டு களி கூர்ந்து இறைவன் பால் கசிந்துருகி, கனிந்துருகி, நைந்துருகி நயம்பெருகிப் பாடிய திருவருட்பா என்னும் அருட்தேன் திரட்டைத் தந்தவர் திருவருட் பிரகாச வள்ளல் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள்.

அந்தத் தேன் அருவியில் பெய்த துளிகளை இங்கே ஆசிரியர் எடுத்து நமக்குச் சுவைக்கவும், களிக்கவும் தந்திருக்கிறார்கள். வேதங்கள், உபநிஷத்துகள், புராணங்கள், இதிகாசங்கள், தேவாரம், திருவாசகம் முதலிய நூல்களில் உள்ள சாரத்தோடு பிசைந்து தந்த தேனமிர்தம் இந்த நூல் என்றால் மிகையாகாது.

—பதிப்பகத்தார்

அச்சிட்டோர் :

சௌதரி பிரிண்டர்ஸ், சென்னை-26.

Koviloor Digital Library

என்னுரை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!!
தனிப் பெருங் கருணை! அருட்பெருஞ்சோதி!

எல்லாம் செயல் கூடும் என்னாணை அம்பலத்தே
எல்லாம் வல்லான் தனையே ஏத்து.

வள்ளல் பெருமான் என்று வையகம் எல்லாம் போற்றும் வடலூர் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் அருட்பெருஞ்ஜோதி அகவலில்:-

"தன்னியல் என் இயல் தன் செயல் என் செயல்
என்ன இயற்றிய என்தனித் தந்தையே
தன்னுரு என்னுரு தன் உரை என் உரை
என்ன இயற்றிய என்தனித் தந்தையே!

என்று சொல்லுகிறார்கள்.

முன்னுரை என்ற என்னுரைப் பகுதியில் எல்லாம் வள்ளல் சொன்னது போல அவர் உரையும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் உரையும் ஆகும். நான் என்னை இறைவன் பணித்த வாறு ஏதோ எனக்குத் தெரிந்ததைத் திருவருட்பா என்ற பெருந்தேன் அருவியிலிருந்து ஓரிரு துளிகளைச் சுவைக்க வாசகர் உள்ளங்களுக்குத் தந்திருக்கிறேன். ஆன்மநேய ஒருமைப் பாட்டுக்குரிய வாசகர்களின் திருப்பாத மலரடிகளுக்கு இந்த நூலைப் பாரதி பதிப்பகத்தார் மூலம் தந்திருக்கிறேன். படைத்தது கடமை. பலன் பெறவைப்பது 'அவன்' உடைமை என்று கூறி இதைப் பதிப்பித்த பாரதி பதிப்பகத்தாருக்கு என் நன்றிகூறி பதிப்பகம் வள்ளல் துணையால் பல்கிப்பெருக விழைகிறேன்.

சென்னை—600078

25—9—1987 ஏ.எஸ். வழித்துணைராமன்

Koviloor Digital Library

இதனுள் பெய்த தேன் துளிகள்

தலைப்பு	பக்கம்
1. பிரம்ம முடிச்சு	5
2. சாதியும் மதமும்	17
3. காக்காய் பிடித்த கதை	24
4. நாம ஜப யக்ஞம்	31
5. ராமநாம மகிமை	42
6. ஆத்ம ஞானம்	45
7. கடவுள் வழிபாடு	63
8. மனதைப்பற்றி	78
9. நெடுங்காமக் கடல்	87
10. மாயை	94
11. ஜீவகாருண்யம்	100
12. மழை	111
13. மானம்	111
14. அநட்பாவைப்பற்றி ஐயாவும் அன்பர்களும்	117
15. சற்குருதுதி	119

Koviloor Digital Library

திருவருட்பா என்னும் தேன்

1. பிரம்ம் முடிச்சு

"நாமே பிரம்ம சொரூபம் நம்மைத்தவிர வேறு கடவுளே கிடையாது. நமக்கு நன்மை தீமை என்பது இல்லை. இம்மைக்கும் நாமே சாட்சி. மறுமைக்கும் நாமே சாட்சி" என்று கூறித் தம்மிடம் பிரம்மோபதேசம் கேட்க வருவோர் அதிசயிக்கும் வண்ணம் வேத வாக்கியங்களையும் மந்திரங் களையும் மற்றும் தெய்வத் துதிப் பாடல்களையும் சொல்லி வருபவர்களை ஆகர்ஷிப்பார்கள். எல்லாச் சித்துகளும் பெற்றது போலப் பேசுவார்கள். எது எப்படிப் போனாலும் அவர்களு டைய தீய பழக்க வழக்கங்களைக் கைவிட மாட்டார்கள். (பெரும்பாலும் பெண்களை ஏமாற்றிப் பொருளையும் அவர்கள் கற்பையும் பறிக்கும் தீயபழக்கமே அநேக சாமியார்களிடம் உண்டு) தமக்கு ஏதேனும் ஒரு கஷ்டமோ, இல்லை பொருள் வாய்ப்போ ஏற்பட்டால் அவர்கள் பிரம பாவனையாகப் பேசும் பேச்சினை அடியோடு விட்டு விடுவார்கள். இவர்கள் வெறும் கயிறு, பாம்பு போலப் படம் பிடித்துத் தம்மைக் காட்டுவார்கள் என்று மக்களே உணர்வீராக." என்று வள்ளற் பெருமான் ஒரு பாட்டின் மூலம் நமக்கு அறிவுறுத்து கிறார்: எச்சரிக்கிறார்.

அதே பாடலில் "உண்மையான சிற்பிரமம் நீயே! சென்னைக் கந்த தோட்டத்தில் இருக்கும் சண்முகத் தெய்வ மணியே சைவமணியே நீதான்" என்றும் நமக்குத் தெய்வத்தை—உண்மையான தெய்வத்தைச் சுட்டுகிறார்.

"நாம் பிரமம் நமையன்றி ஆம் பிரமம் வேறில்லை
    நன்மை தீமைகளும் இல்லை
நவில்கின்ற வாகி ஆம் தரம் இரண்டினும் ஒன்ற
    நடு நின்றது என்று வீணாள்
போம் பிரம்ம நீதி கேட்போர் பிரமையாகவே
    போதிப்பர் சாதிப்பர் தாம்
புன்மை நெறி கைவிடார் தம்பிரமம் வினை ஒன்று
    போந்திடில போக விடுவார்.

Koviloor Digital Library

சாம்பிரமாம் இவர்கள் தாம் பிரமம் எனும் அறிவு
தாம்பு பாம்பு எனும் அறிவுகாண்
சத்துவ அகண்ட பரிபூரணாகார உப
சாந்த சிற்பிரமம் நீ
தாம்பிரிவு இல் சென்னையில் கந்த கோட்டத்துள்வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே!"

ஆம்- ஆகும், நவில் - சொல், வீணள்-வீணான நாள்கள், பிரமை-நடிப்பு, புன்மை நெறி-தீமை நெறி, சாம்-சாகும்-தாம்பு-கயிறு. சிற்பிரமம் - சித்தாகிய பிரமம். தாம்பிரிவு இல்-தான் பிரிந்து செல்லாத

மேலும் இப்பாடலில் சொல்லுவது இது "எந்தக் காலத்திலும் எந்த இடத்திலும் அழிவற்ற அளவில்லாத இன்ப வடிவாக அமர்ந்திருப்பவரே! தானே விளங்கும் பேரருள் பேரொளியாகத் திகழ்கிற ஆண்டவரே! தங்கள் தம் திருவருள் நீங்காத சென்னையில் வளர்கிற தெய்வ மணியே! நீயே பிரம்மம். ஆனல் சில போலிச் சாமியார்கள் தாமே பிரமம்என்று சொல்லித்திரிகிருர்கள். பதற்றம் உள்ளவனுக்கு, அறிவு சூன்யனுக்கு கயிறும் பாம்பு போலத் தெரியும், ஆனல் கயிறு பாம்பு ஆகுமா?" என்று தெளிவு படுத்தும் பாடல் இது.

இந்தப் பிரம்மத்தைத் தம்மோடு சேர்த்துக் கொண்டு திரிந்தலைந்த சாமியார்கள் பலர். இதில் ஓர் உண்மைச் சம்பவம் அண்மையிலே நிகழ்ந்தது. இப்படிப் போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள் என்று நமக்கு அருட் பிரகாச வள்ளல் சொல்லியும் எழுதியும் அதை அறியாமல் நிர்மூடபக்தியில் மக்கள் தம் பொருளையும் தம்மையும் அழித்துக் கொள்கிருர்கள்.

'ஜூனியர் விகடன்' என்றஒரு பிரபல வாரஏட்டின்27-3-85 இதழில் வெளிவந்த போலிச் சாமியார் பற்றிய குறிப்பை அப்படியே கீழே தந்திருக்கிறேன்.

சாமியார் பெயர் யோகீஸ்வரன்.

இவர் (ரிஷி) 'மூலம்' முழுவதும் இன்னும் வெளிவர வில்லை. ஆனலும இதுவரையிலான விசாரணையில் 'மோசடி' களை நிறையச் செய்திருப்பதாகத் தெரிகிறது.

Koviloor Digital Library

நாற்பத்தைந்து வயதான யோகீஸ்வரனுக்கு இரண்டு மனைவிகள். முதல் மனைவி எம். ஏ. முடித்து ஐ. ஏ. எஸ். எழுதி ஃபெயிலானவர்.

இரண்டாவது மனைவி இவர் வீட்டு வேலைக்கு வந்து போய்க் கொண்டிருந்த பெண்ணான சரஸ்வதி என்பவர்.

முதல் மனைவியைப் பிரிந்து சரஸ்வதியுடன் தனியாக இருந்த யோகீஸ்வரனிடம் ஒரு நாள் ''ஏங்க உங்க மூத்தவ வீட்டுக்கு மட்டும் போய் நிறைய பணம் கொடுக்கிறீர்களே... ஒரு தடவையாவது எனக்குத் தரக் கூடாதா?'' என்று சரஸ்வதி கேட்டதும் யோகீஸ்வரன், ''சரி கொண்டாறேன்.... ஆனா ஒரு இரண்டு மாசம் நீ உங்க ஊரிலே போய் இரு....நான் பணத்தோட உன்னை வந்து பாக்கறேன்...'' என்று சொல்லி சரஸ்வதியைத் திண்டிவனத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு அடையாறில் ஒரு வீடு எடுத்துத் தனியாகத் தங்கினார்.

தன் வீட்டிலிருந்து சதா மணி ஓசை கேட்கவும், சாம்பிராணி, புகை வரும்படியும் 'செட்டப்" செய்தார்.

தொடர்ந்து ஒரு வாரம் இந்த 'செட்டப்' நடந்தது! எட்டாவது நாள் அத்தெருவிலிருந்து சிலர் யோகீஸ்வரன் வீட்டிற்குள் எட்டிப் பார்க்க ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு மெய் சிலிர்த்தது! உள்ளே...

பக்திப் பழமாக காட்சி தந்தார் யோகீஸ்வரன். எட்டிப பார்த்தவர்களை உள்ளே அழைத்தார். 'தீர்த்தம்' விபூதி என்று கொடுத்துத் தன்னை ஒரு நாடி ஜோசியர் என்று கூறிக் கொண்டார்.

நாடி ஜோசியரைப் பற்றி அத்தெருவிலுள்ளோர் பரவலாகப் பேச ஆரம்பித்து விட்டனர்.

இச்சமயத்தில் தன் முதல் மனைவி சர்வேஸ்வரியை அழைத்து வந்து விட்டார்.

சர்வேஸ்வரி அத்தெருவிலிருக்கும் எல்லா வீடுகளுக்கும் சென்று சகஜமாகப் பழகினார்.

குறிப்பாகப் பக்கத்து வீட்டிலிருக்கும் லட்சுமி என்பவருடன் அதிகமாகப் பழகினார்.

Koviloor Digital Library

லட்சுமி நாற்பது வயதான விதவைப் பெண்மணி இவருக்குப் பதினான்கு வயதான மகன் இருக்கிறான்.

ஒருநாள் லட்சுமி தன் மகன் மணியுடன் யோகீஸ்வரன் வீட்டிற்கு வந்தார்.

தியானத்திலிருந்த யோகீஸ்வரன் மெல்ல கண் விழித்து, சிறுவன் மணியை அருகே அழைத்தார், வந்த மணியின் தலையில் கையை வைத்து ஏதோ முணுமுணுத்தபடி லட்சுமியிடம் ''அம்மா....உன் குழந்தைக்கு மரண தோஷம் இருக்கிறது. அவனுக்கு ஆயுள் இன்னும்ஆறே மாதங்கள் தான்...'' என்று டக்கென்று சொல்லிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார் யோகீஸ்வரன்.

இதைக் கேட்ட லட்சுமி அரண்டுபோய் ''ஏங்க... பரிகாரம் ஏதும் கிடையாதா? என்று அழுதபடி கேட்க, ''உண்டே...பெரிய பூஜை ஒன்று செய்ய வேண்டும். அதற்கு வெள்ளி, தங்க நகைகளும் பணமும் தேவைப்படும்.... என்று யோகீஸ்வரன் சொல்ல லட்சுமி தன்னிடமிருந்த 32½ பவுன் தங்க நகை, 5கிலோ வெள்ளிப் பாத்திரம் 75 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை யோகீஸ்வரனிடம் ஒப்படைத்தார். மகன் உயிரைவிட இதெல்லாம் முக்கியமா?

பிறகென்ன? இரவு முழுவதும் பூஜை செய்தார். லட்சுமிக்கும் அவருடைய தாயாருக்கும் மயக்கமருந்துகலந்த தீர்த்தம் கொடுத்தார். மயங்கிய அவர்கள் விழித்துப்பார்க்கும்போது, மொதத்தம் ஒன்றரை லட்சரூபாய் மதிப்புள்ள நகை, பணத்துடன் யோகீஸ்வரன் கம்பி நீட்டி விட்டார்.

பிறகு லட்சுமி போலீஸில் புகார் கொடுக்க,ஏற்கெனவே சந்தேக கேஸ் ஃபைலில் இருந்த யோகீஸ்வரனைக் கண்டு பிடித்துக் கைது செய்தனர்.

இப்போது இவர் வீட்டிலிருந்தும் இவர் உறவினர் மற்றும் ஒரு மார்வாடி வீட்டிலிருந்து மாக சுமார் இருபது ஐம்பொன், வெண்கலச் சிலைகளை போலீஸார் கைப்பற்றியிருக்கிறார்கள்.

இவ்வளவு சிலைகளை எங்கிருந்து 'வரவழைத்தார்' என்பது பற்றிதீவிர விசாரணை நடந்து வருகிறது.

Koviloor Digital Library

இப்படிப்பட்ட சாமியார்கள் பொருள் சம்பாதிப்பதற்காக இப்படித் 'தாமே கடவுள்' என்று சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள். இதுதவிர சாமியார்களில் இன்னொரு ரகம் உண்டு. அவர்கள் பிச்சை எடுப்பதில்லை. இப்படிப்போலி வேடமும் போடவேண்டியதில்லை. அவர்கள் ஏதோ ஒரு 'சமயம்'—சைவம், வைணவம், சமணம், பௌத்தம் என்ற பெயரைக் கொண்ட சமயத்தைச் சார்ந்ததாகச் சொல்லிக் கொள்வார்கள். உண்மையில் அந்தச்சமயக் கருத்துக்களுக்கும் அவர்கள் நடைஉடை பாவனைகளுக்கும் சம்பந்தம் இருக்காது. ஏற்கனவே இந்தச் சமயங்களைச் சார்ந்த மடங்கள் அல்லது ஆலயங்களில் முற்காலத்தில் சமயம் சார்ந்த சாமியார்கள் சமயக் கொள்கை பரப்ப வேண்டி பொருள் ஈட்டிச் சொத்து சேர்த்து வைத்திருப்பார்கள். இவர்கள் அந்த மடாலயங்களுக்கு வழிததோன்றல்களாகவோ, இல்லை தேர்வு முறைப்படியோ சாமியார் ஆனவர்கள். இவர்கள் சொல்லுவார்களாம் பரமன் என்றுபேசுவதும் உயிர்கள் என்று பேசுவதும் கற்பனை. எல்லாம் வல்ல சிவம் அல்லது இறைவனே ஆக அந்தச் 'சிவமே' நாம்தான். நாம ஒரு காரணத்தால் இங்கு இந்த சமய அமைப்பின் தலைவராகப் பிறநதிருக்கிறோம். அதன் காரணமாகவே பலலட்சக் கணககால சொத்துக்களை உடைய இந்த சமய ஆதின கர்த்தரானோம்'' என்று பொங்கி வழிவார்கள். ''எல்லாம் சிவமயம்!'' என்ற தத்துவத்தை நன்கு உணர்ந்தது போல் பொதுமக்கள் மத்தியில் கதைப்பார்கள். சமய நூல்களைக் கற்றுதெரிந்து அதன் சாரத்தைச் சொல்வார்களேயன்றி, எள்ளளவும் அதைப் பின்பற்ற மாட்டார்கள். அப்படிப் பட்ட போலிச் சமயவாதிகளையும் பொதுமக்களே கண்டு கொள்ளுங்கள்.

இறைவனுடைய செயல் காரணத்தால் ஏற்படுவதன்று, அது காரியத்தால் செயல் படுவது.

அதன் பொருள் என்ன? சூரியன் தரும் சூரியப் பிரகாசம் காரியம். சந்திரப் பிரகாசம் காரிய காரணம். அக்கினி காரணம். அதாவது கடவுள் காரியம் சூரியப் பிரகாசம். சூரியனுடைய ஒளிமூலம் பிரகாசம் பெறும் சந்திரன் காரிய காரணன். அக்கினியாகிய உஷ்ணம் 'காரணம்' என்பதாகும். உஷ்ணம் காரணமாகவே உயிர்கள் ஜீவிக்கின்றன அல்லவா? ஆகக் கடவுள் மயமாக இருப்பவர்கள் தங்களை இன்ன காரணத்திற்காகப் பிறவி எடுத்தோம் என்று சொல்ல

Koviloor Digital Library

மாட்டார்கள். ஆனால் இந்தப் போலி மதவாதிகள் தங்கள் பிறவிக்குக் காரணம் கற்பிப்பார்கள். அவர்களிடம் தயவு செய்து எச்சரிக்கையாக இருங்கள் என்பதை கீழ்வரும் அருட்பா தெளிவிக்கிறது:—

பரம் அதனோடு உலகு உயிர்கள் கற்பனையே எல்லாம்
பகர் சிவமே என உணர்ந்தோம் ஆதலினால் நாமே
பிரமம் எனப் பிறர்க்கு உரைத்துப் பொங்கி வழிந்து ஆங்கே
பேசுகின்ற பெரியவர்தம் பெரியமதம் பிடியேல்
உரம் மிகு உலகு உயிர்கள் பரம் இவை காரியத்தால்
உள்ளனவே காரணத்தால் உள்ளன இல்லனவே
தரம் மிகு பேர் அருள் ஒளியால் சிவமயமே எல்லாம்
தாம் எனவே உணர்வது சன்மார்க்க நெறி பிடியே.

வள்ளற் பெருமானார் சமயப் போலிப் பிரம்மங்களை 'பெரியவர்கள்' என்று கேலி செய்கிறார். அவர்களுடைய போலி பிரம்ம தத்துவத்தைப் 'பெரிய மதம்' என்று நாசூக்காக நிந்தித்து விட்டு நம்மைப்பார்த்து 'அந்தப் பெரியமதம் பிடியேல்' என்றும் சொல்லுகிறார்.

அப்படியானால் பிரமம் என்றால் என்ன? சிவம் என்றால் என்ன? இந்த இரு நிலைகளுக்குள்ளும் பேதம் உண்டா? இந்தக் கேள்விகளுக்கு எல்லாம் சன்மார்க்க நிலை சார்ந்து தெரிந்தாலன்றி விளக்க முடியாது. இறை அனுபவம் விளங்கினால 'எல்லாம் சிவமயம்' என்ற தத்துவம் என்றும் மாறாதது என்பதை அறியலாம். அதுமட்டுமல்ல. அது அல்லாததாகவும் விளங்குகின்ற தனிப் பொருள். ஒப்புயர்வற்ற ஒரு பொது உண்மையே சிவம். அந்தச் சிவம் பிரம்மத்தின் முடியே. இந்தத் தத்துவ விளக்கத்தை திகழும் வேதங்களும் ஆகமங்களும் சொல்லுகின்றன. ஏ தோழி! நீ பிரம நிலை சிவ நிலை இரண்டிற்கும் பேதம் உண்டோ? எனவும் அதன் தன்மையை விளக்கும் படியும் கேட்டாய். இந்த உண்மையை வலியுறுத்திக் கூறும் வேத ஆகம விளக்கங்களை அறிவாயாக!" என்று கூறுகிறார். இந்தக் கருத்துடைய பாடல்:

பிரமம் என்றும் சிவம் என்றும் பேசுகின்ற நிலைதான்
பெருநிலையே இந்நிலையில் பேதம் உண்டோ எனவே
தரமறிய வினவுகின்றாய் தோழி! இது கேள்! நீ
சமரச சன்மார்க்க நிலை சார்தி எனில் அறிவாய்

Koviloor Digital Library

திரமுற ஆயினும் எல்லா ஆகி அல்லாதாகும்
திருவருளாம் வெளி விளங்க வீங்கு தனிப் பொருளாம்
சிரம் உறும் ஓர் பொது உண்மைச் சிவம் பிரம முடியே
திகழ் மறை ஆகமம் புகலும் திறன் இது கண்டு அறியே!

தரம்—தராதரம், தன்மை; சார்தி—சார்தல், பின்பற்றுதல்; திரமுற -மாற்ற முடியாத உறுதியுற, வெளி—அனுபவம், சிரம் உறும்—உயர்வுறும், மறை—வேதம்; புகலும்—செல்லும்.

பிரம்மம் என்பது இறைவனைத் துதிக்கின்ற நல்லடியார் அல்லது நல்ல தொண்டர்களைக் குறிக்கும். சிவம் அதாவது சர்வமங்கலமாகிய ஈசன் அவர்களுடைய ஞானமாகிய முடியே. இங்கு தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே என்ற ஔவையார் வாக்கும் நாம் அறிந்ததே. இறைவன் என்ற நிலை அப்போது பெரிதாகப் பேசப்படவில்லை. இங்கே ஔவையார் 'தொண்டர் பெருமையைப் பெரிது என்று கூறுகிறார். இதிலிருந்து என்ன தெரிகிறது? இறைவன் தொண்டர்களைப் பெரிதாக மதிக்கிறான். தொண்டர்கள் இறைவனைப் பெரிதாகப் போற்றுகிறார்கள். ஆக இது எல்லாம் ஆகியும் அல்லாததும் ஆகும் என்ற அடிகளையும் பொருள் தர விளக்குவதாகும்.

சன்மார்க்க நிலையில் "நானுனன் தானுனன் நானும், தானும் ஆனுன்" என்று பேசப்படும். அதாவது "கடவுள் நிலை அறிந்து அம்மயம் ஆதல்!" என்கிற சன்மார்க்கக் கொள்கைகளில் ஒன்று அந்நிலை.

இதைப் புராணக் கதை ஒன்றின் மூலம் நன்கு அறியலாம்.

ஒரு காலத்தில் நாரத மகரிஷி விஷ்ணு பகவானிடம் வந்தார். அப்போது நான் பூஜை செய்யப் போகிறேன் என்று விஷ்ணு சொன்னதும் நாரதரும் விஷ்ணு பூஜைக்குரிய பொருள்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்று விரும்பிக் கேட்டார். மகாவிஷ்ணுவும் நாரத முனிவரை ஓர் இடத்திற்கு அழைத்துக் கொண்டு போனார். அந்த இடத்தில்

Koviloor Digital Library

நவரத்தினங்கள் பதிக்கப் பெற்ற ஒரு பெரிய தமிகச் சம்பூகம், அதாவது பெட்டகம் இருந்தது. அந்தப் பெட்டகத்தைத் திறந்தார். அதற்குள் ஒரு தந்தப் பேழை இருந்தது. அந்தப் பேழையைத் திறந்தார். அதற்குள் மரகதமும் வைரமும் ஜ்வலிக்கப் பொருந்திய ஸ்படிகச் சிமிழ் காணப்பட்டது. அநதச் சிமிழைத் திறந்ததும் அதற்குள் ஒரு பளபளக்கும் தொட்டால் மிருதுவான பட்டுப பை ஒன்று இருந்தது. அந்தப் பட்டுப்பைக்குள் சிறு ஜரிகைத் துப்பட்டியினுல் போடப்பட்ட முடிச்சு இருந்தது. அந்த முடிச்சு நன்கு இறுக்கமாகப் போடப்பட்டிருந்தது.

நாரதர் அதைக் கையில் எடுத்து முடிச்சை அவிழ்க்க முனைந்தார். அதில் முடிச்சுகளுக்கு மேல் முடிச்சாகப் பன்னிப் பன்னி முடியப் பட்டதைப் பார்த்து பெருமானிடம் கேட்டார்: "சுவாமி இதென்ன முடிச்சு? இப்படிப் பின்னப் பின்ன முடியப் பட்டிருக்கிறது?"

"இந்த முடிக்சை நான் தான் அவிழ்க்க முடியும். உன் போன்ருேர் எல்லாம் அவிழ்க்க முடியாதப்பா!"

'முடிச்சு அவிழ்ப்பது' என்ருல் வினையைப் போக்குவது, என்று பொருள். இதே கருததில் தான் பிரம்ம முடிச்சு என்று பேசுவார்கள். அந்த முடிச்சை அவிழ்க்கப் பிரம்மனுலும் முடியாது. ஆகவே அந்தப் பட்டு முடிச்சைப் பகவான் அவிழ்த்துக் காண்பித்தார். அதற்குள் ஒரே தூசியும் மண்ணுமாக இருந்தன.

"என்ன சுவாமி? நான் உங்களிடம் நீங்கள் பூஜை செய்யும் கருவிகளைக் காட்டுங்கள் என்று ஆர்வமாகக் கேட்டேன். நீங்களோ வெறும் தூசியையும் மண்ணையும் கட்டி வைத்துள்ள சிறு பொட்டலத்தை அவிழ்த்துக் காண்பிக்கிறீர்களே?" என்று மிகவும் ஆச்சர்யத்தோடு நாரத முனிவர் வினவினுர்.

"நாரதா! உனக்கு நன்கு தெரியுமே? சதா என்னையே நினைத்து, எனக்காகவே வாழ்ந்து, என்னைத்தவிர இந்த உலகததில் தங்களுக்கு எதுவுமே தேவை இல்லை என்று நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கிற என் அடியவர்கள், பாகவதப் பெருமக்கள் உண்டே. அவர்கள் வீதியிலேயும் வீட்டிலேயும் ஆடிப் பாடிக் கொண்டே இருககிருர்கள். அவர்களைப் போய் நேரில் சந்தித்து வணங்குவது என்பதற்கு எனக்குத்

Koviloor Digital Library

தகுதி போதாது. ஆகையினால் அவர்கள் பாதம்—திருவடிகளில் பட்ட தூசியையும் மணலையும் எடுத்து வைத்துப் பொட்டலமாகப் போட்டுப் பூஜித்துக்கொண்டு வருகிறேன்." என்றுகூறி பெருமான் தன் பக்தர்கள் அடியார்கள் தான் தன்னிலும் பெரியவர்கள் என்பதை வலியுறுத்தும் பொருட்டே நாரத மகரிஷிக்கு உணர்த்துகிறான்.

அப்போது நாரதர் சொன்னார் "ஆண்டவரே! நானும் தான் தங்கள் அடியவன். சதா தங்கள் நாமாக்களைத் துதித்தபடி இருக்கிறேன். அப்படியானால் நானும் உங்களைவிடப் பெரியவனா?" என்று கேட்டார்.

"நாரதா! இந்தப் பொட்டலத்தில் உன் காலடி மண்ணும் கலந்திருக்கிறது" என்றார் பெருமான்.

பரமனுடைய பக்தர்கள், நாமாவளிகளைப் பாடும் பாகவதப் பெருமக்களை உபசாரம் செய்வதே பகவத் ப்ரீதி. அந்த ஈஸ்வரத் தொண்டர்களுக்குச் செய்யப்படும் உபசாரத்தைப் பார்த்துத்தான் பகவான் நம்மை ஏற்றுக் கொள்கிறான். பட்டினத்தாரிடம் உபதேசம் பெற்ற பத்ரகிரியாருக்குத் தான் முதலிலே பரமபதம் கிடைக்கிறது. அதற்குப் பின்பு தானே பட்டினத்தார் பெறுகிறார்?

இதைப்பற்றி பத்ராசல ராமதாஸர் சொல்லுகிறார். "பக்தர்களைப், பாகவதப் பெருமக்களை வீட்டிற்குஅழைத்துக் கொண்டு வந்து அவர்களுடையதிருவடிகளை அலம்பி அந்தத் தீர்த்தத்தைக் கொண்டு, அதிலும் இரண்டே துளிகள், புரோட்சனம் செய்தவனுக்குக் கங்கைக்குப் போய் ஸ்நானம் பண்ண வேண்டிய அவசியம் இல்லை." கங்கா ஸ்நான புண்ணியம் இங்கேயே இப்படிக் கிடைக்கும் என்று பொருள்படப் பாடியிருக்கிறார்.

இதை இராமலிங்கப் பெருமானார் இன்னும் வெகு அழகாக ஒரு பாடலில் சொல்லுகிறார்.

முத்தேவர்கள் என்று சொல்லப்படும் பிரம்மா விஷ்ணு ருத்ரர்கள் தங்களுடைய தலையிலே மலர் சூடியிருக்கிறார்கள். அந்த மலர் எந்த மலர் தெரியுமா? சிவபெருமானுடைய அருள் சக்தியாகிய சிவகாமி இருக்கிறாளே. அவள், தன் தலையிலே சூடியிருக்கிற பூவிலே வண்டுகள் மொய்க்கின்றனவே அந்தப் பூக்களா? இல்லை. அவளோடு சேர்ந்து

Koviloor Digital Library

அழகிய மன்றிலே ஆடும் சிவபெருமானுடைய திருவுருவைப் பார்த்த பரம பக்தர்களுடைய மூச்சுக்காற்றுப்பட்ட பூக்கள், அல்லது அவருடைய திருப்பாத தூளிபட்ட அழகு மலர்கள் தான் மூவரும் தலையிலே அணிந்திருக்கிறார்கள். அந்த உன் அடியவருடைய பண்பு மிகுந்த அடிப் பெருமையைப் பற்றிச் சொல்ல வேண்டி வேதங்கள் எல்லாம் முயன்றன. அவர்களைச் சொல்ல முடியாமல் அவை வெட்கப்பட்டு வான் உலகப் பெயர்ந்து உலர்ந்து வெளுத்துப் போயின. அதுதான் போகட்டும். அந்த வேதங்களுக்கெல்லாம் வியந்து வியாக்கியானம் செய்கிறவர்கள்—அதை எடுத்து ஓதுகின்ற அந்தணர்கள் உண்டே, அவர்களும் அடியார் பெருமையைப் பற்றி ஒருவாறு சொல்லி விடலாம் என்று முயன்றும் அவர்கள் முடியாது வெட்கிப் போனார்கள். அந்த வெட்கத்தால் அவருடைய உடம்பும் அந்தோ வெளுத்து விட்டதே! அந்தணருடைய வண்டவாளம் வெளுத்தது, என்று நாம் சொல் வழக்கில் சொல்லும் பாங்கிலே வள்ளற் பெருமான் பாடலில் சொல்லுகிறார்.

இங்கே சிவகாம வல்லியின் கூந்தலிலே சூடிய பூவைச் சுற்றுகிற வண்டுகள்—என்றும், கறுத்த வண்டு நிறம் போன்ற அழகிய பூங்குழல் என்றும் பொருள் கூறலாம். இறையடியார்களுடைய ஞானக் கண்களைவண்டுகள் என்றும் அதுவே அம்மையின் பூப்பாதங்களையும், சுற்றுவது போல அவள் அணிந்த மலர்களையும் சுற்றுகின்றன என்றும் கூறலாம். பாடல் இதோ.

''வண்டணிபூங்குழல் அம்மை எங்கள் சிவகாம
வல்லியொடு மணிமன்றில் வயங்கிய நின்வடிவம்
கண்டவரைக் கண்டவர் தம் கால் மலர் முத்தேவர்
கன முடிக்கே முடிக்கின்ற கடிமலராம் என்றால்
பண்தகு நின் திருத்தொண்டர் அடிப் பெருமை எவரே
பகர்ந்திடுவர் மறைகள் எலாம் பகர்ந்திடும்வான் புகுந்தே
விண்டுலர்ந்து வெளுத்தது அவைவெளுத்த மட்டோ அவற்றை
வியந்து ஓதும் அந்தணரும் வெளுத்தனர்உள்உடம்பே

திருவருட்பா - ஆறாம் திருமுறை—126ஆம் பதிகம் திருத்தொண்டர் அடிப்பெருமை)

Koviloor Digital Library

பிரம்ம முடிச்சைப் பற்றிய புராண வரலாறு தெரிந்து கொண்டீர்கள். இப்போது அந்த சகுண நிர்குண பிரம்மத்தைப் பற்றி, பிரம்ம சூத்திரம், வேதம், கீதை, தைத்ரீய உபநிஷத்து, பிருகுதாரண்ய உபநிஷத்து, சாந்தோக்யஉபநிஷத்து கடோபநிஷத்து ஆகிய இவை கூறும் விளக்கங்களையும் படித்து மகிழ்க.

பிரம்ம சூத்திரத்தில் ஆரம்பத்திலேயே பிரம்மம் என்பதற்கு "ஜந்மாத் யஸ்யயத" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. எதிலிருந்து சிருஷ்டி, ஸ்திதி, அழிவு உண்டாகின்றனவோ அது பிரம்மம்" என்பது இதன் பொருள்.

வேதம்: வேதத்தில் வரும் புருஷ சூக்தத்தில் பரம புருஷனை ஆயிரம் தலைகள் உள்ளவனாகவும் ஆயிரம் கண்கள் உள்ளவனாகவும், ஆயிரம் கால்கள் உள்ளவனாகவும் பிரபஞ்சம் முழுவதுமே பத்து விரல்களால் அளந்து விடுகிறான் என்றும் குறித்திருப்பது, அவன் ஸர்வ வியாபி, அவன் ஸர்வ சக்திமான் என்ற குணங்களை எடுத்துக்காட்டவே தான் என்றும் கொள்ளலாம்,

கீதை: பகவத் கீதையில் ஏழாம் அத்தியாயம் கூறுகிறது. கீழ்ப் பிரகிருதியாய், பஞ்ச பூதங்களாலும் அந்தக் கரணத்துடன் கூடிய வஸ்துக்களை சிருஷ்டி செய்து, மேலான பிரகிருதியாய் அதனுள் பிரவேசித்து எல்லா ஜடப் பொருள்களையும் சேதனம் ஆக்குகிறது.

தைத்திரீய உபநிஷத்து (2—6) இதில் கூறியபடி "நான் பலவாக ஆவேன் என்று 'அது' விரும்பியது. தவம் செய்தது. இவை எல்லாவற்றையும் சிருஷ்டி செய்தது. சிருஷ்டி செய்து அதனுள் பிரவேசித்தது. காண்பதும், காணப்படாததும், தெளிவாக இருப்பதும் தெளிவற்றதும், அறிவாயும், அறியாமையாயும், மெய்யாயும், பொய்யாயும் உலகில் உள்ள பொருள்களில் எல்லாமே ஆயிற்று. இருப்பன எல்லாமே ஆயிற்று.

பிருகு தாரண்ய உபநிஷத்து (2—12) பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது— "சமுத்திரத்தில் உப்புக் கட்டியைப் போட்டால் எப்படிக் கரைந்து விடுமோ, அதுபோல் பிரம்மம் உலகில் புகுந்து விட்ட பிறகு, உலகத்தோடு ஒன்றாய்க் கலந்து விட்டபடியால் அதை அறிவது சாத்தியமாவதில்லை. ஆனால் எப்படி சமுத்திரத்தின் ஜலத்தில்

Koviloor Digital Library

எல்லாத் துளிகளிலும் உப்பு இருக்கிறது என்று அறிகிறோமோ அதுபோலவே பிரம்மத்தையும் எல்லா உலகப் பொருள்களிலும் உள்ள சைதன்யம் (இயங்கும் சக்தி) என்று அறியமுடியும்'' என்று சொல்லியிருக்கிறது. பிரம்மம் அந்தர்யாமியாக இருப்பதை (3-7-3)யும் விளக்குகிறது.

சாந்தோக்ய உபநிஷத்து (3-14-1) ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாநிதி சாந்த உபா ஸீத—அதாவது''இந்தப் பிரபஞ்சம் முழுவதும் பிரம்மர்தான். எதனால் உண்டாகின்றனவோ எதில் புகுந்து மறைகின்றனவோ, எதனால் தாங்கப் படுகின்றனவோ என்று மன அமைதியுடன் உபாசியுங்கள்.''

கடோபநிஷத்து கூறுகிறது ''ஓங்கிய வஜ்ராயுதம் போன்ற இந்தப் பிரம்மத்தின் ஆட்சிக்கு முற்றிலும் பயந்தும் கட்டுப்பட்டும் அனைத்தும் இயங்குகிறது அதனிடம் கொண்ட பயத்தினால்தான் தீ எரிகிறது சூரியன் காய்கிறான் இந்திரன் மழை பொழிவதும், காற்று வீசுவதும், யமன் உயிர்களின் மேல் தாவுதலும் நிகழ்கின்றன.

பிரம்மத்தைப் பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொல்லுகிறார்:

''நிர்க்குணப் பிரம்மம் எல்லையற்ற சமுத்திரம். சகுணப் பிரம்மம். அதில் மிதக்கும் பெரிய பெரிய பனிக்கட்டிகள் போலாகும். நல்ல உஷ்ணத்தால் பனிக்கட்டிகள் உருகி, சமுத்திர ஜலத்துடன் கலந்து விடுகின்றன. நல்ல குளிரினால் மீண்டும் தண்ணீர் கெட்டியாகிப் பனிக்கட்டிகளாக மாறி விடுகிறது. அதுபோல் ஆழ்ந்த பக்தியால் நிர்க்குணப் பிரம்மம் நாமரூபத்தோடு சகுணப் பிரம்மமாக மாறிக் கொள்கிறது. பிறகு ஞானம் என்ற தீயினால் மறுபடியும் உருகி நிர்க்குணமாக மாறிவிடுகிறது.

பிரம்மத்தின் உண்மையை அறியாமல் வெறும் நாமரூபத்தையே நினைப்பது முழு உண்மையை அறிந்ததாக ஆகாது. ஆனால் பிரம்மத்தை எல்லா இடங்களிலும், எல்லாப் பொருள்களிலும் அறிந்து சமாதியிலும் அறிவது தான் விஞ்ஞானம். அதாவது விசேஷ ஞானம். அதுவே மிகுந்த உயர்ந்தநிலை.

விஞ்ஞானத்தோடு கூடிய ஜீவன் முக்தர்களே சிறந்த பக்தர்களாக வாழ்ந்து உலக சேவையில் ஈடுபட்டு நன்மை பொழிந்து மக்களுக்கு நல்வழி புகட்டுகிறார்கள்,

Koviloor Digital Library

2- சாதியும் மதமும்

திருவருள் பிரகாச வள்ளலார் அருட் பெருஞ் ஜோதி அகவலிலே "சாதியும் மதமும் பொய் என எனக்கு. ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் ஜோதி!" என்று கூறுகிறார்.

இந்தச் சாதி மத ஆச்சாரங்கள், சாத்திரச் சந்தடிகளி எல்லாம் இன்று நேற்றல்ல, ஆதியிலே புராண காலத்தி லேயே ஏன் இதிகாச காலத்திலேயே இருந்திருக்கிறது. இதிலே அபிமானம் கொண்டு நீர் அலேவது வீணே. அப்படி அலேவது அழகல்ல என்று பெருமான் பாடுகிறார்.

அதற்கேற்ப மகாபாரதத்தில் ஓர் உபகதை சொல்லப் படுகிறது. "மகாத்மா உதங்கர்" என்பவர் பற்றிய கதை அது. அவர் ஞானி. காடு மலே மற்றும் பெரும்பாலும் பாலே வனங்களிலே திரிகின்ற மகாத்மா. உதங்கர் பிராமணர். அவர் சாதி ஆச்சாரத்திலே இருந்த காரணத்தினுல் மெய்ப் பொருள் என்ற உண்மை நிலேயை உணர முடியாதுபோனுர். அதிலும் தேவர்கட்குரிய 'அமுதம்' தேடி வந்ததும், ஆச் சார சங்கற்ப விகற்பங்களால் அதை அருந்தி அனுபவிக்க முடியாது போயிற்று. இப்பொழுது கதைக்கு வருவோம்.

குருக்ஷேத்திரத்தில் கௌரவர்களுக்கும் பாண்டவர் களுக்கும் இடையே பாரத யுத்தம் நடந்தது. இதில் விஷ்ணு அவதார புருஷனுகிய கண்ணன் பாண்டவர்க்கு உறுதுணேயாக இருந்து பாரத யுத்தம் முடித்துக் கொடுத் தான். இதில் பாண்டவர் வெற்றி பெற்றதும் அவர்களிடம் ராஜ்ய பாரத்தை ஏற்று நடத்த நல்லருள் புரிந்தான் கண்ணன்.

அதன் பின்பு அவன் அஸ்தினுபுரத்திலிருந்து தனது நகராகிய துவாரகைக்கு இரதம் ஏறிப் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தான். போகும் வழியிலே மகாத்மா உதங்கர் என்ற பிராமண சிரேஷ்டரைக் கண்டார். அவரைப் பார்த்தவுடன், தேரை நிறுத்திஞன். அதிலிருந்து இறங்கி அவரை நமஸ்காரம் செய்து பூஜித்தான்.

"கண்ணு! பாண்டவர்கள் நலமா? கௌரவர்கள் நலம் தானே. அவர்கள் இருசாராருக்குள்ளும் இருக்கவேண்டிய

Koviloor Digital Library

சகோதர ஒற்றுமை சரியாக இருந்து வருகிறதா?'' என்று உதங்கர் கேட்டார்.

துறவு பூண்டிருந்த பிராமணருக்கு உலக நிகழ்ச்சிகள் ஒன்றுமே எட்டவில்லை. காரணம் அவர் பெரும்பாலும் வனாந்திரங்களிலேயே இறையருள் நாடித் தவம் இயற்றித் திரிந்தவர். எனவே இந்தக் கேள்வியைக் கேட்டார். முதலில் ஒரு சில நொடிகளில் திகைப்புக்கு ஆளான கண்ணன் என்ன சொல்லுவது என்று தோன்றாமல் ஸ்தம்பித்துப் போனான். பின்பு சொன்னான்: ''பெரியவரே! கௌரவருக்கும் பாண்டவர்களுக்கும் இடையே கோரமான யுத்தம் நடந்தது. சமாதானம் செய்ய நான் எவ்வளவோ முயன்றும் பயனற்றுப் போயிற்று. யுத்தத்தில் கௌரவர்கள் அனைவரும் மாண்டார்கள். ஊழில் பெருவலி யாது உண்டு?'' என்றான். இதைக் கேட்டதும் உதங்கர் கோபாவேசமானார். கண்கள் சிவக்க மாதவனைப் பார்த்துக் கேட்டார் ''அச்சுதா! நீ அருகில் இருந்துமா இந்த அவல நிலைக்குக் கௌரவர் ஆளாயினர்! அவர்களை நீ காப்பாற்றாது போனாயா? நீ மதுசூதனன். ஆகவே கபடநாடகம் ஆடி அந்தக் கௌரவ நாசத்தை ஏற்படுத்தி விட்டாய். நான் உனக்கு இதோ சாபம் தரப் போகிறேன்!" என்றார்.

அப்போது கிருஷ்ணன் குறுநகை செய்தவாறு உதங்கரைப் பார்த்து ''சாந்தம்! சாந்தம்!" என்று ஒருவாறு ஆசுவாசப் படுத்தி விட்டு மிகவும் அமைதியாக மேலே தொடர்ந்து பேசுகிறான்: ''உதங்கரே! நீர் மகா தபஸ்வி. நீர் உம் கோபத்தின் பயனால் சம்பாதித்த தவத்தை இழந்து போகக் கூடாது. முதலில் நான் சொல்லுவதை எல்லாம் சற்று ஊன்றிக் கவனத்தோடு கேளுங்கள். பிறகு வேண்டுமானால் என்னைச் சபியுங்கள்'' என்று சமாதானப் படுத்தினான். பிறகு அவருக்கு ஞானக்கண் கொடுத்துத் தன் விசுவரூபத்தைக் காட்டினான். ''இந்த உலகத்தைக் காக்கவும், தருமத்தை நிலைநிறுத்தவும் பல அவதாரங்கள் எடுத்து வருகிறேன். நான் எந்த அவதாரத்தை எடுக்கிறேனோ அந்த அவதாரத்தின் இயல்பை அனுசரிக்கிறேன். நான் யட்சனாகப் பிறந்தால், யட்ச இயல்பும், இராட்சசனாகப் பிறவி எடுத்தால் இராட்சசனாகவும், தேவஜாதியில் பிறப்பதாயின் தேவ இயல்பும், பெற்று அந்தந்த அவதாரத்திற்கு

Koviloor Digital Library

ஏற்ப நடந்து ஏற்ற காரியத்தை முடிப்பேன். ஞான சூன்யர் களான கௌரவர்களுக்குப் பலவாறு எடுத்துச்சொன்னேன். பாண்டவர்களோடு சிநேகமாக அவர்களுக்கு ஏதோ ஐந்து கிராமமாவது இல்லை ஐந்தடி நிலமாவது கொடுங்கள் என்றும் கெஞ்சினேன். அவர்கள் அகங்காரத்தால் மதிமயங்கி என்னுடைய வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. பிறகு பயமுறுத்திச் சொன்னேன். அதற்கும் இசையவில்லை. கோபத்தால் என் விஸ்வரூபத்தையும் அவர்களுக்குக் காட்டினேன் அத்தனையும் வீணாயிற்று. அவர்கள் அதர்மத்தைக் கடைப்பிடித்தார்கள். யுத்தத்தில் இறங்கி உயிரிழந்தனர். ஆகவே நீர் என் மீது கோபப்படும் அளவுக்கு நான் நடந்து கொள்ளவில்லை" என்றான். உதங்கர் சாந்தம் அடைந்தார். ஆகவே திருப்தியுற்ற கண்ணன் அவருக்கு ஒரு வரம் தருவதாகச் சொன்னான்: அதற்கு உதங்கர் சொன்னார்: "மாதவனே! நான் உன்னை இங்கு சந்தித்ததே பெரும் பாக்கியம். அதிலும் உன் விஸ்வரூப தரிசனம் பெற்றது போதாதா! எனக்கு எந்த வரமும் வேண்டாம்." என்றார்.

"நீர் அப்படிச் சொல்லாதீர். உமக்கு நான் வரம் ஏதாவது தந்து விட்டுப் போகவே நினைக்கிறேன்" என்று கண்ணன் வற்புறுத்தவே பாலைவனத்தில் திரிபவரும் ஆசை யற்றவருமான அவர் சொன்னார். "கண்ண பெருமானே! அவசியம் நீ எனக்கு ஏதேனும் கொடுக்க விரும்பினால் ஒரு வரம் தருக. அதாவது நான் எந்த இடத்திலும் எப்போ தாவது தண்ணீர் வேண்டினால் அது எனக்குக் கிடைக்கும்படி செய்க!"

"இவ்வளவு தானா?"

"போதும் பிரபுவே!"

"அப்படியே தந்தேன்" என்று கூறிவிட்டுக் கண்ணன் துவாரகைக்குப் போனான்.

பின்பு ஒரு நாள் உதங்கர் காட்டில் தண்ணீருக்காக அங்குமிங்கும் திரிந்தார். மாதவனையும் அவன் தந்த வரத்தைப் பற்றியும் நினைத்தார். அப்போது அவர்முன்பு ஒரு புலையன் தோன்றினான். அவன் கந்தை ஆடையைக் கட்டி இருந்தான். அதிலிருந்த கசடும் அழுக்கும் காண் போர் அவனை வெறுக்கும் அளவு இருந்தது. அவலட்சண மாக அழுக்குப் பிண்டமாக அவன் வந்தான். அவனைத் தொடர்ந்து ஐந்தாறு வேட்டை நாய்கள், கையில் வில்,

Koviloor Digital Library

தோள்மீது ஒரு தோல்பை. அதற்குள் தண்ணீர் இருந்தது. அவன் நடந்து வரும்போது தோல்பையில் நீர் அலைமோதும் சப்தம் 'சலக் சலக்' என்று கேட்டது வந்த புலையன் புன்னகைத்தான். பின்பு கேட்டான் "பெரியவரே! உமக்குத் தண்ணீர் தாகம் போல தெரிகிறதே. பாவம். உம்மைப் பார்க்க பரிதாபமாக இருக்கிறது. இந்தத் தண்ணீரைக் குடியும்" என்று தோல்பையை நீட்டினன்.

அந்தப் புலையனையும் அவன் தோற்றத்தையும் கண்டு அருவருப்பு அடைந்தார். தண்ணீரை 'வேண்டாம்' என்றார். பிறகு கண்ணனை மனதில் நினைத்து "இதுவா உன் வரத்தின் நேர்த்தி!" என்று வருந்தினர். பற்பல தடவை இதுசமயம் புலையன் உதங்கரை நீர் அருந்த வற்புறுத்தினன் பலமுறை தோல்பையைக் காட்டினன். அவர் "அட சீ!" போ அந்தப் பக்கம்!" என்று புலையனை விரட்டவே அவன் மறைந்தான்.

புலையன் இப்படி அந்தர்த்தானமானதைக்கண்டு உதங்கர் யோசித்தார். இது யார்? புலையன் அல்லன். ஏதோ சோதனைக்காக இந்த நிகழ்ச்சி! நான் பிழை செய்து விட்டேனே! வந்த ஜலத்தை அந்தோ வெறுத்தேனே!" என்று நொந்து கொண்டார். அப்போது கிருஷ்ணன் சங்கு சக்கரதாரியாக அவன் முன்பு தோன்றினன் அப்போது உதங்கர் அவனிடம் சொன்னர். "புருஷோத்தமனே! நீ என்னை இவ்வாறு சோதிக்கலாமா? புலையனுடைய தோற்பையில் உள்ள அசுத்த ஜலத்தையா பிராமணனாகிய எனக்குக் கொடுக்கச் செய்வது? இது தருமா?" என்று உதங்கர் பகவானைக் கேட்டார்.

கண்ணன் இதைக் கேட்டுச் சிரித்தான். பிறகு சொன்னன். "ஓய் உதங்கரே! உமக்காக நான் இந்திரனிடம் சொல்லி அமிர்தத்தை எடுத்து வரச் செய்தேன். அவன் 'மானிடனுக்குச் சாகா மருந்தாகிய அமிர்தம் கொடுக்க இயலாது. வேறு ஏதேனும் செய்யலாமே!" என்றான். நான் அவனை வற்புறுத்தவே அவன் அமிர்தம் கொணர ஒப்புக் கொண்டான். 'சரி அப்படியே செய்கிறேன். ஜல ரூபமாக அமிர்தத்தைக் கொண்டு போகிறேன். ஆனால் நான் சண்டாள வேஷத்தில்தான் செல்வேன். அவர் ஒப்புக் கொண்டால் சரி!" என்றான். "நீர் ஞானியாயிற்றே! புலையனுடைய வேஷத்தைக் கண்டு வெறுக்க மாட்டீர். ஞானிக்கு சாதி ஆசாரம் சமயாச்சாரம் ஏது? என்று நம்பி நான் அவ்வாறு செய்யச் சொன்னேன், ஆனால்

Koviloor Digital Library

நீர் இப்படி நடந்து கொண்டதன் காரணமாக இந்திரனிடம் நான் தோற்றேன்!" என்று கண்ணன் சொல்லி மறைந்தான். "ஐயோ! வருணாசிரபம் என் கண்ணை மறைத்து விட்டதே. மரணமிலாப் பெருவாழ்வு தர மாதவன் அமிர்தத்தை அமரர் தலைவனாகிய இந்திரனையே எடுத்துக் கொண்டுவந்துதரும்படி அனுக்கிரகம் செய்தார். நானோ புறத்தோற்றத்தில் உண்மை புரியாது அமிர்தத்தை இழந்தேனே:" என்று வருந்தினார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஞானிகளும் கூட ஆதியிலே சாதியிலே அபிமானித்திருந்தனர். அதனால் பெரிய ஆன்ம லாபமாகிய 'மரணமிலாப் பெருவாழ்வு' அந்த மகான்களுக்கும் கிடைக்கவில்லை என்பதை இந்த மகாபாரதக் கதை உணர்த்துகிறது, இதை வள்ளற் பெருமானின், கீழ்க் காணும் இருபாடல்கள் நமக்கு நன்கு உணர்த்துவதைப்பாரீர்.

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித்து அலைகின்ற உலகீர்
அலைந்து அலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே
நீதியிலே சன்மார்க்க நிலைதனிலே ஞான
நிருத்தமிடும் தனித்தலைவர் ஒருத்தர் அவர்தாமே
வீதியிலே அருள் ஜோதி விளையாடல் புரிய
மேவுகின்ற தருணம் இது, கூவுகின்றேன் உமையே!
'நால் வருணம் ஆச்சிரமம் ஆச்சாரம் முதலாம்
நவின்ற கலைச் சரிதம் எலாம் பிள்ளை விளையாட்டே
மேல் வருணம் தோல் வருணம் கண்டு அறிவார் இலை நீ
விழித்துப் பார்!' எனறெனக்கு விளம்பிய சற்குருவே
கால் வருணம் கலையாதே வீணில் அலையாதே
காண்பன எல்லாம் எனக்குக் காட்டிய மெய்ப் பொருளே
மால் வருணம் கடந்த வரை மேல் வருணத்து ஏற்ற
வயங்கு நடத்து அரசே என் மாலை அணிந்துஅருளே.

[நிருத்தம்-நடனம், தனித்தலைவர்-ஒப்பற்ற தலைவர். நவின்ற-சொன்ன, மேல் வருணம- உயர்ந்த ஜாதிக்காரர்கள் தோல் வருணம்-சாதி மத பேதம் மற்றும் கறுப்பர் வெள்ளையர் என்ற இன பேதம், கால் வருணம் -கால் வண்ணம் ,மால்-மயக்கம் தரும், வருணம் -சாதிபேதங்கள்,வயங்கு- விளங்கும்]

வைஷ்ணவ மதமும் இந்து மதமும் வெவ்வேறு கொள்கையுடையன. இதில் தீவிர வைஷ்ணவர்கள் 'அரிசி' என்று

Koviloor Digital Library

சொல்ல மாட்டார்கள்- இந்தப் பதத்தில் 'சி. என்ற சிவனுடைய நாமத்தின் முதல் எழுத்து வந்ததால் அதை அமுது என்றே அழைப்பர். இதுபோல வீர சைவர்கள் வைஷ்ணவக் கோயில்களுக்குச் செல்லமாட்டார்கள். இப்படி மத வெறி பிடித்து இருக்கிறார்கள். அது ஏன்? இந்து முஸ்லிம் கலவரம் ஒன்றா இரண்டா? இப்படி மதவேறுபாடு கூடாது என்பதற்காகவே "துலுக்க நாச்சியார்!" என்ற முகமதிய மாது ஒருத்தியை ஸ்ரீரங்க நாதர் திருமணம் செய்து கொண்டதாகப் புராணம். பெரும்பாலும் திருப்பதி போன்ற விஷ்ணு ஆலயங்களிலே பக்தர்கள் மொட்டை அடித்துக் கொள்ளும் காரணம் என்ன தெரியுமா?

துலுக்கநாச்சியாராகிய தேவி தன் உறவினரைக் காண எண்ணினாள். அதற்கு விஷ்ணு "நீ அவர்களைத் தேடிப்போக வேண்டாம். அவர்கள் இங்கு வரட்டும். மேலும் உன் உறவினரை என் பக்தர்கள் மறக்கவில்லை என்பதோடு ஒக்க ஒன்றாகவே மதிப்பர் என்பதற்கு அடையாளமாக என்சந்நிதியில் வந்து மொட்டை போடுவார்கள்!" என்றும் கூறியதாகச் சொல்லுவார்கள். இன்றும் சின்னக் காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் எழுந்தருளிப் பெரிய காஞ்சி வந்ததும் அங்குள்ள ஒருபழைய பள்ளி வாசலுக்குப் பிரசாதம் அனுப்பப்படுகிறது. பள்ளிவாசலிலிருந்து பிரதியாக அங்கிருந்து மாலை மரியாதை செய்து மாதவனை வரவேற்கிறார்களாம். இப்படிச் சமரசம் கண்ட மதங்களிலும் வேற்றுமை இருந்தது பற்றி ஒரு சம்பவத்தை இங்கு சொல்கிறேன்.

கிருஷ்ணானந்தர் என்பவர் சிவமதஸ்தர், ஆதிசங்கரர் பரம்பரையில் வந்தவர். இவர் காஞ்சி மடத்து அதிபதி. இவருக்குப் பிறகு மடாதிபதி ஆனவர் அனந்தானந்தர். இவர் தன்னை நாடி வருபவருக்கு அத்வைதப் பிரச்சாரம் செய்து வந்தார். இவருடைய பெருமைகளை தீவிர வைணவரான போகரிதாஸர் கேள்விப்பட்டார். ஆகவே அனந்தானந்தரைச் சந்திக்க ஒருநாள் காசிக்கு வந்தார்.

அனந்தானந்தர் கழுத்தில் ருத்திராட்சமாலை. நெற்றியில் திருநீறு. இவற்றைக் கண்ட போகரிதாசர் "நாமோ வைணவ மதம். இவரோ சைவ மதம். இவரைப் பெரிய மகான் என்றும் சொல்கிறார்கள். மகான் என்ற விதத்தில் நான் இவரை வணங்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் ஒரு வைணவனாகப் பிறந்தவன் சைவ மதத்தைச் சேர்ந்த ஒருவரைக்

Koviloor Digital Library

குருவாக வைத்துக் கொள்வது சரியல்ல' என்று மனதில் நினைத்தபடி அனந்தானந்தரை வணங்குகிறார். பின்பு அங்கிருந்து வணங்கிய பின்பு புறப்பட்டார். அப்போது ''மூடமதே......'' என்ற குரல் கேட்டது. தம்மைத் தான் யாரோ முட்டாள் என்று சொல்வதாக நினைத்துத் திருப்பிப் பார்த்தார். அனந்தானந்தர் புன்முறுவல் பூத்த படி ''பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே'' என்று பாடினார். மேலும் அவர் சொன்னார்.

''ஆச்சாரியாள் கோவிந்தனை நினை என்று சொல்லி இருக்கிறார். இப்பொழுது நான் உன்னைப் பார்த்துச் சொல்ல வில்லை. இந்த உலகத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன். சைவம் என்பது அத்வைதம். ஜீவாத்மா வேறு பரமாத்மா வேறு என்று எண்ணாமல் ஆன்மாவும் இறைவனும் ஒன்று என எண்ணுவதே அத்வைதம். அந்த நிலையை அறிந்து கொள்கிற வரையில் ஒருவன் தவைதியாகவோ, விசிஷ்டாத் வைதியாகவோ இருந்து தான் அடைய முடியுமே தவிர நேராக அடைய முடியாது. அத்வைதமான சைவ மதத்தை நான் சார்ந்திருப்பினும் உன்னைப் போன்ற வைணவனாகத் தான் நான் இன்னும் இருக்கிறேன். அந்த நிலையை அடைகிற வரையில் நானும் வைணவன் தான். இப்பொழுது சொல். நான் உன்னைவிட ஏதேனும் மாறுபட்டவனா?'' என்று கேட்டார்; இதைக் கேட்டதும் போகரிதாசர் 'இப்போக் கொத்த மகான் தான் நமக்குக் குருவாக இருக்க வேண்டும்!' என்று அனந்தானந்தரின் சீடராக அமர்ந்தார்.

இதையே வள்ளலார் வெகு அழகாக இன்னொரு வெண் பாவில் பாடுகிறார்.

''சாதி குலம் என்றும் சமய மதம் என்றும் உப
நீதியிலாச் சிரம நீட்டு என்றும்—ஓதுகின்ற
பேய் ஆட்டம் எல்லாம் பிதிர்ந்து ஒழிந்தவே பிறர்தம்
வாய் ஆட்டம் தீர்ந்தனவே மற்று.

(பிதிர்ந்து—பேர்த்து. வாய் ஆட்டம்—வாய்ப்பறைசாற்றல்)

அதுபோல சிவ வைஷ்ணவ மதங்களிலும் கூட இதிகாச காலத்திலேயே சமரசம் இருந்திருக்கிறது என்பதற்கு ஆதா ரங்கள் பல உள. ஆன்மிக ஒளிபரப்பும் பிரபல எழுத்தாளர் அன்புத் தி ரா. கணபதி, சுவாமி விவேகானந்தர் பற்றிய நூலில் (பக்கம் 548இல்) எழுதியிருப்பது:

''சிவ பிரான் ஸ்ரீராமனின் பக்தர் என்பதும், தேவிக்கு ராம நாமத்தை உபதேசித்தவர் என்பதும் வாசகர்களுக் குத் தெரிந்திருக்கலாம்.

Koviloor Digital Library

இதைப்பற்றி ஸ்ரீராமகிஷ்ண விஜயம் என்ற சஞ்சிகை ஒன்றில் ஓர் அன்பர் இதற்கு விளக்கம் கேட்டிருககிருர். அதற்குப் பதிலாக சுவாமி கமலாத்மானந்தர் கீழ்க்கண்ட வாறு விளக்கம் தருகிருர்.

''சிவ பெருமான் எப்பொழுதும் ராமநாமஜெபம் செய்கிருர். காஞ்சியில் இறந்தவர் காதில் மயானத்தில் ராமநாமம் ஓதுகிருர் என்பது புராண வரலாறு. இதற்கு இணங்க, விஷ்ணு சகஸ்ரநாம இறுதியில் ''ஸ்ரீராம ராம ராமேதி" என்று தேவிக்கு ஈஸ்வரன் உபதேசிப்பதாகக் குறிப்பு இருக்கிறது.

ஆக சாதியும் மதமும் ஈஸ்வர பக்திக்குத் தடையாக இருக்கக் கூடாது என்று எண்ணுபவர்களே சமரச சன்மார்க்க பக்தர்கள். அதனுல் தான் சாதயும் மதமும் பொய் என எனக்கு ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி என்ருர்.

சாதியும் மதமும் பற்றி பல அவதார புருஷர்கள் வாழ்க்கையில் பல பிரச்சனைகள் எழுந்ததுண்டு. அவற்றில் ஒன்று ஸ்ரீ ராமாநுஜர் காலத்தில் நிகழ்ந்ததைப் படியுங்கள்.

ஒருவர் ஸ்ரீ இராமாநுஜரிடம ஒரு கேள்வி கேட்டார்.

''நீங்களோ உயர் குலப்பிறப்பு. வைஷ்ணவ பிராமணர். அப்படி உயர் குடியில பிறந்த நீங்கள் தாழ்ந்த ஜாதியைச் சோநத ஓர் அரிஜனுக்கு ஈமச் சடங்குகள செய்து வைத்திருக்கிறீர்களே?'' என்று. மேலும் வந்தவர் தம் கேளவியை விருத்தி செய்து பேசும் முன்பு ஸ்ரீராமானுஜர் குறுக்கிட்டுப் பேசினுர்.

''நீங்கள் இராமாயணம் படித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். பகவானின் அவதாரமான ஸ்ரீ ராம பிரான் தாமே "ஜடாயு!" என்ற ஒரு பறவைக்குத் தகனக்கிரியை நடத்தியிருக்கிருர். இந்த அரிஜனன் பறவையைப் போன்ற ஓர் ஈனப் பிறவி அல்ல. அதுபோல நானும் ஸ்ரீராம பிரானைப் போன்ற மகாபுருஷனும் அல்ல!" என்ருர்.

3. காக்காய் பிடித்த கதை

இங்கே குறிக்கப்படுகிற காகம் சாதாரண காகம் அல்ல. இந்திரலோகத்துக் காகம். ஆம். ஜயந்தன் என்ற பெயரை உடையவன். தேவலோகத்தைச் சேர்ந்தவன். காகத்தின் உருக்கொண்ட காரணம் என்ன தெரியுமா?

Koviloor Digital Library

இயற்கை எழில் கொஞ்சும் இடம் சித்திர கூட பர்வதம். இந்தப் பர்வதச் சாரலிலே பசுமை வளத்தைத் தொட்டுப் பவனி வந்து கொண்டிருந்த தென்றல் இவனுடைய தேகத்தை வருடியது. அப்போது இவன் உடலில் உணர்வு அலைகள் நரம்புகளில பாய்ந்து கிளுகிளுப்பு தந்தது. காமக் கிளர்ச்சி கனல் என கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது. அச்சமயம் பார்த்து இந்தப பாவி ஜயந்தன் சீதாப் பிராட்டியின் சிவப்பு உதடுகளில் சிந்திய புன்னகையைக் கண்டான். சீரான சீதா தேவியின் உடல் அழகையும் வாளிப்பான பருவ வளத்தையும் பார்த்தான். உள்ளம் வியர்த்தான்.

இவன் இந்திரன் மகன் அல்லவா? தந்தையின் குணம் மகனுக்கு வந்ததில் வியப்பென்ன? தந்தைக்கும மகனுக்கும் எந்தத் தபோ வனத்திலும் உத்தம பத்தினிகளைக் கண்டால் போதும். காம வெறி தலையிலே மோதும். இதனுலே ஏற் படுமே தீதும் என்று எண்ண மாட்டார்கள்.

சீதாப் பிராட்டி கற்புக்கனல். கற்பெனப்படுவது அது ஒன்று களிநடம் புரியக் கண்ட காரிகை. மூலமும் நடுவும் ஈறும் இல்லாததோர் மும்மைத்தாயனுகிய இராமமூர்த்தியின் தர்ம பத்தினி. உடனே காமவெறி களிநடம் புரிய ஆரம் பித்தது, இராமன் பரம்பொருளின் மறுபதிப்பு என்பதை மறந்தான். இதனுல் வினை வந்து சேரும் என்ற எண்ணத்தைத் துறந்தான். அவனுடைய பது, அவனுடைய பாசம் ஏது? பசுவாகிய ஜீவன் பக்தி செய்தால் முக்தி அருள் பெறலாமே என்ற பாவ புண்ணியங்களை நினைத்தானில்லை. இனி நமக்கு எந்த வரம், தவம், விரதம் வேண்டும? பிறர் மனை நோக்கா விரதம்...சே சே அதெல்லாம ஏது? இவை ஒன்றுமில்லை. வெறும் சுத்தப்பொய். ஆகவே நன்ருக மனதுக்கு உகந்த சாப்பாடு சாப்பிட வேண்டும். பட்டுப் போன்ற நல் ஆடை களை அணிய வேண்டும். மட மாதர்களை நாடவேண்டும். அவர்களோடு மலர் சூடி விளையாட வேண்டும். கை நீட்டி அவர்களுடைய கனதத தனத்தைத் தொட்டு அவரோடு கலந்து மகிழ்ந்து வாழவேண்டும், அந்தச் சுகமே தனக்குக் கண்கண்ட சுகம என்றும் இதுவே நாம் பெற்ற கை கண்ட பலன்' என்றும் நினைததான அந்தக் கயவன் ஜயந்தன். இந்த

Koviloor Digital Library

ஜயந்தனைப் போன்ற சண்டாளர்களுடைய நட்புநமக்கு வந்து விடக்கூடாது என்று எண்ணியே வள்ளல் பெருந்தகை தெய்வமணி மாலையிலே ஒரு பாடலைத் தந்திருக்கிறார்கள்.

"பரம் ஏது? வினை செயும் பயன் ஏது? பதி ஏது?
பசு ஏது? பாசம் ஏது?
பக்தி ஏது? அடைகின்ற முக்தி ஏது? அருள் ஏது?
பாவ புண்ணியங்கள் ஏது?
வரம் ஏது? தவம் ஏது? விரதம் ஏது? ஒன்றும் இல்லை
மனம் விரும்பும் உணவு உண்டு நல்
வஸ்திரம் அணிந்து மட மாதர் தமை நாடி நறு
மலர் சூடி விளையாடி மேல்
கரமேவ விட்டுமுலை தொட்டு வாழ்ந்து அவரோடு
கரந்து மகிழ்கின்ற சுகமே
கண்கண்ட சுகம் இதே கை கண்ட பலன் எனும்
கயவரைக் கூடாது அருள்
தரமேவு சென்னையில் கந்த கோட்டத்துள் வளர்
தலம் ஓங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவ மணி
சண்முகத் தெய்வ மணியே.

பரம் என்றால் மேலானது என்றும் பொருள். பரம் பரம்பொருளையும் குறிக்கும். கரம்—கை, தரம்—தகுதி. கயவர்—கீழோர். தரமேவும் என்றால் வேண்டுவார் வேண்டுவது தரும் என்ற பொருள் படும்.

இப்படித் தெய்வ சிந்தனையை மறந்து பாவ புண்ணியங்களுக்குக் கொஞ்சமும் அஞ்சாமல் மனம் போனபடிக்குக் காம வயப்பட்ட ஜயந்தன் நிலை அவன் தந்தையின் முந்திய நிலைக்கு ஒப்ப இருந்தது.

இந்திரன் முன்னொரு காலத்தில் கௌதம முனிவருடைய ஆசிரமத்தில் அகலிகையைக் கண்டு முனிவர் வேடம் தாங்கினான். சீதையைக்கண்ணுற்ற ஜயந்தன் காகமாக மாறினான். இந்திரனால் கௌதமரை அகலிகையிடம் இருந்து பிரிக்க முடிந்தது. முழு ஆசையையும் நிறைவேற்றிக் கொள்ள முனிவர் வேடமும் கொண்டான். ஆனால் ஜயந்தனால் இராமனைச் சீதையிடம் இருந்து பிரிக்க முடியவில்லை. எனினும் அவனுக்கு அவன் அற்ப ஆசை நிறைவேற ஓர் அலாதியான சந்தர்ப்பம் ஏற்பட்டது.

Koviloor Digital Library

சீதையின் மடியில் இராமன் படுத்திருக்கிறான், கண்களை மூடி சற்று இராமன் அயர்ந்து போனான். ஆகவே சிறு விஷமங்களாவது செய்து தன் சித்தத்தை நிறைவேற்றிக் கொள்ள ஜயந்தன் காகவடிவில் முனைந்தான். சிறு காகமாக மாறிய அவன் தன் அலகுகளால் சீதையின் மார்பகத்தைக் கொத்தினான். காம வெறியில் காகம் செய்த இந்த லீலையால் சீதையின் மார்பிலிருந்து செங்குருதி பெருக்கெடுத்து ஒழுகியது. ஒழுகிய ரத்தம் உறங்கிக் கொண்டிருந்த ராமன் உடம்பில படட உதிரத்தின் ஈரம்பட்டதும் விழித்து எழுந்தான். உடனே புறப்பட்டது இராமபாணம். காகம் கலங்கியது. காம பாணம் துரத்தக் காகம் ஆனேனே! இப்போது ராம பாணம் புறப்பட்டு வருகிறதே என்று காகம் சிறகடித்துப் பறந்து புவனம் முழுவதும் சுற்றியது. ராமபாணம் அந்தக் காகத்தின் நிழல் போலப் பின் சென்றது.

ராம பாணம் அந்தச் சின்னக் காக்கையை சின்னா பின்னப் படுத்துமாறு அதன் உடலை ஊடுருவியிருக்கக் கூடாதோ? ஊடுருவ வில்லை. இந்த உலகில் தனது தாக்குதலை நீக்குதல் செய்ய எந்தத் தெய்வங்களுக்கும் முடியாது என்று நிரூபிக்க நினைத்தது. ஆகவே காகத்தின் வாலின் பின்னால் போய்க் கொண்டு இருந்தது, இப்படிப் புறமுதுகிட்டு ஓடும் பொல்லாதவனிடம் இந்தச் சந்தர்ப்பத்திலா இராமன் ராம பாணப்புகழை நிலை நாட்ட நினைத்திருப்பார்? இல்லை இதற்குக் காரணம் வேறு.

அது என்ன காரணம் தெரியுமா? அந்தோ சிறு காகம். கோழைத் தனத்தால் காகமாக மாறிவிட்டான் காமவெறியன். பிழைத்துப் போகட்டும் என்று தன் திருவருள் கடைக் கணிப்பால் அவனை அழிவிலிருந்து காப்பாற்றுகிறான். ஆகவே ராம பாணம் அவன் உடலைத் தகிக்கவில்லை. அது ஏன்? அவளே கோப வெறியால் ஜயந்தன் காகத்தைத் கண்டிருந் தால் காகமும் எரிந்து பஸ்பம் ஆகியிருக்குமே. அத்தகைய கற்புக்கரசி அல்லவா சீதாபிராட்டி!

அவளிடம் உள்ள கருணை உள்ளம் காகத்துக்குக் கவச மாயிற்று. ஏழு மராமரங்களையும் துளைக்கும் அந்தப் பாணத் திற்கு எச்சில் காக்கை எம்மாத்திரம்? பாணம் பறவையின் வால் பற்றித் தொடர்ந்தது. புவனம் முழுவதும் சுற்றியதே ஏன் தெரியுமா? அந்தக் காகம் மூர்த்தியிடமும் பிராட்டி

Koviloor Digital Library

யிடமும் தான் செய்தபிழை பொறுத்தருள மண்டியிட்டுச் சரணுகதி அடையச் செய்ய வேண்டும் என்றே அவ்வாறு செய்தது.

ஆகவே ராம பாணம் ஜயந்தனைக் காவல் அதிகாரி முன்பு கைது செய்து கொண்டு நிற்க வைத்தது எது? சீதா பிராட்டியின் கருணை உள்ளம்.

அசோக வனத்திலே சீதை இருந்தபோது அனுமன் வந்தான். வந்தவன் மீது அரக்கியர் சீறி அனுமனை அழிக்க முயன்றனர். அப்போது அரக்கிகளைக் கொன்று விடுகிறேன் என்று சொன்னபோதும் சீதை அந்த அரக்கிகளுக்கு இரக்கம் காட்டச் சொல்லுகிறாள். ஆகவே அவர்களைக் கொல்லாது விடுகிறுன். அதைச்சொல்லாமல் சொல்லுகிறான் ஆஞ்சநேயன்—தான் சீதையிடம் கண்ட அரும் பொருள் காட்சியை நான் வெறும் பெண்ணாகிய சீதையைப் பார்க்க வில்லை. அவளிடம் இற்பிறப்பும் இரும்பொறை என்கிற கருணையும், கற்பு என்ற ஒன்றும் ஆக மூன்றும் வந்து ஒருங்கே தங்கி நடம் ஆட இடம் தேடியது. அது சீதாப் பிராட்டி யிடம் நின்றது என்றான். கம்பன் பாட்டைச் சுவையுங்கள்.

''விற்பெரும் தடம் தாள் வீர! வீங்கு நீர் இலங்கை வெற்பில்
நற்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற் பிறப்பு என்ப தொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்.

இற்பிறப்பு என்று இங்கு கூறுவதில் விசேஷ பொருள் உண்டு. கம்பரின் மற்றொரு பாடலில் ''உன் குலம் உன்ன தாக்கி உயர் புகழ்க்கு ஒருத்தியாய், தன் குலம் தன்னதாக்கி'' என்று சீதையின் புகுந்த வீட்டில் சூரிய குலப் பெருமையை யும், தான் பிறந்த வீட்டின் ''கர்மஞானி ஜனகபூபனின்'' குலப் பெருமையையும் காட்டுவன.

சீதை அருளால் காகத்தின் இரண்டு கண்களில் ஒன்றை ராம பாணம் இலக்காக்கிப் பறித்துக் கொண்டது.

இதுபோல மீண்டும் காகம் உரு எடுத்து யாரும் வந்து அலம் தேடிக் கொள்ளக் கூடாது என்பதற்காக அன்று முதல காகத்திற்கு ஒரு கண் என ஏற்பட்டதாம்.

Koviloor Digital Library

மேலும் இதைப் பற்றிப் பெரியாழ்வார் பேசுகிறார். அவர், யசோதை வளர்க்கும் கண்ணனுக்குக் கோல் கொண்டு வரும்படி காக்கையிடம் சொல்லுகிறார். மூன்று முறை சொல்வது சரி. ஆனால் ஆறு தடவை அவ்வாறு பெரியாழ்வார் சொல்லியும் காகம் வரவில்லை. ஆகவே ஜயந்தன் கதையை ஞாபகப் படுத்திக் ''காகமே! அந்த மிச்சம் மீதியான மற்றொரு கண்ணையும் கண்ணனை விட்டுப் பறிக்கச் சொல்லவா?'' என்று அதட்டிக் கேட்கிறார் உடனே அந்தக் காகம் சரணாகதி யடைய ''கா! கா!'' என அதாவது ''காத்துக் கொள்! காத்துக் கொள்!!'' என்று கரைகிறதாம்.

ராமனது கால் கைகளை ஜயந்தன் காகம் பிடித்ததிலிருந்து, தஞ்சம் புகுபவரைக் காக்கை பிடிக்கிறதாக இன்றும் உலகோர் கூறுகிறார்கள்.

எப்படிச் சயந்தன் எல்லையின்றி வினைப் பரமேது, பதி ஏது, பசு ஏது, பாப புண்ணியங்கள் ஏது என்று தனக்குள்ளே கதைத்துக் கொண்டு பின்பு சாகப்போகும் பழம் கரும் காக்கை ஆகிய அவன் கதறினானே அப்படிச் சிலர் கதறுவார்கள் என்ற பொருள் பட தெய்வ மணிமாலையில் பெருமானார் இப்படிப் பாடுகிறார்.

''கரையில் வீண்கதை எலாம் உதிர் கருங் காக்கைபோல், கதறுவார்......'' என்றும் வலிந்து பொருள் கொள்வதில் தவறு உண்டா?

'பிறர் மனை நோக்காப் பேராண்மை' என்ற உயர்குணம் தேவனாகிய ஜயந்தனுக்கு இருந்திருக்க வேண்டும். அவனே கயவனாகி காமவயப்பட்டுப் போனான். சீதை என்ற அருளையும் இராமன் என்ற ஆண்மையையும் (இராமன்—ஏகபத்தினி விரதன்) தொழாமல் துதியாமல், அவர்கள் பெருமை உணராது கீழ்த்தரமான செயலில் ஜயந்தன் இறங்கினான் என்னும் பொருள் வலிந்து கூறுவதற்கு ஒப்ப மற்றொரு பாடலைத் தெய்வ மணிமாலையில் வள்ளலார் பாடுகிறார், அந்தப் பாடல் தொடக்க அடிகளை மட்டும் தருகிறேன்.

சேவலம் கொடி கொண்ட நினை அன்றி வேறு சிறு
தேவரைச் சிந்தை செய்வோர்
செங்கனியை விட்டு வேப்பங் கனியை உண்ணும்ஒரு
சிறு கரும் காக்கை நிகர்வார்''

Koviloor Digital Library

காக்கை பிடித்த கதையை இந்த வரிகள் ஞாபகப் படுத்தாமல் இருக்குமா? நீங்களே சொல்லுங்கள்.

''என்னய்யா! நீ பெரிய காக்காய் கரைந்து கால்பிடித்த கதை சொல்லிவிட்டாய்? இந்திரன் மகன் சிறு காக்கையாகக் கத்தினான்—காலைப் பிடித்தான், ராமன் அருள் செய்தான் என்று முன்பு கம்பனும் கதைத்துக் கவி எழுதியிருக்கிறான். அந்தக் காகத்தைவிட நான் கத்திய கதை நிரம்பப் பெரிது. இறைவா இறைவா என்று நான் சரடியாகக் கத்தியிருக்கிறேன். காக்கைவண்ணத்தில் கறுப்பு. ஆனால் அதன் உருவம் சிறிது. அதைவிடப் பல மடங்கு பெரிய உருவம் போன்ற கரடியாக நான் கத்தியிருக்கிறேன், கடவுள் காலைப் பிடிக்க நினைத்துச் சரணம் சரணம் என்றுஒருமுறை என்னபலமுறை என் நாத் தடிக்கக் கத்தியிருக்கிறேன். கடவுள் என்கிற பயல் வரவே இல்லை. ஆகத் தயவு செய்து இப்படிக் கரைந்து எங்களை ஏமாற்றாதே'' என்று நாத்தி அகம் ஏறக் கதறும் வம்பர் வாய்ப்பட்ட நோய் தீர வயித்திய நாத வள்ளலே ஒரு மருந்து நீ தந்தருள வேண்டும் என்று பாடுகிறார். வயித்திய நாதர் பதிகம் என்ற தலைப்பில் இந்தக் காகக் கதையின் யூகம் புரிந்து கொள்ளவே பாடியிருக்கிறார் என்பது மிகை யாகாது. அதையும் நீங்கள் படித்துச் சுவைத்தால் என் கருத்துத் தவறு என்று கூறமாட்டீர்கள். காரணம் இந்தக் கதையாகிய அறிவுமர தேவாமிர்தம் போன்றது. இதைப் பெரியவர்கள் சொன்னார்கள். அந்த உண்மைகளை மதிக்காமல் ஏதோ எல்லாம் தெரிந்ததாகப் பசப்பி ஓதிமரம்போல அவர் எதிரே அந்தோ பாவம் அவர்கள் நிற்கிறார்களே! இப்படித் தாங்கள் கத்திய கத்தலுக்கு ஒரு கலம் நெய் உருக்கிச் சூடு ஏற்றி உண்டாலும் தகும் என்றும் சொல்லுகிறார்கள்! இந்தச் சிறுகாக்கை கதை யிருக்கிறதே இதை எழுதியவன் யார் தெரியுமா?

''ஐயா ஒரு வம்பன், வீணன் கட்டிவைத்த கதை ஐயா இது'' என்று இந்த வம்பர்களுக்கு எல்லாம் வம்பவாய் மதம் அறவே நீங்க வேண்டும். தவம் புரிந்த சிகாமணிகளுக்குத் தான் இந்த உண்மை புலப்படும் என்று சுட்டிக்காட்டுவது போல இறுதி அடியிலே என்ன சொல்லுகிறார் தெரியுமா?

''வயித்திய நாதப் பெருமானே! நீ உன் அன்பர்கள் பாவம் பிணி எல்லாம் அற்றழிந்து போகவே புள்ளிருக்கும் வேளூரிலே வந்து எழுந்தருளியிருக்கிறாய். அப்படி நீ எழுந்

Koviloor Digital Library

தருளிய காரணம் தவ சிகாமணியாகிய உலகநாத வள்ளல் என்ற அடியார் மகிழவே இந்த வேளூரில் உறைந்தாய்.

ஆகநீ செய்யவேண்டியது நான் சொன்ன (உண்மையான) வம்பர் வாய்மதம் அற தயவு கூர்ந்து ஒரு மருந்து நீ தர வேண்டும்!" என்கிறார், மருந்து அருள்க என்றால் தயையுடன் தரவேண்டும் என்பதுதானே பொருள். பாடல் இதோ:

உம்பர் வான் அமுது அனைய சொற்களால் பெரியோர்
''உரைத்த வாய்மைகளை நாடி
ஓதுகின்றார் தமைக்கண்டு அவமதித்து எதிரில்
ஓதிபோல நிற்பதும் அலால்
''கம்பர் வாய் இவர்வாய்க் கதைப்பு!' என்பர் ''சிறு கரும்
காக்கை வாய்க் கத்தல் இவர்வாய்க்
கத்தலில் சிறிது!'' என்பர் சூடு ஏறு நெய் ஒரு
கலம் கொள்ள வேண்டும்!'' என்பர்
''இம்பர் நாம் கேட்டதை இது என்பர்!'' அன்றியும்
''இவர்க்கு ஏது தெரியும்?'' என்பர்
இவைஎலாம் எவனோ ஒரு வம்பனும் வீணன் முன்
இட்ட கட்டு" என்பர், அந்த
வம்பர் வாய் அற ஒரு மருந்து அருள்க தவசிகா
மணி உலக நாத வள்ளல்
மகிழ வரு வேளூரில் அன்பர் பவரோகம் அற
வளர் வயித்திய நாதனே!

(இரண்டாம் திருமுறை-109 ஆம் பதிகம் வைத்தியநாதர் பதிகம் பாடல் 3)

4. நாம ஜப யக்ஞம்

நாம் நாதனை அடைய வேண்டுமா? நாம சங்கீர்த்தனம் செய்ய வேண்டும். இது தான் நாம ஜபயக்ஞம்; இது சன்மார்க்கத்தில் மிகவும் சிறந்து போற்றப்படுவது என்று அருட்பிரகாச வள்ளலார் சொல்லுகின்றார்.

''கண் கொண்ட பூதலம் எல்லாம் சன்மார்க்கம்
களைந்து கொண்டே
பண்கொண்ட பாடலில் பாடிப் படித்துப் பரவுகின்றார்

Koviloor Digital Library

விண்கொண்ட சிற்சபை ஒன்றே நிறைந்து
விளங்குகிறது.
என் கொண்ட மற்றை மத மார்க்கம் யாவும்
இறந்தனவே!

ஆக "பண் கொண்ட பாடலில் பெருமான் பதத்தைப் பாடிட விண்ணகத்தே உள்ள சிற்சபை பூதலம் எல்லாம் நிறைந்து விளங்குகிறதே! — மேலும் மற்றைய எண்ணற்ற மத மாச்சர்யங்கள் மடிந்து சன்மார்க்கம் கலந்து துலங்கு கிறதே!" என்று பாடுகிருர் பெருமான்.

இறைவன், பாடுவதற்கு ஒரு பாலகனுக்கு ஞானப்பால் கொடுத்தான். அது அந்தப் பாலகனை மட்டும் பாடவா? இல்லை. ஞான சம்பந்தர்கள் எல்லாம் அந்த ஆளுடைய பிள்ளையின் பாட்டைப் பாடத் தானே பரமன் தன் பிராட்டி யோடு வந்து பாலூட்டினுன்! ஏன் அவர் அவனுடைய திருநாமத்தைச் சதா ஜபித்தவர். இப்பிறவியிலும் ஜபிப்பவர்.

'தேரோங்கு காழிக்கண் மெய்ஞானப் பால் உண்ட
செம்மணியைச்
சீர் ஓங்கு முத்துச் சிவிகையின் மேல் வைத்த தேவ!
உன் தன்
பேர் ஓங்கும் ஐந்து எழுத்து அன்ரே படைப்பைப்
பிரம்மனுக்கும்
ஏர்ஓங்கும், காப்பைத் திருநெடு மாலுக்கும் ஈந்ததுவே

தேர் - தெளிவு, ஓங்கு- போற்றப்படும், காழி - சீர்காழி, சிவிகை – பல்லக்கு, ஐந்து எழுத்து - நமசிவாய (சீர்காழியில் பிறந்த திருஞான சம்பந்தர் நமசிவாயப் பதிகம் பாடியிருக் கிருர்).

இப்பாடலின் கருத்து என்ன?

இறைவன் பேர் ஓதிய காரணத்தால் படைப்புத்தொழில் பிராமணனுக்கும் காக்கும் திருநெடுமாலுக்கும் கிட்டியதாம். அப்படியானால் நாமும் அவன் நாமாவைப் பாடுவதினுல் பலன்கள் பல பெறலாம் அல்லவா?

இப்படித் தேவர் உலகில் மட்டும் அல்ல. இந்தப் பூவுலகிலும் கூட அவன் நாமத்தை ஜெபித்து பல நன்மைகள் பெற்ற பக்தர்கள் பலர். அவர்களில் கபீர்தாஸும் ஒருவர்.

Koviloor Digital Library

இந்தக் கபீர்தாஸ் ஒரு பெரும் மகான். சதா ராமநாமம் உச்சரிப்பவர். அவருக்கு ஒரு மகன் அவன் பெயர் கமால் தாஸ். ஒரு சமயம் மந்திர தந்திரங்களில் தேர்ந்த ஒருவர் கபீர்தாசைச் சந்தித்தார். அவரிடம் அந்த மந்திரவாதி பல வினாக்களை எழுப்பினான். தாஸர் அவனுக்கு விடையாக ''ராம்! ராம்!' என்றே பதிலளித்தார். இதனால் கோபம் அடைந்த மந்திரவாதி கபீர்தாசைப் பிடித்துச் சிறையில் அடைத்தான். இதை கபீர்தாஸ் மகன் அறிந்தான். அவன் மந்திரவாதியிடம் சென்று தன் தந்தையை விடுவிக்குமாறு கேட்டான். அப்போது மந்திரவாதி அந்தச் சிறுவனைப் பார்த்து ''நீ அவரை விடுவிக்க வேண்டும் என்று வந்திருக்கிறாயோ?'' என்று கேட்டான்.

''ஆம்!'' என்றான் கமால்தாஸ்.

''உன் அப்பாவை ஊர் எல்லாம் பெரிய ஞானி என்று பேசுகிறார்கள். நாம் ஒரு சில கேள்விகள் கேட்டோம். அதற்கு அவர் சரியான விடை சொல்லாமல் சதா ராம் ராம்!' என்று உளறிக் கொட்டினார். எனக்கு அவருடைய அந்த அசம்பாவிதமான பதில் ஆத்திரத்தை மூட்டியது. ஆகவே அவரைச் சிறை செய்தேன்!''

''ராம்! ராம்!' என்பதற்காகவா சிறை செய்தீர்?''

''ஆம். சரியான பதில் கூற முடியாமல் அவர் ஞானி போல நடிக்கிறார்.'' ராம் ராம்!' என்று வெறுமனே உளறி தன் ஞான சூன்யத்தை மறைக்கப் பார்க்கிறார். ஆகவே நீ அவரை இப்போது விடுவிக்க வேண்டுமாயின் என்னுடன் நீ வாதம் செய்ய வேண்டும். நீயும் என் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல வேண்டும்'' சிறுவனாகிய உன்னால் அது முடியுமா! என்று யோசித்துப் பார்!''

''மந்திரவாதியே! நீர் எது வேண்டுமானாலும் கேட்கலாம். நான் என் தந்தையாரின் ஆசியாலும் அவர் ஜபிக்கும் ராம நாம மகிமையாலும் தக்க பதில் சொல்லுவேன்!'' என்று உறுதி அளித்தான். மந்திரவாதிக்கு இது பெரும் அதிர்ச்சியை அளித்தது. ஒருவேளை இவன் தன் கேள்விகளுக்குப் பதில் சரியாகச் சொல்லிவிடுவானோ என்று மந்திரவாதி அஞ்சினான். ஆகவே அவனைத்தன் மந்திர தந்திரத்தால் பயமுறுத்த நினைத்தான்.

Koviloor Digital Library

தன் தண்டத்தை மந்திரவாதி எடுத்து வீசினான். அது எந்த ஆதாரமும் இல்லாது பூமியில் ஊன்றி நின்றது. அடுத்து ஏதோ மந்திர உச்சாடனம் செய்தவாறு அந்த தண்டத்தின் மீது, அந்தரத்தே பறந்து ஏறி அமர்ந்தான். இப்படிச் செய்து விட்டு கமால்தாசைச் சற்று செருக்குடன் பார்த்தான்.

இதைப் பார்த்த உடனே கமால் தன் தலையிலிருந்து ஓர் உரோமத்தை எடுத்து ''ஜெய் ஸ்ரீராம்!'' என்று சொல்லி வீசினான். அது கம்பி போல நிமிர்ந்து மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே அந்தரத்தில் நின்றது. அடுத்த ராம நாமம் சொல்லவே அவனும் எம்பி அந்த ரோமத்தின் மீது அமர்ந்தான்.

மந்திரவாதி சாஷ்டாங்கமாக கமாலின் காலில் வீழ்ந்து ''கமால்தாஸ் சுவாமி! நீங்களே என் குருநாதன். எனக்கோ என் யோக தண்டத்தை நிறுத்த பூமி தேவைப்பட்டது. ஆனால் உங்களுக்கோ எந்த ஆதாரமும் இல்லாமல் உங்கள் தலைமுடியை அந்தரத்தே நிறுத்தி அதிலும் ஏறிப் பறந்து அமர்ந்தீர்கள்!''

அதற்குக் கமால் சொன்னான் ''இது வேறு ஒன்றுமில்லை. என் தந்தை சதா ஜபித்த ராம நாமத்தின் மகிமை. மேலும் இதயப் பூர்வமான தியானத்தோடு நான் ராம நாமத்தை ஸ்மரித்தேன். அதன் பலன் இது'' என்றான்.

இந்தக் கதையை ஸ்ரீ ஹரிதாஸ் கிரி சுவாமிகள் அண்மையில் சொன்னதாக ஞானபூமி இதழில், வெளிவந்தது.

எனவே ஈஸ்வர நாமாவைக் கூட்டாகச் சேர்ந்து ஜபிக்கிற வேள்விதான் நாம ஜபயக்ஞம் என்பது.

''யக்ஞங்களில் நான் ஜப யக்ஞமாக இருக்கிறேன்'' என்கிறார் கீதையில் கண்ணன்.

இறைவனுக்கு நிகரானது அவனது திருப்பெயர்.

தராசின் ஒரு தட்டில் இறைவனையும், இன்னொரு தட்டில் அவனது திருநாமத்தையும் வைத்தால் இரண்டும் சமமாகவே விளங்கும்.

கிருஷ்ணன் பரமாத்மாவின் எடைக்குச் சத்தியபாமா இட்ட பொன் மணிகளுக்கும் இதர ரத்தினங்களுக்கும்

Koviloor Digital Library

சமமாக ருக்மணிதேவி இட்டது என்ன? கிருஷ்ண பரந் தாமனின் நாமத்தை ஜெபித்த ஒரு சிறிய துளசி தளம்தான். இறைவனின் நாம ஜபத்தின் மகிமைக்கான எடுத்துக் காட்டே இந்த வரலாறு.

இறை நாமம் ஒருமுகமாக முழங்கும் இடத்தில் "மோதந்தே பிதரோ ந்ருத்யந்தி தேவதா" — அதாவது தேவதைகளும் நமது முன்னோர்களும் மகிழ்ச்சியாய் நடன மாடுகிறார்களாம்.

இப்படி ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் என்ற ஏட்டிலே 'பிரமச்சார்ய ராஜு' என்ற அடிகளார் ஒருவர் எழுதி யிருக்கிறார்கள். இதைத்தான் ஸ்ரீ இராமலிங்கப் பெருமான் வலியுறுத்தி நமசிவாயப் பதிகத்திலே கூறுகிறார்.

"பெற்ற தாய்தனை மக மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந்தாய் மறந்தாலும்
உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்
நற்றவத்தவர் உள் இருந்து ஓங்கும்
நமசிவாயத்தை நான் மறவேனே!

இதனையே தேவாரப் பாடலில் காதலுற்று கசிந்து கண்ணீர் மல்க இறைவன் நாமமாகிய நமசிவாயத்தை ஓதினால் அது நம்மை நன்முறையில் சேர்க்கும் என்றும் பேசப்பட்டிருக்கிறது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருள் ஆவது
நாதன் நாமம் நமசிவாயவே!"

ஒரு சமயம் ஆதிசங்கரர் தான் வழிபடு தெய்வமாகிய தேவியைப் பார்த்துச் சொல்லுகிறார்.

"ஹே தேவி! நான் உன்னிடம் வரமாகக் கேட்பது எல்லாம், என் மூச்சுக் காற்று என்னைக் கைவிட்ட போதிலும் என் நாவானது உனது புனித நாமத்தை ஜபித்துக் கொண்டிருக்க வேண்டும்" என்பதுதான்.

Koviloor Digital Library

நாத்திகம் பேசுபவர்கள் கூட தங்களுக்கோ தம்மைச் சார்ந்த உற்றார் உறவினருக்கோ ஏதேனும் ஆபத்து வருகிற நோக்கில் தன்னை அறியாமல் "அட கடவுளே" என்று பதறிக் கதறுவர் என்பது உண்மை. அது என்ன? உலகத்திலே இறைவனே இல்லை என்று நாத்தழும்பேற நாத்திக வாதம் பேசியவர் இங்கர்சால். ஒரு சமயம் இவருடைய மகள் மாடிப்படியிலிருந்து தவறி விழப்போன சமயம் அவளைக் காப்பாற்ற நினைத்து "ஐயோ! என் கடவுளே!" (Oh my God) என்று கதறினராம் என்று மேனாட்டறிஞர் மோலின் என்பவர் எழுதியிருக்கிறார்.

இப்படி இறைவன் இல்லை என்றெல்லாம் கூறி நிந்திக்கின்றவர்களின் நெஞ்சிலும், அவர்களை அறியாமல் அவனை அழைக்க வைக்கும் அந்தப் பெயருக்கு இருக்கும் வலிமைதான் என்னே? அருட்பிரகாசர் எவ்வாறு உறுதியுடன் இருந்து ஆண்டவன் திருநாமத்தைச் சொல்லி வந்திருக்கிறார் என்பதும் அதை நாம் பின்பற்ற வேண்டும் என்பதும் கீழ்வரும் இரண்டு அருட்பாக்களால் அறியலாம். இப்பாடலில் சொல்லுகிறார். "திசைகள் இடம் மாறட்டும்: கிழக்கு மேற்காகவோ இல்லை, தெற்கு வடக்காகவோ எப்படி எல்லாமோ இவை மாறினாலும் சரி! ஏழு கடல்கள் இந்தப் பூமி மீது பாய்ந்து தங்கள் யதா ஸ்தானத்தை மாற்றி அமைத்துக் கொண்டாலும் சரி! ஆகாயத்தில் விளங்கும் விண்மீன்கள் சிதறி இடம் பெயர்ந்தாலும் சரி. மழை பொய்த்து மக்கள் தம் வழக்கமான உணவை மாற்றுவராயினும் சரி! ஏழுலகங்களும் என்று பேசப்படுவை மிகவும் பெரு மாற்றத்தைக் கொள்வதாயினும் சரி! அண்டங்களும் ஆகாயத்தில் மேல் கீழ் விழுந்து ஒன்றுக்கு ஒன்று வித்தியாசமாக அமைப்பை வேறுமாதிரி ஆக்கிக்கொண்டாலும் சரி! மறைகள் எல்லாம் முற்றும் உணர முடியாத என் நாதன் எம்பிரான்இருக்கிறானே. அவன் பெயர்சாதாரணமானதன்று. அது அருள் திருப்பெயர். அது என்ன தெரியுமா? நமசிவாயம் என்பது.மேலே சொன்ன மாற்றங்கள் ஏற்பட்டுப் போயினும் நான் அந்த அருள் திருப்பெயரை நினைப்பிற்கு மாறாக மறந்து போகவே மாட்டேன். இது உறுதி என்று சொல்லுகிறார்.

Koviloor Digital Library

''திக்கு மாறினும் எழு கடல் புவிமேல்
சென்று மாறினும் சேண் விளங்கு ஒளிகள்
உக்கு மாறினும் பெயலின்றி உலகில்
உணவு மாறினும் புவிகள் ஓர் ஏழும்
மிக்கு மாறினும் அண்டங்கள் எல்லாம்
விழுந்து மாறினும் வதங்கள் உணரா
நக்கன் எம்பிரான் அருள் திருப்பெயராம்
நமச்சிவாயத்தை நான் மறவேனே.

(உக்கு-சிதறி, சேண்-ஆகாயம், நக்கன்-சிவம்)

'அதுசரி. அண்டம் உலகம் உடுக்கள் போன்றஇயற்கை அமைப்பில் மாற்றம் ஏற்பட்டால்தானே இவர் இறையருள் பெயரை மறக்க மாட்டேன் என்று சொல்லுகிறார். ஒருவேளை இவருடைய வாழ்க்கை அமைப்பில் ஏதாவது முரண்பாடுகள் ஏற்பட்டால் ஆண்டவன் நாமத்தை ஒரு வேளை மறந்து விடக்கூடும் அல்லவா?'' என்ற வினா ஒரு போதும் ஒருவருடைய மனதிலும் எழுந்துவிடக்கூடாது என்பதற்கும் ஒரு சில சொல்கிறார்.

என்னுடைய வாழ்க்கையில் மிகவும் கொடியது என்று கூறப்படும் வறுமை வந்தாலும் பரவாயில்லை. இல்லையெனக்கு மிகவும் சந்தோஷத்தைத்தரும் பெருவாழ்வே ஏற்பட்டாலும் சரி. புன்மையைத் தரும் பெண்டிரோடு கலந்து பொருந்தி நின்றாலும் இல்லை அந்தக் கலவி இன்பத்திலேயே திளைத்து நின்று போனேன் என்றநிலையே ஏற்பட்டாலும் சரி. அப்போதும்கூட ஒருவிதத் தன்மை என்ற பண்பு இல்லாதவர்களோடு எனக்கு இணக்கம் இருந்தாலும் அதற்கு மாறாகப் பெரியோருடைய சகவாசமும் ஏற்பட்டு அவர்களிடம் நான் இருப்பினும், எல்லா நன்மைகளையும் தரக்கூடிய அந்த நமச்சிவாயத்தை நான் மறவேனே!

''வன்மை செய்திடும் வறுமை வந்தாலும்
மகிழ்வு செய்பெரு வாழ்வு வந்தாலும்
புன்மை மங்கையர் புணர்ச்சி நேர்ந்தாலும்
பொருந்தினாலும் நின்றாலும் நேர்ந்தாலும்
தன்மை யில்லார் சார்பு இருந்தாலும்
சான்றமேல் அவர் தமை அடைந்தாலும்
நன்மை என்பன யாவையும் அளிக்கும்
நமச்சி வாயத்தை நான் மறவேனே.

Koviloor Digital Library

நம் அருட்பெருஞ் ஜோதி அடிகளார் தம்மைப் பெண்ணாகப் பாவித்து நாயக நாயகி விவகாரத்தில் நிகழ்ந்தவைபோல 'இங்கித மாலை" என்ற தலைப்பில் நூற்று அறுபத்தாறு பாடல்கள் எழுதியிருக்கிறார்கள். அதில் ஒரு பாடலில் இறைவன் திருநாமம் பற்றிய ஒன்றைப் பார்க்கலாம்.

"'உடற்கு உயிர் பிணைப்புப்போல நீர் உமக்குப் பதியை ஒற்றியூராக அமைத்துக்கொண்டீர். உமது ஊர் தெரிகிறது. உம்பேர்தான் என்னவோ?" என்று ஜோதிப் பெண்ணாள் சிவபெருமானிடம் கேட்டாள்.

அதற்கு ஈஸ்வரன் என்ன பதில் சொன்னார் தெரியுமா? குடக்குச் சிவந்த பொழுதிற்கு முன் கொண்ட வண்ணம் தான் என் பெயர் என்றார், அதாவது குடதிசை சிவந்த பொழுது, மேற்கே அந்தி நேரம் தெரிகிற நிறத்தின் பெயர் முன் கொண்டது என்று பூடகமாய்த் தன் பெயரைச் சொன்னாராம். 'சிவப்பு' வண்ணமாகக் குடதிசை இருப்பதில் முன் கொண்ட எழுத்துக்கள் 'சிவ' இதுவே என பெயர். வண்ணப் பெயர் என்பதால் 'சிவம்' என்று அச்சொல் வரும் என்று தெரிவித்தார்.

அதற்கு ஜோதிப் பெண் சொல்கிறாள். நீர் விடைக்குக் கருத்தா. அதாவது மாடு ஓட்டுகிறவர். அவன் எங்கே கற்றிருப்பான் என்று நினைத்தேன். நீர் மிகவும் கற்றவர் போல என வினவுக்கு விடை தருகிறீர். இந்த விடைக்கும் உரிய கருத்தைத் தந்தவர் நீர்தானே. சிவப்பு தான் என்று சொல்லாமல் தன்னைப் பீற்றிக் கொள்வதைக் கண்டிப்பது போல நீர் "கருத்தர்" என்று நிந்தாஸ்துதி செய்கிறார். இன்னும் இதில் நயமான பொருள் என்ன தெரியுமா? உள்ளக் கருத்துத் தெளிவு பெற அறிவுச் செம்மையான விளக்கம் தேவை. அதுபோல நம் அறியாமைக் கருத்தை விளக்க ஆண்டவரே அறிவின் செம்மை என்றும் சுட்டுவதாகவும் இறைவன் சொன்ன பதில் அமைகிறது.

"நீர் கற்றவர்" என்று அந்தப் பெண் சொன்னதும் ஈஸ்வரன் சொன்னார். "நான் சும்மா இடக்குக்கு அல்லவா சொன்னேன்" என்று கூறுகிறார். "அப்படியே தோழி என்னை இப்படி இவர் சொல்லுகின்றாரே!" என்று தலைவி (ஜோதிப் பெண்ணாகிய வள்ளல் பெருமான்) தன் மன

Koviloor Digital Library

தாகிய சேடியை விளித்துக் கேட்கிறார். இந்தக்கருத்துடைய பாடல் இங்கித மாலையில் 22 ஆவது பாட்டு.

உடற்கச்சு உயிராம் ஒற்றி உளீர்
உமது திருப்பேர் யாது என்றேன்
குடக்குச் சிவந்த பொழுதினை முன்
கொண்ட வண்ணராம் என்றார்
விடைக்குக் கருத்து ஆவாநீர் தாம்
விளம்பன் மிகக் கற்றவர் என்றேன்
இடைக்குப் புகன்றும் என்கின்றார்
இதுதான் சேடி என்னேடி?

குடகு-மேற்கு, விடை-பதில், எருது, விளம்ப-சொல்ல புகன்ற-சொன்ன.

பொதுவாகப் பெண்களுடைய இடையைப் (இடுப்பை) பற்றிச் சொல்லும்போது 'பிடி இடை' என்று சொல்லு வார்கள். கைப்பிடிக்குள் அடங்கும் இடை என்று பொருள். ஆகவே கையால் பிடிக்கப்பட்ட இடை சிவக்கும் தானே. மேலும் இடை என்ற பதத்திற்கு 'செவ்வி' என்ற பொருளும் உண்டு. செவ்வி என்றால் பருவம், மனோரதம், அழகுஎன்றும் அர்த்தம் உள. ஆகவே 'என் மனோரதத்தைப் பருவத்தால் ஏற்பட்ட வண்ணம் அதாவது கருத்தைச் சொன்னேன், என்றும் ஆண்டவன் கூறினதாகவும் பொருள் கொள்ள லாம். அந்திப்பொழுதுக்கு முன் வருவது மாலை. ஆக மாலையிடும் வண்ணம் புகன்றது என்றும் இப்படி பல பொருள்தரும் வண்ணம் இறைவன் தன் பெயர் கூறுகிறான். ஆம் இறைவன் பெயரைச் சொன்னால் சொன்னவருக்கு என்ன பொருள் - பலப்பல - கிடைக்கத் தானே செய்யும் என்பதை எவ்வளவு இங்கிதமாக ஸ்ரீ இராமலிங்க வள்ளல் எடுத்தியம்பியிருக்கிறார் என்று நினைக்கும் போது, நம் நெஞ்சம் பூரித்து விம்முகிறது.

இன்னொரு கருத்தும் இந்த இங்கிதமாலைப் பாடலில் காணலாம். உடலுக்கு+அச்சு=உடற்கச்சு. அதாவது இந்தப் பெண்ணுடைய உடலுக்கு வாகனம் உயிர். அதாவது உடலுக்கு 'அச்சு' என்கிற அச்சாணியாகியது உயிர். சிவ பெருமானுக்கும் வாகனம் விடையாகிய எருது. இந்தஉடலை உயிருக்கு ஒற்றிவைக்கப்பட்டதைப் போல என் உள்ளத்தை யும் சார்த்து ஒற்றிசெய்துள்ளீர் என்று பொருள் கூறுவதாக

Koviloor Digital Library

அமைந்த சொல் 'ஒற்றி உளீர்' என்பது. ஒற்றி என்பது இரண்டு புறமும் சேர்த்துப பொருள் கூறி நம் கருத்தை இந்தக் கவிக்கு ஒற்றிவைத்து ஸ்தம்பிக்கச் செய்கிறதே!

இப்போது நமக்கு அப்பர் பெருமான் பாடல் ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு பெண் தன்னுடைய காதல னுடைய நாமத்தை முதலில கேட்டாள். பின்பு மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். பின்னும் அவனுடைய ஊர் 'யார் ஊர் அதாவது யாருடைய ஊர் உம் ஊர், என்று கேட்பது போல அவன் உறைவிடம் கேட்டாள். பிறகு தன்நிலை தடுமாறி அவன்மீது பித்தாகி அவனுக்குப் பிச்சி ஆனாள். இதனால் அவள் தன்னுடைய அன்னை. அத்தனை (தந்தை)யும் துறந்தாள். பெணகுலததிற்குரிய கற்பு எனும் ஆசாரத்தை (ஒழுக்கத்தை) விடடு அகன்றாள். ஏன் அவள் தான் தன்னையே மறந்துவிட்டாளே! அதுமட்டும் அல்ல. அதனால் அவன் நாமமும் கெட்டுப் போயிற்று. அதாவது அவள் பெயர் தொலைந்து கணவன் பெயர்தானே அவளுக்கு வந்து சேரும். (ராமன் மனைவி என்று சொல்வதற்குப் பதில் ஆங்கிலத்தில் மிஸஸ் ராமன் (Mrs Raman) என்றுசொல்வது போல் ஸ்ரீமதி ராமன் என்று கூறுவதுபோல பெயர் தொலை கிறது)

இந்தக் கதிக்குப் பெண்கள் தம்மை மாற்றிக் கொள்ளும் அளவில் இதயம் உறுதிப்பாடு உடையவர்கள். நல்லபெண்கள் திருமணம் ஆகும்வரை அம்மாவையும் அப்பாவையும் ஒற்றி (ஒட்டி) நிற்பார்கள். பிற்பாடு அவர்கள் ஒற்றி ஊர் தன் கணவன் ஊரே. அதன்பின் அவள் தன் தலைவன் திருவடி களுக்கே தலைப்பட்டு விடுகிறாள் என்ற அப்பர் பாடலின் கருத்தும் ஐயா வள்ளற் பெருமான் பாடலின் கருத்தும் 'பெயர்' அளவில் மட்டுமன்றி ஆழ்ந்த கருத்தளவிலும் ஒத்து இருப்பதைக்கண்டு மகிழலாம். இதோ அப்பர் பாட்டு.

''முன்னம் அவனுடை நாமம் கேட்டாள்
மூர்த்தி அவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னும் அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையும் அத்தனையும நின்றே நீத்தாள்
அகன்றாள் அகனிடத்தே ஆசாரத்தை
தன்னை மறந்தாள் தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தானே.

Koviloor Digital Library
A.No: 17184

(ஆரூர்—இங்கே அப்பர் திருவாரூரைக் குறிப்பிடுகிறார். பிச்சி—பைத்தியக்காரி. அத்தன்—தந்தை, அகன்—உள்ளம்)

தாய்க்குலமாகிய பெண்கள் தன் பிறந்த வீடு, அம்மா அப்பா, உற்றார் உறவினர் பிறந்த ஊர் எல்லாம் விடுத்து மறந்து திருமணம் ஆனதும் தம் கணவர் பெயர், ஊர், உறவினர்களையே தனக்கு மிகவும் நெருக்கமாக்கிக் கொள்கிற பண்பு ஒரு பக்தனுக்கு ஏற்பட வேண்டும். அவனும் தன் சுற்றம் சொந்தம் மறந்து தன் தலைவனுடைய தாளைச் சேர்ந்துவிட வேண்டும் என்பதே இப்பாடலின் கருத்து. இந்த தியாக உள்ளம் தேவியருக்கே உண்டு என்பது பொய்யா? பெண்களிடம் ஆண்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடம் இது. இதனாலேதான் வள்ளலார் தன்னைப் 'பெண்ணாய் ஆணுருவாய் என்னைப் பெற்ற பெருந்தகையே' என்று கூறுகிறார்.

ஆகவே தேவியருக்கு எல்லாம் தேவருக்கு எல்லாம் கூடத் தேவியாகிய 'வடிவுடை அம்மை' என்ற தாயார் திருவொற்றியூரிலே எழுந்தருளியிருக்கிறாள். அவளுடைய பெயரைச் சொன்னாலும் இறைவன் பெயரைச் சொல்வது போன்றதே. காரணம் அவள் பெருமானின் பாதி — ஏன் உச்சியிலும் ஆற்றுப்படுத்த கங்கையாக இருக்கிறாளே.

ஆக அப்பேர்க்கொத்த அம்மையின் திருநாமத்தைச் சொன்னால் நமக்கு என்னவெல்லாம் கிடைக்கும் என்று கூறுகிறார். வாழ்நாள் மிகக் கிடைக்கும் வறுமை என்பது எட்டிப் பார்க்காது. நல்ல வீடு கிடைக்கும். நல்ல மக்கள் பெறலாம். பொன், பூணக் கூடியவை, நல்ல ஆட்களுடைய தொடர்பு, நல்ல வீட்டிற்குரிய இடமும், புகழ், மகிழ்ச்சியால் ஏற்படும் போதமாகிய இன்ப நிறைவு இத்தனையும் கிடைக்கும். ஆனால் புன்மை என்பதே காணமாட்டார்கள். இந்தத் தேவிப் பெண்ணும் தன் ஒற்றிக் கண்ணுதலாகிய சிவபெருமானிடம் மாண்புமிக்க ஆர்வம் உடையவள். சாதாரண உலகியல் துறையில் உள்ள பெண்களே தன் கணவர் மீது ஆர்வமாக இருக்கும்போது தேவி—அதிலும் தனது நெற்றிக் கண்களை அவளுக்கே ஒற்றியாக வைத்தவர் — அவளுடைய நாதன் அவரிடம் நிறை ஆர்வமாக இல்லாமல் இருப்பாளா? ஆகவே மயில் போன்ற பேரழகு நாயகியாகிய வடிவுடை

Koviloor Digital Library

மாணிக்கத்தின் பெயரை நீங்கள் கருதிச் சொல்லுங்கள் என்று வள்ளலார் பாடிய பாடல் இதோ.

''வாணுள் அடைவர் வறுமை உரு‍ர் நன்மனை மக்கள் பொன் பூண் ஆள் இடம், புகழ், போதம் பெறுவர் பின் புன்மை
ஒன்றும்
காணுர் நின் நாமம் கருதுகின்றோர் ஒற்றிக்கண் நுதல்பால்
மாண் ஆர்வம் உற்ற மயிலே வடிவுடை மாணிக்கமே!"

பெயரை நீங்கள் சொல்லக்கூட வேண்டாம். தேவியாகிய வடிவுடை அம்மையின் நாமத்தை உள்ளத்தால் கருதினாலே இத்தனை நன்மைகளும் இன்ப நிறைவும் என்றால் அதை நாம் சொன்னால் பலனைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

எனவே ஆன்மநேய ஒருமைப் பாட்டிற்குரிய அன்பர்களே பக்தியால் நீங்கள் ஆண்டவனுடைய நாமஜப வேள்வியில் உங்கள் உள்ளத்தை ஆட்சி செய்து கொள்ள வேண்டும். அதன் பலன் மிகப் பெரியது என்று சொல்லி வாழ்க இறைவன் அருள் திரு நாமம் வாழ்க! வாழ்கவே! என்று இதனை முடிக்கிறேன்.

அடுத்து, ராமநாம மகிமை பற்றிய இந்தக்கதை மிகவும் தலைப்புக்குப் பொருத்தமான ஒன்று என்பதால் அதையும் இதோ இணைத்திருக்கிறேன்.

5. ராம நாம மகிமை

முன்னொரு சமயம் ஓர் ஊருக்கு வெளியே ஒரு ஞானி வசித்து வந்தார். ஒரு பக்தர் தினந்தோறும் போய் அவரைச் சந்தித்து, அவர் காலில் விழுந்து வணங்கி அவருக்கு, வேண்டிய பணிவிடைகளைச் செய்வார், பிறகு வீடு திரும்புவார்.

சில மாதங்கள் இப்படித் தொடர்ந்து நடந்தது. அதனால் ஞானிக்கு பக்தர் மீது தயை பிறந்தது. ஒருநாள் அவர் பக்தரைத் தம் பக்கத்தில் அழைத்து, ''உன் குரு பக்தியையும் தெய்வ பக்தியையும் பெரிதும் மெச்சுகிறேன். அதற்காக நான் உனக்கு விலை மதிக்க முடியாத வெகு ரகசியமான பொருளைக் கொடுக்கப் போகிறேன். அதை நீ யாருக்கும் கொடுக்கக் கூடாது. இந்த விலையுயர்ந்த பொருள் உன்னிடம் இருப்பதாகவே யாருக்கும் தெரியக்

Koviloor Digital Library

கூடாது" என்று சொல்லி அவன் காதில் 'ராம' என்ற மந்திரத்தை ஓதினார். ''இதை நீ எந்தக் காலத்திலும் ஜபித்துக் கொண்டிரு. உனக்கு எல்லா நன்மையும் கிடைக்கும்' என்று சொன்னார். பக்தரும் அன்றையி லிருந்து விடாமல் ராம நாமத்தை ஜபிக்கத் தொடங் கினார்.

ஒருநாள் அந்தப் பக்தர் ஸ்நானம் செய்வதற்காகக் கங்கைக்குச் சென்றார். ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிய பொழுது பலர் ராம நாமத்தைச் சொல்லிக் கொண்டே வீடு திரும்புவதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்.

''நம் குரு, 'இதை யாருக்கும் சொல்லாதே. இது மிகவும் ரகசியமானது' என்று சொன்னாரே! இது எல்லோ ருக்கும் தெரிந்திருக்கிறதே! அப்படியிருக்க அதை மிக விலையுயர்ந்த பொருள் என்று எப்படி நினைப்பது?'' இப்படிப் பல சந்தேகங்கள் அவரை வாட்டத் தொடங்கின.

அடுத்த நாள் காலை, பொழுது விடிந்ததும் விடியாததுமாக அவர் அந்த ஞானியைப் பார்த்துத் தம் சந்தேகத்தைத் தெரிவித்தார்.

ஞானி அவரைப் பார்த்து, ' நான் உன் சந்தேகத்தைத் தெளிய வைக்கிறேன். அதற்கு முன்பு நீ எனக்கு ஒரு காரியம் செய்'' என்று சொல்லி, தம் பையிலிருந்த பளபளவென்று மின்னியதும், கண்ணாடித் துண்டைப் போன்று தோற்ற மளித்ததுமான ஒரு பொருளை எடுத்தார். அதைப் பக்தரிடம் கொடுத்து, ''இதைக் கடைவீதிக்கு எடுத்துக் கொண்டு செல், எல்லோரையும் இதன் விலை என்ன என்று விசாரி. ஆனால் யாரிடமும் விற்று விடாதே!'' என்று சொன்னார்.

பக்தர் அந்தக் கண்ணாடித் துண்டைக் கடை வீதிக்கு எடுத்துச் சென்றார். எதிரே வந்த ஒரு கறிகாய்க்காரனைப் பார்த்து ''இதற்கு என்ன விலை கொடுப்பாய்?" என்று கேட்டார். கறிகாய் வியாபாரி அதை வாங்கிப் பார்த்தான். ''இது பளபளவென்று மின்னுகிறது. இதை நம குழந்தை களுக்கு விளையாடக் கொடுத்தால் அவர்கள் சந்தோஷப் படுவார்கள்! என்று நினைத்தான். ஆகவே பக்தரைப் பார்த்து, ''இதற்குப் பதில் இரண்டு சேர் உருளைக்கிழங்கு தருகிறேன்'' என்றான்.

Koviloor Digital Library

"இல்லை, இதை விற்பதற்கில்லை" என்று சொல்லி விட்டு. பக்தர் மேலே சென்றார். ஒரு பொற்கொல்லரின் கடை தென்பட்டது. பொற்கொல்லரிடம், "இதற்கு என்ன விலை கொடுப்பீர்கள்?" என்று பக்தர் கேட்டார். பொற் கொல்லர் அதை வாங்கிப் பார்த்தார். "பார்த்தால் போலி வைரம் போலத் தோன்றுகிறது. நூறு ரூபாய் கொடுக்க லாம் என்று நினைக்கிறேன்" என்று தம் மனதிற்குள் சொல்லிக் கொண்டார். பக்தரைப் பார்த்து "இதற்கு நூறு ரூபாய் தர முடியும். கொடுக்கிறீர்களா?" என்று கேட்டார்.

"இல்லை, இதை விற்பதற்கில்லை," என்று சொல்லி விட்டு, பக்தர் மேலே சென்றார்.

வழியில் ஒரு வேவாதேவிக்காரர் தென்பட்டார். அவ ரிடம் பக்தர், "இதற்கு என்ன விலை கொடுப்பீர்கள்?" என்று கேட்டார்.

'பார்த்தால் அசல் வைரம் அல்ல என்று தோன்றுகிறது. ஆனால் இத்தனை பெரியதாக இருப்பதால் இதை யாரும் போலி என்று நினைக்க மாட்டார்கள். ஆகவே அதற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம்" என்று நினைத்தார். ஆகவே பக்தரைப் பார்த்து "நான் ஆயிரம் ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். கொடுக்க முடியுமா?" என்று கேட்டார். "இல்லை கொடுப்பதற்கில்லை" என்று சொல்லிவிட்டு, பக்தர் மேலே சென்றார்.

வழியில் ஒரு சிறு நகைக்கடை தென்பட்டது. அதற்குள் நுழைந்தார். நகை வியாபாரியைப் பார்த்து, "இதற்கு என்ன கொடுப்பீர்கள்?" என்று கேட்டார். நகை வியாபாரி அதை வாங்கிப் பார்த்தார். "பார்த்தால் அசல் வைரம் போலத் தோன்றுகிறது! இந்த நல்ல வைரம் இந்த ஆளுக்கு எப்படிக் கிடைத்தது? என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டே பக்தரைப் பார்த்து, "இதற்கு லட்சம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். கொடுக்க முடியுமா?" என்று கேட்டார். "இல்லை, கொடுப்பதற்கில்லை" என்று சொல்லிவிட்டு பக்தர் மேலே சென்றார்.

சிறிது தூரம் சென்றதும், அந்த ஊரிலேயே மிகப் பெரிய நகை வியாபாரி என்று கருதப்பட்ட ஒரு வியாபாரியின் கடை வந்தது. நகை வியாபாரியைப் பார்த்து பக்தர்,

Koviloor Digital Library

''இதற்கு என்ன கொடுப்பீர்கள்?'' என்று கேட்டார். நகை வியாபாரி அதை ஆச்சரியத்தோடு பார்த்தார். கடைசியில் பக்தரைப் பார்த்து; ''இது மிகவும் விலையுயர்ந்த வைரம். இத்தனை பெரிய வைரத்தை நான் இதுவரை பார்த்ததே இல்லை. இதன் உண்மை விலையை யாராலும் கொடுக்க முடியாது. அத்தனை பொருள் நம்நாட்டு அரசரிடம் கூட இல்லை. ஆகவே இத்தனை பெரிய வைரத்தை என்னுல் வாங்கிக் கொள்ள இயலாது" என்று கூறி, அதைப் பக்தரிடம் திருப்பிக் கொடுத்தார்.

பக்தர் ஞானியிடம் திரும்பி வந்து நடந்த எல்லா விஷயங்களையும் சொன்னுர்.

''ஒரு பொருளின் மதிப்பு அதைப் பொறுத்தது அல்ல; அதை மதிப்பிடுகிறவர்களைப் பொறுத்தது. ஆகவே அந்தப் பெரிய நகை வியாபாரி எப்படி இதை எப்படி விலை மதிக்க முடியாது என்று சொன்னுரோ அப்படியேதான் எனக்கும் ராமநாமம் விலை மதிக்க முடியாதது. அதைப் போலவே உனக்கும் ராமநாமம் விலை மதிக்க முடியாததாக இருக்கட்டும்" என்று சொன்னார் ஞானி.

(இந்தக் கதை 'ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்' என்ற வார சஞ்சிகையிலிருந்து எடுத்து கையாளப்பட்டிருக்கிறது. அந்தப் பத்திரிகைக்கு இதன் மூலம்' நன்றி சொல்லிக் கொள்கிறேன்.)

6. ஆத்ம ஞானம்

'தன்னை அறிதல்' என்பதுதான் ஆத்ம ஞானம். அடிக்கடி ஸ்ரீ ரமணமகரிஷிகள் அடிப்படையாக இதையே கூறியிருக்கிருர். முதலில் ''நான் யார்?" என்ற கேள்வியைப் போட்டு இதற்கு நீ ஒரு விடையைத் தேடிக்கொள். அது தான் - அந்த விடைதான் - ஆத்ம ஞானத்திற்கு உன்னை அழைத்துச் செல்லும் பேரொளி எனக் கூறினுர். இதையே வள்ளற் பெருமானுர் திருவருட்பாவில் தேனாகப் பாடுகிருர்.

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே—ஒரு
தந்திரம் நீ செய்ய வேண்டும் வெண்ணிலாவே?

Koviloor Digital Library

'பிறப்பு' என்ற நோய் நீங்க வேண்டி நாம் உண்ண வேண்டிய மருந்து 'ஆத்ம ஞானம்'. இந்த வார்த்தையைச் சொன்னாலே லௌகிகத்தில் திளைத்தவர்களுக்குக் கசக்கும். ஆக தேனில் குழைத்துக் கசப்பைத் தந்திரமாகத் தருகிறார், ஸ்ரீராமலிங்கர். ஆம் தன் திறமாகவே வள்ளல் தருகிறார்.

வள்ளலார் பெருமான் தன்னை அறிவதற்கு வெண்ணிலாவைப் போய் வேண்டிக்கொண்டாரே? ஏன் தெரியுமா? அவர் வெண்ணிலாவைப் பார்த்து விளித்துப் பாடிய பாடல் இது. "தன்னை அறிந்து இன்பமுற பாங்கிமாரே - ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் பாங்கிமாரே!" என்று பாடியிருக்கலாம். "அம்பலத்தில் ஆடுகின்றார் பாங்கிமாரே அவர் ஆட்டம் கண்டு நாட்டம் கொண்டேன் பாங்கிமாரே!" என்று பெண்களைப் பார்த்துப் பாடாமல் உயிர்ப் பொருளற்ற ஆகாய வீதியில் தோன்றும் ஒரு தோற்றப் பிரகிருதியைப் பார்த்துத் தன்னை அறிந்து இன்பமுறத் தந்திரம் தர வேண்டும் என்று அவர் காரணமில்லாமல் விளக்க மாட்டார். ஏன்? அவரே அருட்பாவில் பிறிதோர் இடத்திலே பேசுகிறார். "நாலுரைக்கும் வார்த்தை எல்லாம் நாயகன் தன் வார்த்தை. மேலும் நான் யார்? எனச்சென ஓர் ஞானவுணர்வு ஏது? சிவன் வனாடியில்லா உழி!" என்று சொல்லியிருக்கிறார் அல்லவா?

இந்த் நிலவுக்கு மதி என்று ஒரு பெயர் உண்டு. இதைச் சிவபெருமானே தலையில் சூடியிருக்கிறார். இது வளர்மதி. எல்லா உயிர்களும் இறைவனே. அதையும் பெருமான் "உயிரெலாம் ஒரு நீ திருநடம் புரியும் இடம் எனத் தெரிந்தேன்!" என்றும், "உயிருள் யாம் எம்முள் உயிர் இவை உணர்ந்தே உயிர் நலம் பரவுக என்று உரைத்த மெய்ச் சிவமே!" என்றும், நமக்கு அருட்பா அகவல் மூலம் எடுத்து ஓதியிருக்கிறார். ஆக நமக்கும் தலையில் மதியாகிய அறிவு வளர்மதியாக இருந்தால் ஞானமுதிர்ச்சி ஏற்படும் என்பதற்காக வெண்ணிலவை விளிக்கிறார். வெண்ணிலா என்று சொன்னால் அது பிறை அல்ல. முழுநிலவு.பௌர்ணமி நிலவு. ஆகையினாலேயே இந்த விளக்கம் பொருந்தாது என்று நினைக்கிறீர்களா? முழு நிலவின் ஒளி பொழிந்தது போல இரவைப் பட்டப் பகலாக்கிக் காயும் ஆத்ம ஞானம் என்ற அறிவு ஒளியும் இருண்ட வாழ்வை ஒளிபெறச் செய்யும். மேலும் தேய்ந்து போனாலும் எப்படியும் வளரத்தான்

Koviloor Digital Library

செய்யும். அறிவு வளர்ச்சியால் உள்ளக் கிளர்ச்சி. அதனால் மெய்யுணர்ச்சி ஏற்படுகிறது. நிலவிலே காய்ந்தவன் மனம் பேதலிக்கும். அந்தப் பேதலிப்பிலிருந்து விலகவும் தந்திரம் நிலவிடத்தே இருக்கிறது என்றே வெண்ணிலாவைப் பார்க்கிறார். "தன்னை அறியும் தந்திரம் நீ சொல்ல வேண்டும்!" என்று கேட்கிறார். ஆம் புராணக் கதையிலே சந்திரனை- அவனுக்கு 27 பெண்களைத் தாரமாகத் தாரை வார்த்த மாமனே -நீ தேயக் கடவது!" என்று சபிக்கிறார். காரணம் அவன் 27 பெண்களில் இரண்டு பெண்களை மட்டும் மிகவும் நேசித்தான். மற்றவர்களை உதாசீனம் செய்தான். ஆக ஏனைய 2 பெண்களும் தன் தந்தையிடம் கூறி இந்தச் சாபத்தைப் பெற வைத்தனர். மும்மூர்த்திகளிடம் சந்திரன் சென்று இந்த சாப விமோசனத்திற்கு வழி கேட்டான் அவர்கள் உன் மாமனுக்கு வரம்கொடுத்தவனே சிவபெருமான். அவன் பெற்ற வரத்தினால் உன்னை சபிக்கிறான். ஆகவே நீ சிவபெருமானைச் சரண் அடைவது தவிர வேறு கதி இல்லை" என்றார்கள். எனவே அவன் சென்று அம்மை அப்பாபெருமானே நீயே கதி! என்றுசிவனின் காலடியிலே வீழ்ந்தான். தட்சன் செய்த தவத்தை மெச்சி அவனுக்கு வரம் அருளிய வள்ளல். தன்னையே கதி என்றவனுக்கு ஒன்றும் அருள் புரியாது போனால் அவனை ஆண்டவன் என்று அழைப்பதில் அர்த்தம் இருக்காதல்லவா? கருணையே வடிவினன் அருள் ஜோதி உருவினன். "கருணையும் சிவமும் ஒன்று!" என்பரே ஸ்ரீ இராமலிங்கப் பெருமான்! ஆக கதியற்று வருபவருக்கு கருணைதந்து அருளுவதுதானே கடவுள் தன்மை! என்றாலும் ஒரு சிக்கல் சிவபெருமானுக்கு ஏற்படுகிறது இங்கே.

தட்சனுக்கும் வரம் நல்கினோம். அதன் காரணமாகவே சந்திரனைத் தேயக் கடவது என்று சபித்திருக்கிறான். ஆக அப்படித் தேயாது போதும்படி மதிக்கும் அருள் செய்தால் முன்பு தட்சனுக்குக் கொடுத்த தன்வரம் பொய்த்துப் போகுமே! தானே கொடுத்த வரத்தைத் தானே அழித்துக் கொள்வதா? கூடாது. சரி! இங்கே கதியற்று மதி முற்றும் சரணாகதி என்று என்னிடம் தன்னைத் தந்திருக்கிறான், "ஆக இதற்கு என்ன தந்திரம் செய்வது?" என்று சிவபெருமான் யோசித்தார். ஆகவே தட்சன் சாபப்படி நீ தேயவும், என் திருவருள்வேண்டி சரண் அடைந்ததால் மீள நீ வளரவும் அருள் தந்தேன்!" என்றார் ஆண்டவன். இப்படித் தன் திற

Koviloor Digital Library

மாகத் தந்திரம் செய்தார் ஈசன். இந்த வரலாறு தெரிந்தவன் நிலவன்—வெண்ணிலா! ஆக நீ உன்னை அறிந்து உணர்ந்து எல்லாவற்றையும் துறந்து அவன் காலடியிலே விழுந்ததும் அவன் உன்னைத் தலையிலேயே சூடிக் கொண்டான். 27மனைவி யரில் 25பேரிடம் பற்றற்று நின்றதால்—கடைசியில் இருமனைவி யரையும் கூடத் துறந்து ஈஸ்வரசந்நிதியில் வந்து விழுந்த ஆத்மஞானம் அவனை தலையில் சூடிக் கொள்ளும்படி ஆயிற்று.

மற்றென்று! மகேஸ்வரன் தலையிலே மதியோடு மாது—கங்கை ஒருத்தியையும் வைத்திருக்கிறான். பெண் என்பது மனம். மதி அதாவது அறிவு என்பது ஆண். மனத்தை அறிவோடு சேர்த்து முடித்து விட்டால்தான் அதற்கு அமைதி கிடைக்கும். (இதையே வள்ளலார் பெண்ணியல் மனமும் ஆணியல் அறிவும் என்று அகவலில் சொல்லியிருக்கிறார்) பின்பு அருளும் சிவமும் உச்சி முதல் உள்ளங்கால் வரை சரி பாதியாக இருப்பதைப் பார்க்கிறோம். இந்தத் தந்திரத்தையும் மதி சூடப்பட்டதால் மனதாகிய பெண்மை அடங்கும். அடுத்து ஞானத்தைப் பார்க்கமுடியும். இறைவனுடைய நுதல் விழி முகலோப தெரிசனம் பின்னர் வருகிறது.

இந்த ஆத்ம ஞானம் பெறுவதற்கு வயது முதிர்ச்சி தேவை இல்லை. ஒரு சிலருக்கு மிகவும் இளமையிலேயே பச்சைப் பாலகனாக இருக்கும் போதே ஏற்படும். ஒரு சிலருக்கு அனுபவ வயது முதிர்ச்சியில் ஞானம் திகழும் என்பதைக் காட்டவே ஞானசம்பந்தப் பெருமானையும் நாவுக்கரசரையும் தொண்டர் தத்துவ சரிதமாகத் தெரிவிக்கப்பட்டது.

நாதர் முடி மேலிருக்கும் வெண்ணிலாவே — அங்கே
நானும் வர வேண்டுகிறேன் வெண்ணிலாவே

என்று பாடும் அடிகளுக்கு இலக்கியமாக கடோ உபநிஷத்தில் ஒரு கதை வருகிறது. நசிகேதன் என்பவனைப் பற்றிய கதை அது. இந்தக் கதையின் மூலம் வேள்வி செய்பவர்கள் அனைத்தையும் தானம் செய்துவிட வேண்டும் என்பது உறுதி செய்யப்படுகிறது.

நசிகேதனுடைய தந்தை ஒரு வேள்வி செய்தான். அவனுடைய தந்தை அவ்விதம் எல்லாப் பொருளையும் கொடையாகக் கொடுக்கவில்லை. தந்தை செய்த வேள்வியை நன்கு கவனித்து வந்த நசிகேதன் இதைப் பார்த்து விட்டு கொஞ்ச

Koviloor Digital Library

நேரம் யோசித்தான். இது சமயம் தந்தையைத் தடுத்து ஏதேனும் சொல்வது மரியாதைக் குறைவானது என்பதால் சும்மா இருந்தான். எனினும் யக்ஞம் செய்பவர்கள் அனைத்தையும் தியாகம் செய்ய வேண்டும் என்ற நியதியை நினைவூட்ட எண்ணினான். அந்த நோக்கத்தோடுதன் தந்தையிடம் "அப்பா! நீங்கள் என்னை யாருக்குத் தானம் செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டான்.

அவனுடைய தந்தை எந்த பதிலும் சொல்லவில்லை. எனினும் சிறுவனாகிய நசிகேதன் இதே கேள்வியை விடாது மூன்று முறை கேட்டான். அதற்கு ஆத்திரமும் கோபமும் கொண்ட அவனுடைய தந்தை எரிச்சலோடு ",உன்னைமரண தேவனாகிய யமனுக்குக் கொடுக்கப் போகிறேன்!" என்றான். தன் தந்தையின் வாக்கை நிறைவேற்ற வேண்டி நசிகேதன் நேரே யமபட்டினம் வந்து யமன் வீட்டிற்குப் போனான். அங்கு அப்போது யமன் வீட்டில் இல்லை. எனவே எப்படியாவது யமனைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தில் யமன் வீட்டின் முன்பு மூன்றுநாள்கள் அன்ன ஆகாரமின்றிகாத்துக் கிடந்தான்.

நான்காவது நாள் யமன் வீடு திரும்பினான். தன்னைப் பார்க்க வந்த விருந்தினன் மூன்று நாள்கள் அன்ன ஆகாரமில்லாது இருக்க நேர்ந்தால் யமன் மிகவும் வருந்தினான். பிறகு சிறுவனிடம் சொன்னான். "இந்த அவமரியாதைக்காக நீ என்னை மன்னிக்க வேண்டும். நீ என் வீட்டின் முன்பு மூன்றுநாள்கள் பட்டினியாகக் காத்து இருந்ததற்காக நான் மூன்று வரங்கள் தருகிறேன் கேள்!" என்றான்.

எனவே முதல் வரம் அவன் தந்தை இவன் யமலோகத்திலிருந்து திரும்பியதும் இவனை அடையாளம் புரிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இரண்டாவது வரம் ஒருவேள்வி சம்பந்தமானது. அதற்கும் யமன் சம்மதித்தான். அதுமுதல் அந்த மாதிரி வேள்விகளுக்கு நசிகேத வேள்வி என்று பெயர் வழங்கலாயிற்று. மூன்றாவது வரம் என்ன என்பதை விளக்கிச் சொல்கிறான்.

"ஒருசிலர், மரணத்திற்குப் பின்பு மனிதர்களுடைய ஆன்மாக்கள் இருக்கின்றன என்றும், ஒருசிலரோ அப்படி இல்லை என்றும் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது பற்றிய உண்மையை யமதர்ம ராஜாவே நீங்கள் எனக்கு அறிவிக்க வேண்டும்!" என்று நசிகேதன் கேட்டான்.

Koviloor Digital Library

அதற்கு யமன் சொன்னான். "தெய்வங்களுக்குக்கூட இதற்குப் பதில் சொல்லத் தெரியாதே! இந்தக் கேள்வியை நீ ஏன் கேட்கிறாய்? இதற்கு பதில் நீ உனக்கு வேறு ஏதாவது கேள். அரசாட்சி, செல்வம், சுகம், ஸ்வர்க்கம், மாட மாளிகைகள், ஆடல் பாடல் மற்றும் இவைபோன்ற இன்பம் தரும் பொருள்களைக் கேள். தருகிறேன். ஆனால் மரணத்தைப்பற்றிய அந்தக் கேள்வியை மட்டும் கேளாதே" என்றான்.

"இந்த ஆடல், பாடல், ஸ்வர்க்கசுகம் முதலியன எனக்கு வேண்டாம். நிலையற்ற இந்தப் பொருள்களை வைத்து நான் என்ன செய்யப் போகிறேன்? நான் கேட்ட மூன்றாவது வினாவுக்கு விடைதான் வேண்டும்!"

இந்தக் கேள்வி ஆத்ம சம்பந்தமானதால் அவனுக்கு யமன் ஆத்ம ஞானத்தைப் போதிக்க வேண்டும் என்று நினைத்தான். நசிகேதனுக்கு ஆத்ம ஞானத்தை ஏற்றுக் கொள்ளும் தகுதி இருக்கிறதா என்று சோதிக்கவே பொன்னும் பொருளும் ஆகிய கவர்ச்சி-வஸ்துக்களைத் தருவதாக வாக்களித்தான். நசிகேதனோ அதில் பிரியப்பட்டான் இல்லை. இவற்றை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று அவன் கூறியதால் யமன் ஆத்மஞானத்தை நசிகேதனுக்கு உபதேசம் செய்தான்.

இதன்மூலம் என்ன தெரிகிறது? வேள்வியின் பொருட்டு நசிகேதன் தன்னையே அர்ப்பணிக்கத் தயாராகி விட்டான். ஆகத் தன்னை உணர அவன் தலைப்பட்டான். 'ஆத்மாவே தான் பரப்பிரம்மம். இருப்பும் இல்லாமையும் கற்பனையே. என்ற நிச்சயபுத்திக்கு வந்து விட்டான். ஆசைகள் அற்றவனாக அவன் மாறிவிட்டதால் அவன் எதை அறிய வேண்டுமோ அதைத் தெரிந்து செயல்பட்டான்.

இப்படிப்பட்ட ஆத்ம ஞானிகளுக்குக் கிடைக்கும் பேறுகளை எல்லாம் வெண்ணிலா பாட்டில் பெருமானார் மேலும் விளக்குகிறார்.

ஆத்ம ஞானிகள் மும்மலத்தையும் சுட்டு எரித்தவர்கள். அதாவது அவர்களிடம் ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றும் இருக்காது. அவற்றை வென்றவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய ஞானவேள்வியில் அவர்கள் இந்த மும்மலத்தை ஆஹுதி செய்கிறார்கள். மலங்களைச்சுட்டு எரிப்

Koviloor Digital Library

பதற்கும் ஒருவழி சொல்வாய் வெண்ணிலாவே என்றும் பெருமான் பாடுகிறார்.

"வேதமுடி மேலிருந்த வெண்ணிலாவே—மல
வேதையுளவு ஏது சொல்வாய் வெண்ணிலாவே"

கிருஷ்ண யஜுர் வேதம் தைத்திரிய சம்ஹிதை 6 ஆம் புத்தகம் 2ஆம் அத்தியாயம் 4ஆம் பகுதி சோபயிது"வே! !" என்று கூறும் இடம் மஹாவேதியாகிய மும்மலங்களைச் சுட்டெரிப்பதையே குறிக்கும். 'வேதி' என்ற சொல்லுக்குத் தீ வளர்க்கும் இடம் என்று பெயர். அதன் பொருள் வென்று பெற வேண்டியதை வென்றுவிடுவது என்பதுதான்.

ஓரெழுத்தில் ஐந்து உண்டு என்பார் வெண்ணிலாவே—அது
ஊமை எழுத்து ஆவது என்ன வெண்ணிலாவே."

இந்த அடிகளில் பெரிய தத்துவம் அடங்கியிருக்கிறது. அதை விளக்கமாகக் காண்போம்.

இங்கே பேசப்படும் ஓர் எழுத்தும் ஊமை எழுத்தும் "ஓம்!" என்கிற பிரணவமே தான். அதன் விரிவு இதோ. "நா" என்ற எழுத்து ஓரெழுத்து. இதில் ஐந்து உண்டு என்பது. ஐந்து அமுதங்கள் இதில் இருக்கின்றன. இதை வள்ளற் பெருமான் தமது வசன பாகத்தில் கீழ்க்கண்ட பிரகாரம் எழுதி இருக்கிறார். ஆழ்நிலை தியானம் செய்பவர்கள் பெறுகிற அமுதவகைகள் ஐந்து என்று மகுடமிட்டு எழுதுகிறார்.

பஞ்ச அமுத ஸ்தானங்கள்

"யோகானுக்கிரக பஞ்ச அமுத ஸ்தானங்கள் ஐந்து.

1வது அமுதம்—நாக்கு நுனியில், பக்குவ ஞானத்தால் சிருஷ்டி வல்லப பிரக்ஞையால்

2வது புவன அமுதம்—நாக்குமத்தியில், பக்குவக்கிரியையால் ஸ்திதி பிரக்ஞை உணர்வால்

3வது மண்டலா அமுதம்—நாக்கின் அடியில், பக்குவ இச்சை, சம்மார உணர்ச்சியின் தன்மையினால்

4வது ரகசியாமுதம் உள் நாக்குக்கு அடியில் பக்குவ திரோபவம்

Koviloor Digital Library

5வது மௌனமுதம் உள் நாக்குக்கு மேல் பக்குவ அனுக்கிரகம், அனுக்கிரகம—சுபாசத்தினது அனுபவம், துரியநிலை.

இந்த ஐந்து அமுதங்களின் ஸ்தானங்களையும், தன்மையையும் கூறுவது காண்க.

1வது அமுதம் நாக்கின் அடியில் இனிப்புள்ள ஊற்று ஜலம்போல் இருக்கும்.

2வது அமுதம் உள் நாக்குக்கு மேல் இளகின இனிப்பு உள்ள சர்க்கரைப் பாகு போல் இருக்கும்.

3வது அமுதம் மூக்கு முனையில்—குழம்பிய சர்க்கரைப் பாகு போல இருக்கும்.

4வது அமுதம் நெற்றி நடுவில் முதிர்ந்த சர்க்கரைப் பாகுபோல இருக்கும்.

5வது அமுதம் மகா இனிப்புள்ள மணிக்கட்டியாக இருக்கும். அதிகக் குளிர்ச்சியாகவும் இருக்கும்.

இந்த 5வது அமுதத்தை உண்டவர்கள் என்றும் அழியாத தேக சித்தியைப் பெற்றவர்கள்.

அதாவது "மரணமிலாப் பெருவாழ்வு பெற்ற ஆத்ம ஞானிகள் என்று கூறுவர்.

இப்படி ஓர் எழுத்தாகிய 'நா' வில் ஐந்து அமுதங்கள் உண்டு. அவற்றை உண்டவர்கள் ஊமை எழுத்தாக பிரணவமாக மாறுகிறார்கள்.

சன்மார்க்கத்தில் சுத்த சமரச சத்திய சன்மார்க்கிகள் தங்கள் உடம்போடு (அதாவது தேகசித்தியோடு) பெறுகிற நிலை மூன்று. சுவர்ணதேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என்பவற்றைப் பெறுவர். இதை அன்புருவம், அருளுருவம், இன்புருவம் என்று வள்ளலார் பேசுவார். மணிவாசகப் பெருமானைப் பற்றிக் கூறும்போது இந்த மூன்று தேகசித்திகளையும் அவர் பெற்றாராம்.

"மன் புருவ நடு முதலாம் மனம் புதைத்து நெடுங்காலம்
என் புருவத் தவம் செய்வார் எல்லாரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன் பின் அருளுருவம் அடைந்து பின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில்வாத வூர் இறையே

(மன்—மனித, என்பு—எலும்பு, ஏமாக்க—ஏமாறும்படி)

Koviloor Digital Library

எழிலார்ந்த திருவாதவூர்ப் பெருமானே! (மணிவாசகரைத் திருவாதவூரார் என்றும் சொல்வார்கள்.) உலகத்து மாந்தர் தங்கள் புருவ மத்தியிலே தங்கள் மனதைப் புதைத்து தங்கள் எலும்பு உருகுப்படித் தவம் செய்தும் கூட பலர் ஏமாற்றத்தையே பெற்றனர். ஆனால் நீயோ அன்புருவமாகிய சுத்த தேகம், அருள் உருவமாகிய பிரணவ தேகம், இன்புருவமாகிய ஞான தேகம் ஆகிய மூன்றையும் ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்றனை என்று சொல்லுவார்கள்.

இங்கே இந்நிலையில் உள்ளவர்களை சுத்த சமரச சன்மார்க்க நெறி நின்ற ஆத்ம ஞானிகள் என்றுதான் குறிப்பிடவேண்டும். பிரணவ தேகம் பெற்ற பிறகுதான் 'ஆணவம்' என்ற மலம் ஆண்டவர் அருளாலே விலகும் என்பதைத் பெருமானார் ஒரு பாடலிலே சொல்லுகிறார்கள்.

ஓங்கார அணைமீது நான் இருந்த தருணம்
உவந்து எனது மணவாளர் சிவந்த அடி அகன்றே
ஈங்காரப் பளிக்கு வடிவு எடுத்து எதிரே நின்றார்
''இருந்தருள்க!'' ''என எழுந்தேன், எழுந்திருப்பது என் நீ!''
''ஆங்காம் ஒழி!'' என்றார் ஒழித்தனன் அப்போது
நான்தானோ அவர்தானோ அறிந்திலன் முன்குறிப்பை
ஊங்கார இரண்டு உருவும் ஒன்றானோம் ஆங்கே
உறைந்த அனுபவம் தோழி நிறைந்த பெருவெளியே:''

(தருணம் - நேரம், உவந்து - மகிழ்ந்து, ஈங்கு - சந்தனம், ஆரம் - முத்து (போன்ற), பளிக்கு — ஸ்படிகம் (போன்ற) என் - என்ன? அறிந்நலன் - அறிந்திலேன, ஊங்கு - உயர்வு, ஆடும் - அசையும், ஆரம் - கற்பூரம், ஆங்கே - அங்கே, உறைந்த - நிலைத்த, பெருவெளி - பேரனுபவம்.)

'ஓம்' என்றது பிரணவ வடிவான தேகம். இதன் இயல்பும் மற்ற தேகங்களின் இயல்புகளையும் 'தேக வகை மூன்று' என்று ஐயா அவர்கள் வசனத்திலே (திருவருட்பா) குறிப்பிட்டிருப்பதையும் கீழே தருகிறேன்.

தேக வகை மூன்று

சுத்தமாதி மூன்று தேக விவரம்: சுவர்ண தேகம், பிரணவ தேகம். ஞான தேகம்.

Koviloor Digital Library

1. சுவர்ண தேக விவரம்: காரிய ரூபம், பரதேகம், பர உணர்ச்சி, பரஅறிவு, பரதத்வம், பொன்வண்ணம், 12 வயது பருவம், நரை, திரை, பிணி, மூப்பு, மலம் - ஜலம் வியர்வை, ஆகாரம், நித்திரை, தாகம், சாயை முதலியன இல்லாமை ரோம வளர்ச்சி, தாழ்ச்சி இல்லாமை — அபரஞ்சி மாற்று, கர்ம சித்தி, கல்பதேகி, அபரமார்க்கி.

2. பிரணவ தேகம்: காரிய காரண ரூபம், பரம்பர தேகம், பரம்பர உணர்ச்சி, பரம்பர அறிவு, பரம்பர தத்துவம், 16 முதல் 108 வரை மாற்று. 5 முதல் 8 வயது,— உரைபடாதது. தேகம் தோற்றும் — பிடிபடாதது. சர்வ சித்தி, பிராண கல்ப தேகி, பர அபரமார்க்கம்.

3. ஞான!தேகம்: காரண ரூபம், எங்கும் பூரண வியாபகம்—பராபர அறிவு, பராபர தத்துவம், அளவு கடந்த மாற்று. சப்தமப தரிசனம், சர்வ மகாசக்தி, சர்வ சுதந்திரம், உருவம் தோற்றியும் தோற்றுமலும் இருக்கும், கலாதீதன்.

ஆகப் பிரணவ தேகம் பெறும்போது தான் ஆத்ம ஞானிகள் ஆணவத்தை ஆண்டவன் அருளால் ஒழிக்கிருர்கள்.

மேற்கண்ட பாடலில் வள்ளற் பெருமான் பிரணவ தேகம் பெற்ற பின்பு இறைவன் வருகிருன். வந்ததும் இவர் எழுந்திருந்து ''இங்கே அமர்க!'' என்று கூறுகிருர். உடனே இறைவன் ''நீ ஆங்காரந்தைஒழி!'' என்று சொன்னுர். இந்த இடத்தில் வள்ளலார் தனனை இறைவனுடைய மனைவி என்று சொல்லுகிருர். அதாவது ஓங்கார அணைமீது நான் இருந்த நேரம் மகிழ்ந்து எனது மணவாளர், தன் அடி சிவக்க வந்தார் என்கிருரே. எனவே அடியவளாகிய மனைவி தன் கணவன் வந்ததும் எழுந்து ''இருந்தருள்க!'' என்று வேண்டுகிருள். அப்போதுதான் 'ஆங்காரமாகிய ஆணவத்தை ஒழி!' என்று சொன்னுராம். அப்படி வந்த இறைவன் திருவுரு சந்தனம் போன்ற கற்பூர வாசனை வீசும் திருவுருவாக இருந்தது. இப்படி அவரும் நானும் எதிர் எதிர நிற்க ''இதில் நானதானே இல்லை அவர்தானே என்ற முன் குறிப்பு அறியாதவாறு எமது இரண்டு உயர்ந்த ஜோதிமயமான உருவங்கள் ஒன்று கலந்து ''நர்த்தனம் செய்தனம்!'' என்று சொல்லுகிருர்.

Koviloor Digital Library

'இறைவனைக் கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்', என்று சொல்லுவார்கள். வள்ளலார் கண்டார்; கண்டதை விண்டார். இவரைப்போல பெற்ற அனுபவத்தை எவரும் எளிமையாக இனிமையாக எடுத்துரைத்ததே இல்லை என்று நான் சத்தியம் செய்வேன். இறுதியாக

''அம்பரத்தில் ஆடுகின்றார் வெண்ணிலாவே—என்னை
ஆட்டுகின்றார் இம்பரத்தில் வெண்ணிலாவே

என்றும் கூறுகிறார்.

தமிழ்நாட்டிலே சாதாரணமாக எல்லோரும் பேசும் மொழி ஒன்று உண்டு. ''இடத்தைக் கொடுத்து மடத்தைப் பிடுங்கினான்!" என்று. அது பொதுவாக தாம் பெற்ற ஏமாற்றத்தைக் குறிப்பதாக அர்த்தம் செய்வார்கள். அர்த்தம் அதுவல்ல. மனதிலே இறைவனுக்கு இடத்தைக் கொடுத்து விட்டு மடமாகிய அறியாமையை இறைவன் பிடுங்கி எறிந்து கொண்டான். இங்கே ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் இருக்கும்வரை அறியாமை நீங்காதல்லவா? அந்தப் பழைய மொழிக்கு இதுதான் பொருள்.

இப்படித் தாம் பெற்ற அனுபவங்களை எல்லாம் வள்ளற் பெருந்தகை 'அனுபவமாலை' என ஆறும் திருமுறைப் பாடல்களிலே எல்லோரும் புரிந்து தெரிந்து கொள்ளும்படி படுகிறார். தமை அறிந்த ஆத்ம ஞானிகள் 'தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையம்!" என்றே நமக்கு விளக்கியிருக்கிறார்கள்.

தமை அறியார் எல்லாரும் புறத்திருக்க நான் போய்
சபை நடம் கண்டு உளம களிக்கும் தருணத்தே
தலைவர்
இமை அறியா விழி உடையார் எல்லாரும் காண
இளநகை மங்கள முகத்தே 'தளதள' என்று ஒளிர
''எமை அறிந்தாய்!" என்று எனது கைப்பிடித்தார்,
நானும்
என்னை மறந்து என் இறைவர் கால் பிடித்துக்
கொண்டேன்
''சுமை அறியாப் பேரறிவே வடிவமாகி அழியாச்
சுகம் பெற்று வாழ்க!" என்றார் கண்டாய் என்
தோழி

தன்னை அறிதல் என்பது தம்முள் இறைவனைக் காணுதல் என்பதேயாம். ஆகவே தம்மை அறியாதவர்கள் எல்லாரும்

Koviloor Digital Library

புறத்தே இருக்க, நான் போய் சிவபெருமானுடைய திரு நடனம் கண்டேன். அச்சமயம் இமை அறியாதவர்களாகிய தேவர்களும் நின்று கொண்டிருந்தார்கள். கண் இமை தேவர்களுக்கு ஆடாது என்பது புராண வரலாறு. (இதன் பொருள் இமை கொட்டாமல் எதையும் நிலைத்துப் பார்க்கும் பார்வை பெற்றவர்கள் தேவர்கள் என்பதே) அவர்கள் முன்பு இறைவன் தன (பொலிவு) மங்களம் நிறைந்த முகத்தில் குறுநகை (இளநகை) 'தளதள' என்று ஒளிவீசும் படிச் செய்தான். புன்முறுவல் பூத்தபடி அவன் சொன்னான். 'எமை அறிந்தாய்—நீ எம்மைத் தெரிந்து கொண்டாய்' என்று சொன்னான். அப்போது அவன் என் கையைப் பிடிக்கவே, உடனே நான் என்னையும் மறந்து அவருடைய காலைப் பிடித்தேன். இப்போது "சுமையாக இருக்கும் ஏடு மற்றும் நூல்களில் பேசப்படும் அறிவு இல்லை. அதனிலும் மேம்பட்ட ஞானப் பேரறிவு வடிவாகி நீ அழியாத சுகம் பெற்று வாழ்வாயாக!" என்று கூறுகிறார்.

ஆக ஞானவடிவு என்பது இறைவன் வடிவே. இதைப் பெற்றதால வள்ளலார் "நானானேன் தானானேன் நானும் தானும் ஆனேன், கோன் ஆனேன் என்னுள் குலவுகின்ற கோமானே:" என்று பேசுவார். எனவே இவர்கள் தன்னைத் தானே அருச்சிக்கும் ஞான தேசிகன் என்று திருமூலர் திருமந்திரம் பேசும்.

"தன்னை அறிய தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே இருக்கினும்
தன்னை அறியும் அறிவை அறிந்திடில்
தன்னை அருச்சிக்கத் தானிருந்தனனே!";

திருவொற்றியூரில் தண்புனல் ஓடை ஒன்று உண்டு. ஆங்கே "ஜோதி" என்ற பெண்கையிலேஏடும் எழுதுகோலும் கொண்டு ஓரிடத்தே புல்வெளியில் அமர்ந்து ஏதோ எழுதினாள். பின் எழுதியவற்றை எழுதுகோலால் அடித்தாள். அச் சமயம் அங்கு 'தியாகராஜன்' என்ற ஆணழகன் வந்தான். வந்தவன் 'ஜோதியிடம்' மெதுவாகப் பேச்சுக் கொடுத்தான்.

ஜோதி தியாகுவைப் பார்த்ததும் தன்னை மறந்தாள். தியாகராஜன் சற்று தூர நின்றே அவளைப் பார்த்துப் புன்னகைத்தான். அப்போது ஜோதியின் முகம் குப்பென்று நாணிச் சிவந்தது. ஒற்றியூர் ஓடைக்கரையிலிருந்து மெதுவாக நழுவி நீலத் திரைக்கடல் ஓரம்நடந்து வந்தாள். அப்போது இன்னும்

Koviloor Digital Library

ஒரு சில பெண்களும் கடற்கரையில் தியாகுவைப் பார்த்துக் காதலால் பெருமூச்சு விட்டு முகம் நாணிக் கோணிக் குறுகினர். இதையும் பார்த்தாள்.

அடுத்து ஒருசில நொடிப் பொழுதுகளில் கடலுக்குள் இறங்கினாள். குளிக்க நினைத்த அவளை கடல் அலைகள் ஓர் இருட்டுப் பள்ளத்திற்கு இழுத்துச் சென்றன. அவளை அலைக் கழித்து இழுத்துப் புகட்டிய கடல் அலைகளைத் துளைத்தவாறு தியாகு குதித்தான். நீந்தி அவளைக் கரை ஏற்றினான். கரை ஏற்றிக் கொஞ்சதூரம் வந்ததும் இடுப்பில் கட்டிய வார்ப் பைக்குள் இருந்து சர்க்கரைத் துண்டு ஒன்று எடுத்து ஜோதிக்குக் கொடுத்தான்.

அதை ஜோதி சுவைத்துத் தின்றாள். பின் தலையை முந்தானையால் துவட்டியவாறு நீள நடந்தாள். அப்போதும் நாணத்தால் ஜோதி பேசாததால் ''நான் யார் என்று நீ தெரிந்து கொள்ள வேண்டாமா? என் பெயர் தியாகராஜன்!" என்றான். அப்போதும் ஜோதி ஒன்றும் பேசினாள் இல்லை. தியாகு பேசிய தேன் என இனிக்கும் தீந்தமிழ் வசனத்தால் அவள் உள்ளமே கொள்ளை போயிற்று. ஏதாவது பேச வேண்டும் என்று நினைத்தாள்.'' இல்லை இல்லை ''இவர் அழகுதமிழ்த் தேன் வசனத்திற்கு ஈடாக நான் ஒரு பாட்டை எழுதிப் புகழ்ந்து, நானே உன் பத்தை என்று சொன்னால் தான் என் ஆத்மா திருப்தியடையும்'' என்ற முடிவுக்கு வந்து மேலும் மௌனம் சாதித்தாள்.

இப்போதும் தியாகன் மீண்டும் தன் உரையாடலைத் தொடர்ந்தான. உன்னை நான் நெல்லுக்கரைப் பண்டார வீதியில்—இங்கே ஒற்றியூரில் தான் சொல்கிறேன்—அடிக்கடி அந்த வழிநடந்து செலவதைப் பார்த்திருக்கிறேன். அங்கே ஒருநாள் ஒட்டுததிண்ணையில் கூட நீ படுத்திருந்தாய். பசியால் உன் முகம் வாடியது. அப்போது எனபோல் அச்சு அசல் இருக்கும் 'கூத்தன்' வந்து உனக்கு உணவு கொடுத்தான். ஆம் நீ அந்த ஒட்டுத்திண்ணையில் 'இராமல இங்கும்'. வந்தது ஏன்? (ஜோதி—இராமலிங்கம்) எனறு கேட்டான். பதிலே பேசவில்லை. உடனே தியாகன் போய்விட்டான்.

இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அடிக்கடி சந்தித்துக் கொண்டனர். இவர்கள் கண்களில் இருந்து பாயநத ஒளிப்பார்வை ஊடுருவி உள்ளத்தில் பாய்ந்து கிளுகிளுப்பு

Koviloor Digital Library

ஊட்டியது. அன்று முதல் தியாகன் நினைப்பாகவே ஜோதி ஏதாவது எழுதுவது அல்லது பாடுவது என்று இருந்தாள்.

அன்று ஓடைக்கரையில் ஓவிய எழிலான நாரை ஒன்று வந்து அவள் பக்கம் வந்து நின்றது. அதைத் தன் கையில் தொட மிகவும் கூசினாள் என்பதை விடத் தொட்டால் அதன் தோகை துவண்டு உதிர்ந்து அதற்குத் துன்பம்வந்து சேருமோ என்று சிந்தித்து அதைக் கையால் தொடாமல் தூர இருந்தே கவனித்தாள். பின்பு தன் கையில் இருந்த ஓலையை எடுத்து எழுத ஆரம்பித்தாள். ஒரு சில சொற்களை எழுதுவாள். எழுதிய வரிகளைக் கோடிட்டு அடித்து விடுவாள். ''எனக்கு என்ன நல்ல சொல் மலர் கிடைககவில்லையே! கிடைத்தால் அதைத் தொடுத்து அவருக்கு மாலை ஆக்குவேன். என் மனம் ஏனோ வசப்படாது அலைபாய்கிறதே! உன் மீது சுத்தமான பக்தி இல்லையோ என்னமோ? இல்லை ஊழ்வினைப் பயனாலே மும்மலங்களும் தடையாகின்றன. என் உயிரே உனக்கு தயவு இல்லையா? (இன்று நீ ஏன்வரவில்லை என்ற ஏக்கத்தில் இப்படி எழுதுகிறாள்) உனைப் பார்க்கவில்லையானால் நான் உயிரையே விடலாம் என்று நினைக்கிறேன். ஆனால் என் மனம் அதைத் தடுத்து நிறுத்துகிறது. மன்றிலே விளங்கும் வள்ளலே —(நீதான் தியாகுவோ) என்று ஒரு பாட்டை எழுதினாள்.

''தொடுக்கவோ நல்ல சொல் மலர் இல்லை நான் துதிக்க
வோ பக்தி சுத்தமும் இல்லை
ஒடுக்கவோ மனம் என் வசம் இல்லைஊழ் உற்ற ஆணவம்
ஆதி மலங்களைத்
தடுக்கவோ திடம் இல்லை என் மட்டிலே தயவுதான்
நினக்கு இல்லை உயிரையும்,
விடுக்கவோ மனம் இல்லை என் செய்குவேன் விளங்கு
மன்றில் விளங்கிய வள்ளலே!

இப்போதும் நாரை அந்த இடத்தை விட்டு நகரவே இல்லை. ஒஹோ! என் மீது இந்த நாரைக்கு என்னே அன்பு! என்று சொல்லி ஒரு சீட்டில் கீழ்க்கண்டபடி ஒரு பாட்டை எழுதினாள்.

'வடிக்கும் தமிழ்த்தீந் தேன் என்ன வசனம் புகல்வார்
ஒற்றிதனில்
நடிக்கும் தியாகர் திருமுன்போய் நாராய்! நின்று நவிற்றாயோ?
பிடிகளும் கிடையா நடையுடைய பெண்கள் எல்லாம் பிச்சி என
நொடிக்கும் படிக்கு மிகும்காம நோயால் வருந்தி நோவதுவே"

Koviloor Digital Library

[பிடிக்கும் கிடையா நடை--பெண் யானைக்கும் கிடையாத நடை என்று பொருள். அவர் மனப் பிடிக்கும் கிடையாத நடையுடையர் என்றும் பொருள். பிச்சி—பைத்தியக் காரி]

அடுத்து அதன் கீழேயும் ஒருபாடலை ஜோதி எழுதுகிறாள்

எக்கரையும் காணாதே இருள் கடலில் கடந்தேனை
எடுத்து ஆள் கொண்ட
அக்கரை சேர்த்து 'அருள்' எனும் ஓர் சர்க்கரையும்
எனக்கு அளித்தான் அந்தோ அந்தோ!
சர்க்கரை ஒத்தான் எனக்கே தந்தான் அருள் என் மனக்
கல்கரையச் செய்தே களிப்பித்தான்—கற்க
இனியான் அருட்ஜோதி எந்தை என்னுள் உற்றான்
இனியான் மயங்கேன் இருந்து

(எந்தை—என் தந்தை என்றும் என்னுடையவன் என்றும் பொருள் கொள்ளலாம்)

இதை எழுதி 'அருள் ஜோதி' என்று ஒப்பமிட்டு நாரை அருகே வந்தாள். நாரை தன் கால் இடுக்குகளில் அந்த மடலைப் பற்றியது பார்த்து வியந்தாள். அந்த நேரம் தியாகு வரவும் எழுதப் பெற்ற பாடல் மடலொடு நாரை பறக்க முயன்றது. தியாகன் அதைத் தட்டிப் பறித்தான். படித்தான். ரசித்தான். மெல்ல நகைத்தான். "ஜோதிப் பெண்ணே! என்ன அழகாக எழுதியிருக்கிறாய்? நான் உன்னிடம் தீந் தமிழ் வசனம் தானே பேசினேன். நீ பதிலுக்குப் பைந்தமிழ்ச் சர்க்கரைத் தேன் சொட்டும் பாடலைத் தந்திருக்கிறாயே? ஐயோ எனக்குப் பாட்டு என்றாலே ஒரே பைத்தியம். அதனால் என்னைப் பித்தன் என்று கூடச் சொல்வார்கள். எங்கே அந்தத் தாள்களில் வேறு என்ன எழுதியிருக்கிறாய் பார்க்கலாமா?" என்றான்.

இதற்குள் ஜோதி நாணத்தால் மெதுவாக அங்கிருந்து ஓடி ஒளிந்து போய் விட்டாள்.

இப்படிச் சில நாள்கள் கழிந்தன. மெதுவாக அவள் பாடல் எழுதும் போது தியாகன் வந்து அவள்பின்புறம் நின்று மெதுவாக அவள் முதுகைத் தடவிக் கொடுப்பான். இவள் உணர்ச்சி மின்னல் உடல் எல்லாம் தெறிக்க இன்புறுவாள். மேலும் இப்படிப் பாடலையும் ஒருநாள் எழுதுவாளாயினள். அப்போது "ஜோதி!" என்று அழைத்து அவள் காதருகே

Koviloor Digital Library

போய் ஏதோ வாக்குக் கொடுத்தான். அந்த வாக்கு என்ன தெரியுமா? ''நீயே என் காதலி. உன்னை நான் விட மாட்டேன்!'' என்றான். பாடல்கள் இதோ.

இருள் அற ஓங்கும் பொதுவிலே நடம் செய்
என் குருநாதன் எம்பெருமான்
அருள் எனும் வடிவம் காட்டி ஒண்முகத்தே
அழகுறும் புன்னகை காட்டித்
தெருளுற அருமைத் திருக்கையால்
திருமணிவாய் மலர்ந்து அருகில்
பொருளுற இருந்து ஓர் வாக்கு அளித்து என் உள்
புகுந்தனன் மதுமை யீது அந்தோ?

இதை எழுத எழுதத் தியாகன் படித்துக் கொண்டே இருந்தான். மேலும் நாரையின் கால்களிலிருந்து பறித்த மடல்களை மீண்டும் வாசித்தான். அச்சமயம் ஜோதிமேலும், எழுதிய பாடல் இது.

என் இயல் உடம்பிலே என்பிலே அன்பிலே
இதயத்திலே தயவிலே
என்தன் உயிரிலே, என்தன் உயிரினுக்கு உயிரிலே
என் இயல் குணம் த(ன்)னிலே
இன் இயல் என் வாக்கிலே என்னுடைய நாக்கிலே
என் செவிப் புலன் இசையிலே
என் இருகண் மணியிலே என் கண்மணி ஒளியிலே
என் அனுபவம் தன்னிலே
தன் இயல் என் அறிவிலே அறிவினுக்கு அறிவிலே
தானே கலந்து முழுதும்
தன் மயம் அது ஆக்கியே தித்தித்து மேன்மேல்
ததும்பி நிறைகின்ற அமுதே
துன்னிய பெருங் கருணை வெள்ளமே அழியாத
சுகமே சுக அதீதமே
சுத்த சிவ சன்மார்க்க நிதியே அருட்பெரும்
ஜோதி நடராஜ பதியே!

(இயல்—ஆகமம், இயற்கை, இசை. இயல்தமிழ், குணம் சாயல், நடை, இன்—இனிமை, இப்போது; துன்னிய—நிறைந்த)

இந்தப் பாட்டை எழுதி முடித்ததும் அவன் கையில் கொடுத்தாள். தியாகன் வாங்கிப் படித்துக் கொண்டிருக்கும்

Koviloor Digital Library

போதே அவளைத்தேடி அவள் தோழி வந்தாள். "அடியே ஜோதி! நீ கோயிலுக்குள் வருவாய் என்று அங்கு நந்தி முன்பு வெகு நேரமாகக் காத்திருந்தேன். நீயோ ஓடைக்கரையில் வந்து ஓவியம் எனத் தங்க காவியம் எழுதிறுயாடி!" என்று கேட்டாள்.

இதற்குள் அவள் எழுதியிருந்த பாட்டில் இப்படி இருந்தால் நன்ருக இருக்குமோ?" என்று வேறு ஒரு திருத்தத்தையும் தியாகு செய்திருந்தான். பின்பு ஜோதியின் பாடல் வரிகளையே சரி என்று மீண்டும் அப்படியே எழுதிவிட்டான். அப்போது அவள் தோழி வந்ததால் தியாகன் அங்கிருந்து போய் விட்டாள்.

"அடியே ஜோதி! இவர் யாரடி?" என்று கேட்டாள் தோழி.

"அதை நான் பிறகு சொல்கிறேன். நீ முதலில் இங்கே உட்கார்ந்து என் எழுத்துகளை அட்சரம் பிசகாமல் மெதுவாகப் படித்துக் கொண்டு இரு. அதற்குள் நான் இன்னொரு பாடல் என் மனதில் எழுந்ததை இங்கே பதிவு செய்வேன்!" என்று சொல்லி எழுதினுள்.

ஆன்பாலும் நறுந்தேனும் சர்க்கரையும் கூட்டிய தெள்ளமுதே
என்றன்
ஊன்பாலும் உளப்பாலும் உயிர்ப்பாலும் ஒளிக்கின்ற ஒளியிலே
வேதம்
பூம்பாடல் புனைந்து ஏத்த என் உளத்தே ஆடுகின்ற பொன்னே
நின்னை
யான்பாட நீ திருத்த என்ன தவம் செய்தேனோ எந்தாய்
எந்தாய்!

தோழி இப்போது கேட்டாள். "என்னடி ஜோதி! பாடல்கள் வெகு அற்புதமாக எழுதியிருக்கிறாய். இதுதானடி உண்மையான அருட்பாட்டு. ஆம். திருவருட்பா என்னும் தேனே என்று உன்னைச் சொல்வதா? இல்லை நீ எழுதிய பாடல்களைச் சொல்வவா?"

"போடி! போடி. புகழ்ந்தது போதும். இன்னும் நீ என் தலையில் குளிர் நீர் ஊற்றி முழுக்காட்டினுல் எனக்கு ஜல தோஷம் வந்துவிடும்."

Koviloor Digital Library

"அதுசரி! ஜோதி! யாரடி அவர்?"

"என்னடி நீ திருஒற்றியூர் வாசி. இவரைப் பார்த்த தில்லையா?"

"இவர் என்றால்?"

"அவர் தானடி!"

"அவர் பேர் என்னடி?"

"................"

"என்ன மௌனம்?" உனக்கும் அவருக்கும் என்ன உறவு?"

"இதோ இந்தத் தாளைப் படித்துப் பார். இதில் என் ஓவியகாவியம் என்று நீ சொன்னதைப்போல அவரைப்பற்றி எழுதியிருக்கிறேன்."

"அப்படியா கொடு!" என்று அவள் கேட்டதும், தான் எழுதித் தன் மடியில் சுருட்டி வைத்திருந்த கவிதையை ஜோதி கொடுக்கிறாள். தோழி வாங்கிப் படிக்கிறாள்.

"வெடித்து அளிந்த முக்கனியின் வசம் தனிலே
விருப்புற நின்று ஓங்கிய செங்கரும்பு இரசம் கலந்து
தடித்த செழும் பால்பெய்து கோத் தேன் விட்டு அதனைத்
தனித்த பர அமுதத்தில்தான் கலந்துஉண்டாற்போல்
இடித்து இடித்து என்உளம் முழுதும் தித்திக்கும் வார்த்தை
இனிது உரைத்து மணம் புரிந்த என் உயிர் நாயகன் வாழ்
பொடித் திருமேனியின் நடனம் புரிகின்றார் அவர்தம்
புகழ் உரைக்க வல்லேனோ வல்லேன் காண் தோழி!

இது வள்ளற்பெருமான் ஆங்காங்கே பாடல்களை மைய மாகக் கொண்டு எழுதிய கற்பனை உரை. ஜோதி என்பது இராமலிங்கர். தோழி என்பது சிவம். பாட்டு எளிமை கருதி தெளிவுரை தேவை இல்லை என விடப்பட்டது.

Koviloor Digital Library

7. கடவுள் வழிபாடு

ஓர் ஆஸ்திக வாதியிடம் ஒரு நாஸ்திகர் கேட்டார். ''ஐயா! நீர் கடவுள் வழிபாடு செய்கிறீரே. இதனால் உமக்கு ஏதாவது நன்மை ஏற்பட்டதுண்டா?'' என்று.

''ஏன் இல்லை? இன்றைக்கு நான் இந்த உயர்ந்த நிலையில் இருப்பதே எதனால்? கடவுள் வழிபாட்டினால் அல்லவா? என்றார் ஆஸ்திகர்.

''நானோ கடவுள் இல்லை. இல்லவே இல்லை. கடவுளைக் கற்பித்தவன் முட்டாள். அதை வணங்குபவன் காட்டு மிராண்டி!" என்று பக்தி செய்பவர்களை ஏளனம் செய்வதோடு அந்தக் கடவுளை சர்வசதா காலமும் நிந்தனை செய்து வருகிறேன். என்னை அந்தக் கடவுள் ஏன் இன்னும் மேலான நிலையில் வைத்திருக்கிறார்?

''நீங்கள் 'நம்பிக்கை' என்பதை நம்புகிறீர்களா?''

''உண்மையாக இருந்தால் நம்புகிறேன்"

''தயவுசெய்து என்னைத் தப்பாகப் புரிந்து கொள்ள வேண்டாம். உங்களை நான் கூடியவரை தெளிவிக்கவே விரும்பி சில திருஷ்டாந்தங்களைக் கூறுகிறேன். சற்று சிந்தித்துப் பதில் சொல்கிறீர்களா?

''நிச்சயமாக!"

''நீங்கள் பம்பாய் நகருக்குச் செல்லும் வண்டியில் பயணம் செல்லும் முன்பு, ரயில்வே ஸ்டேஷனில் டிக்கட் வாங்குகிறீர்கள். எதை நம்பி வாங்குகிறீர்கள்?''

''நிச்சயமாக ரயில் பம்பாய் போகும் என்ற நம்பிக்கையோடுதான். அது பம்பாய் போகிறதே.''

''ஒரு சில நாள்கள் மழை புயல், ஒத்துழையாமை முதலிய தொழிலாளர் போராட்டம் இவற்றால் தடைப்பட்டு ரெயில் போயிருக்காதே?

''ஆமாம்.''

BOARD OF STUDIES SECTION

SPECIMEN COPY

Koviloor Digital Library

''அந்த நாள்களில் ரெயில் போகவில்லை, ஆகையினாலே நான் பம்பாய்க்குப் போக டிக்கட் எடுக்க மாட்டேன் என்று போகாத நாள்களை நம்பி விட்டால்!"

''போகும் நாள்கள் மிகமிக அதிகம் அல்லவா? மிகமிக அதிகம் என்பதால் நான் டிக்கட் வாங்குவேன்''

''கடவுளை வழிபடுபவர்கள் மிக மிக அதிகம் தானே? அப்படியானால் நீங்களும் வழிபடலாம் தானே!" என்றார் ஆஸ்திகர்.

''இப்போது நான் உங்களை ஒன்று கேட்கிறேன். தயவு செய்து சிந்தித்துப் பதில் சொல்லுங்கள்'' என்றார் ஆஸ்திகர்.

''உலகத்தில் அறிவாளிகள் அதிகமா? முட்டாள்கள் அதிகமா?

''முட்டாள்கள்தான்!''

''அப்படியானால் முட்டாள்களுடன் நாம் வழி நடந்து செல்லலாமா?"

"கூடாதுதான். அதே கேள்வியை நீங்களே கேட்க வேண்டும் என்றே நான் விரும்பினேன்!" என்றார் ஆஸ்திகர்.

''ஓஹோ விஷயம் அப்படியா?''

''எப்படி அறிவாளிகள் மிகமிகச் சிலரோ அதுபோல ஞானிகளும் ஒரு சிலரே. அவர்கள் வழி சொன்னதுதான் கடவுள் வழிபாடு. விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் செய்தவன் பலகோடிகளில் ஒருவன். மெய்ஞானத்தைக் கண்டவன் பல கோடிகளில் ஒருவன். விஞ்ஞானம் உலகாயுதம் என்று பேசப்படும் லௌகிக உபயோகம் தருவது. பற்பலர் அறிவர். ஆனால் மெய்யறிவு எனப்படும் ஞானத்தைத் தெரியக் கூடியவர்கள் அறியக் கூடியவர்கள் ஒரு சிலரே. ஆக விளம்பரமில்லாத பொருள் உயர்ந்த பொருள் அல்ல என்று கூற முடியாது தானே!''

"பகுத்தறிவு என்பதே மனிதனுக்கு அறிவு பூர்வமாக பயன்தரும் செயல்களைச் செய்வது என்பதே'' என்றார் நாத்திகர்.

Koviloor Digital Library

''பக்தி அறிவு என்பது மன நெகிழ்ச்சி மன உருக்கத்தோடு பகுத்தறிவுக் கண் கொண்டு நம் செயல்களை ஆய்ந்து செயல்படுவதுதான். நம்பிக்கையின் பேரால் மனிதன் எத்தனையோ செயல்களைச் செய்கிருன். பிறந்ததும் பெற்ற தன் தாய் ''இதோ உன் அப்பா!" என்று ஒருவரைக் காட்டுகிருர். அதைப் பிள்ளை நம்பியே தன் வாழ்நாள் முழுவதும் யாரைத் தன் தாய்-இவர்தான் தந்தை என்று காட்டினரோ அவரை 'அப்பா' என்று அழைக்கிருன். வாணுள் இப்படிக் கழிகிறது. அதுபோல நம் மெய்ஞ்ஞானிகள் அல்லது மூதாதையர் இறைவனே நமக்குத் தந்தை தாய் குரு என்று கூறியிருக்கிறார்கள். இந்த அடிப்படையில் நாம் வழிபாடு செய்து கடவுள் தியானத்தில் ஆழ்ந்து வாழ்க்கையை ஒட்டுகிறோம்! மேலும் மனிதனுக்கு ஆத்ம அறிவு பூர்வமாக ஆனந்தம் மகிழ்ச்சி நிறைவு ஏற்படுத்துவதுதான் மெய்ஞ்ஞானம். அதை அடையும் வழிமுறைக்குப் 'பக்தி' என்று பெயர்.''

''பக்தி செய்பவர்கள் கண்மூடித்தனமாக மௌடீகமாக நடந்து கொள்கிருர்களே! உதாரணமாகப் பகவானுக்குப் பலி என்ற பேரால் ஆடு மாடுகளை வெட்டுகிருர்கள். அம்மை நோய் வந்தால் 'மாரியாத்தாள்' வந்திருக்கிறாள் என்று நோய்வாய்ப்பட்டவருக்கு மருந்து கொடுக்காமல் வைத்தியம் செய்யாமல் ஏதேதோ புலம்பியபடி மாரி காளி கோயிலுக்கு நேர்ந்து கொள்கிருர்களே?"

''மௌடீகமாகச் செயல்படுபவர்களைக் கொண்டு 'மெய்ஞ்ஞானம்' முட்டாள்தனம் என்று கூறலாமா?" இவற்றை எல்லாம் வள்ளற் பெருமான் வெகு அற்புதமாக அருட்பா என்று புகழப் பெறும் தம் திருவருட்பாவிலே எழுதியிருக்கிறார்கள்.

''கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும்
கண்மூடி வழக்கம் எல்லாம் மண் மூடிப் போக!''

என்று சொல்லுகிருர்கள். மேலும் 'சிறு தெய்வங்கள்" என்ற பெயரால் பலியிடுதலைக் கண்டிக்கிற கவியைக் கேளுங்கள்:-

''நலிதரு சிறிய தெய்வம் என்று ஐயோ
நாட்டிலே பல பெயர் நாட்டிப்
பலிதர ஆடு பன்றி குக்குடங்கள்
பலிக்கடா முதலிய உயிரைப்

Koviloor Digital Library

''பொலிவுறக் கொண்டே போகவும் கண்டே
புந்தி நொந்து உள நடுக் குற்றேன்
கலியுறு சிறிய தெய்வ வெம்கோயில்
கண்ட காலத்திலும் பயந்தேன்"

மேலும் ஓர் இடத்தில்,

''மண்ணினில் வலையும் தூண்டிலும் கண்ணி
வகைகளும் கண்டபோது எல்லாம்
எண்ணிய என் உள்ளம் நடுங்கிய நடுக்கம்
எந்தை நின் திருவுளம் அறியும்"

என்றும் மற்றும்,

''வாடிய பயிரைக் கண்டபோது எல்லாம்
வாடினேன் பசியினால் இளைத்தே
வீடுதோறி ரந்தும் பசியறாது அயர்ந்த
வெற்றரைக் கண்டு உளம் பதைத்தேன்''

என்று மனிதர்கள்மேல் அன்றி மற்ற ஜீவராசிகள் மீதும் இரங்குவதுதான் உண்மையான பக்தி. இதனையும் இறைவன் தனக்கு உணர்த்தியதாக அருட்பா அகவலில் கூறுகிறார்கள். அதாவது:-

''உயிருள் யாம் எம் உள் உயிர் இவை உணர்ந்தே
உயிர் நலம் பரவுக என்று உரைத்த மெய்ச் சிவமே!''

என்பார். அதாவது எல்லா உயிர்களிலும் இறைவன் ''நான் இருக்கிறேன். அதை உணர்ந்து உயிர் நலம் பரவுக" என்று கடவுள் உரைத்ததாகக் கூறுகிறார்.

''அப்படியானால் கடவுள் என்பவர் கோயிலில் இருப்பதாகக் கூறுவது எப்படி உண்மையாகும்?''

''கடவுள் சர்வ வியாபி. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய் நீக்கமற நிறைந்து நிற்பவன். ஆகவே கடவுள் கோயிலில் இல்லை என்று எப்படி கூறமுடியும்?''

''அது சரி. அப்படியானால் தெய்வ வழிபாடு என்று இல்லாமல் சமூகச் சேவை மனிதத் தொண்டு செய்தாலே போதுமல்லவா?''

Koviloor Digital Library

''ஆம் நிச்சயமாகப் போதும் தான். ஆயினும் மனிதர்களிடம் மகேசன் இருக்கிறான் என்ற நல்லுணர்வு செய்தால் அறிவு மட்டும் அல்ல ஆத்ம திருப்தியும் ஏற்படும். இதைத் திருமூலர் திருமந்திரத்திலே சொல்லுகிறார். படத்திலே, இருக்கிற ஆண்டவனை நீ வழிபட்டு நைவேத்தியம் செய்தால் அது நடமாடும் தெய்வங்களாகிய ஜீவர்களுக்குக் கிடைக்காது. ஆனால் நடமாடும் ஜீவர்களுக்கு ஈர்ந்தால் படத்தில் ஆடும் பெருமானுக்கும் போகும்" என்கிறார். பாடல் இதோ:

படம் ஆடும் கோயில் பரமற்கு ஒன்று ஈயில்
நடம் ஆடும், கோயில் நம்பர்க்கு அங்கு ஆகா
நடம் ஆடும் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்
படம் ஆடும் கோயில் பகவற்குத் தாமே!"

இதுபோல இன்னோர் உதாரணம். விக்கிரக ஆராதனை பற்றி எழுதியிருக்கிறார் திருமூலர். அதாவது ''கல்லைக் கண்டால் நாயைக் காணோம்'' நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" என்ற முதுமொழிக்கு ஏற்ப ஒரு திருமந்திரத்தில் சொல்லுகிறார்.

''மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமதயானை''

மரத்தினால் ஒரு யானை செய்திருந்தார்கள். அச்சு அசல் யானை எதிர்கொண்டு வந்து நிற்பதுபோல் அது காட்சி அளித்தது. எனவே அதைப் பார்த்த ஒருவன் அதன் அருகே செல்ல முதலில் அஞ்சுகிறான். பின்பு அவனிடம் 'அது மரத்தினால் செய்த யானை. அப்படித் தத்ரூபமாகக் காட்சி அளிக்கிறது' என்று சொன்னதும் அவன் அதன் பக்கம் வந்து தொட்டுப் பார்க்கிறான். 'ஆம் மரயானைதான்' என்று கூறி வியந்து போகிறான். 'இங்கே யானை' என்று அவன் முதலில் பயந்தபோது 'மரம்' என்ற பொருள் கண்ணுக்குத் தெரியவில்லை. பின்பு ஸ்பரிசித்து மரம்தான் என்று நிருபணம் ஆன பின்பு 'யானை' இல்லை. 'மரம்' என்ற பொருள்தான் இருந்தது. இப்படித்தான் இறைவன் ஐம் பூதங்களிலும் கலந்து இருக்கிறான் என்றுஎடுத்துக்காட்டுகிறார்.

''அப்படியானால் இஸ்லாமியர்கள் விக்ரக ஆராதனையை நிந்திக்கிறார்கள். அவர்கள் செய்வதுதானே சாலச் சிறந்த முறை?'' என்று நாத்திகர் கேட்கிறார்.

Koviloor Digital Library

"பக்தர்கள் பலவிதம். பக்தி காண்டிகள், யோக காண்டிகள், கர்ம காண்டிகள், ஞானகாண்டிகள் என்று அவர்களைப் பிரித்து வகுத்துக் கூறுவர். பக்தி காண்டிகள் விக்கிரகத்திலும், யோக காண்டியர் இருதயத்திலும், கர்ம காண்டிகள் அக்கினியிலும், ஞானிகள் எங்கும் கடவுளை உபாசிப்பார்கள்.

"ஆக இஸ்லாமிய முறை அதில் ஒருவிதம். எனினும் இதைப் பற்றிச் 'சுத்த சன்மார்க்க தியானம்' என்ற பகுதியில் வள்ளலார் கூறுவது காண்க. "தியானம் செய்ய வேண்டுமானல், ஏதாவது ஓர் உருவத்தைத் தியானிக்க வேண்டும். நிஷ்களமாய் இருக்கப் படாது. உருவமாக இருக்கவேண்டும். அருவமாகத் தியானிக்கப் படாது. பின் உருவம் கரைந்து அருவம் ஆகும். துவைதமாக இருந்தால், அத்துவைதம் தானே ஆகும்—பார்க்கும் தான் கெடுவது அத்துவைதம். பார்க்கப்படும் பொருளும் கெடுவது அதீதம். சத்தியம்.'

விக்கிரக ஆராதனையை வெறுத்த போதிலும் பகுத்தறிவுத் தந்தை என்று புகழப்படும் பெரியார் ஈ.வெ. ராமசாமி அவர்கள் கோயிலில் உள்ள விக்கிரகங்களை உடைக்காமல் பிள்ளையார் சிலை உடைப்பின் போது வெளியிலே செய்து விற்பனைக்கு வைக்கப் பெற்ற சிலைகளையே உடைத்தார்கள். இது அவர்கள் மக்களில் பெரும்பாலோர் பக்தி காண்டிகளாக இருந்து வழிபடும் உபாசனை தெய்வச் சிலையை உடைத்தால் அந்தப் பக்தி காண்டிகளின் உள்ளம் புண்படும் என்று அவ்வாறு செய்தார்கள். அதுவும் உண்மையிலேயே பக்தி நெறியைக் காட்டுவது ஆகும்.

அவர்கள் பெரியவர்கள் அறிஞர்கள் முதலியவர்களுக்கு மிகவும் மதிப்புக் கொடுத்துப் பழகியவர்கள். யாரையும் 'ஐயா, நீங்கள், நாங்கள்!" என்று பன்மை மதிப்பிட்டுப் பேசுவார்கள். ஒரு சமயம் திருவாளர் (பெருஞ்சொல் விளக்கனார்) அ.மு. சரவண முதலியார் அவர்கள் (தற்போது புகழ் பெற்றுள்ள உயர்திரு அ.ச. ஞானசம்பந்தனார் அவர்களின் தந்தை ஈரோட்டிற்குச் சென்றிருந்த சமயம் பெரியார் அவர்களின் வீட்டில் தங்கினார்களாம். அப்போது அவர்கள் சிவபூஜை செய்ய இருந்த சமயம் சில திராவிடக் கழகத் தொண்டர்கள் ஏளனமாகப் பேச முயன்ற போதே அதைக் கண்டித்தார்களாம். கண்டித்ததுமட்டுமின்றி மனம்நெகிழ்ந்து அவர்களுக்குரிய பூஜைச் சாமான்களை ஏளனம் செய்தவர்களைக் கொண்டே வாங்கி வருமாறு பணித்தார்களாம்.

Koviloor Digital Library

மற்ருெரு சமயம் வடலூரிலுள்ள ஞானசபைக்கு பெரியார் அவர்கள் வந்தார்கள் அங்கே ஒரு விளம்பரப் பலகை தொங்கியது. "புலைகொலை தவிர்த்தவர்கள்மட்டுமே உள்ளே போகலாம்!" என்று. ஐயா "வடலூர் வள்ளல் எழுதிய வாசகத்திற்குப் புறம்பாக நான்போக மாட்டேன். நான்புலை கொலை தவிர்த்தவன் அல்ல" என்று பலகை மாட்டிய இடத்திற்குப் புறம்பேயே நின்று ஞானசபையைப் பார்வையிட்டார்களாம். இந்தச் செயல்கள் எல்லாம் பகுத்தறிவுள்ள பக்தி நெறிச் செயல்கள். 'அன்பு' என்ற பொருளுக்கு உயர்வும் மதிப்பும் தரும் செயல். "அன்பே சிவம்!" என்பதால் பிறர் மனம் புண்படாதவாறு அவர்கள் செய்த செயலே போற்றுவதற்கு உரியது.

ஆக "பக்தி என்பதற்குப் பொருள் மனநெகிழ்ச்சி. மன உருக்கம். அன்பு என்பது ஆன்மநெகிழ்ச்சி ஆன்ம உருக்கம்" என்று வள்ளல் பெருமான் திருவாய் மலர்ந்தருளியிருக்கிருர்கள். ஆக ஆன்மநெகிழ்ச்சி பெற்ற அன்புவள்ளல்பெருமான் மீது ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள் கொண்டிருந்தார்கள்.

"என்னைப் பொருத்த வரையில், பெரியார் அவர்கள் வீசிய புரட்சிக் கருத்துக்களின் காரணமாகவே இதுகாறும் பின்பற்றித் தொழுது வந்த கடவுள்—கடவுள்வழிபாடுகள—மௌடீகத்தையும தம்பகத்தே கொண்டிருந்தன." என்ருர் ஆஸ்திகர்.

"அப்படியானுல் 'தெய்வத்தின் உண்மை என்பது எது? அதை எந்த அடியார்களாவது பகுத்தறிவுக்கு ஏற்ற வகையில் வெளிப்படுத்தி இருக்கிருர்களா?" என்றுநாத்திகர் எழுப்பிய வினவுக்கு ஆஸ்திகர் சொல்லுகிருர்.

திருவருட்பா வசன பாகத்தில் வள்ளலார் "கொடி ஏற்றுவிழாவில் திருவாய் மலர்ந்தருளிய அருளுபதேசம்!" என்ற பகுதியில் ஒரு சில வரிகளை இதோ தருகிறேன். (ஆஸ்திகர் படிக்கிருர்)

"இதற்கு மேற்பட நாம், நாமும் பார்த்தும் கேட்டும் லட்சியம் வைத்துக் கொண்டிருந்த வேதம். ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனிலும் லட்சியம் வைக்க வேண்டாம். ஏனென்றால் அவற்றில் ஒன்றிலாவது குழூஉக்குறி அன்னியில் தெய்வத்தை இன்னபடி என்றும தெய்வத்தினுடைய உண்மை இன்னபடி என்றும் கொஞ்ச

Koviloor Digital Library

மேலும் புறங்கவியச் சொல்லாமல் மண்ணைப் போட்டு மறைத்து விட்டார்கள். அணு மாத்திரமேனும் தெரிவிக்காமல் பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டினார்கள், யாதெனில் :— கைலாசபதி என்றும், சத்தியலோகாதிபதி என்றும், வைகுண்டபதி என்றும் பெயரிட்டு, இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனிதனுக்கு அமைப்பது போல அமைத்து அவை உண்மையாக இருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். தெய்வத்திற்குக் கை கால் இருக்குமா?" என்று கேட்பவர்களுக்குப் பதில் சொல்லத் தெரியாது விழிக்கிறார்கள். இஃது உண்மையாக இருப்பதாகவே முன்னும் பின்னும் உள்ள பெரியவர்கள் என்று பெயரிட்டுக் கொண்டிருந்தவர்களும் உண்மையறியாது அப்படியே தெய்வத்துக்குக் கை கால் இருப்பதாகவே கண்ணை மூடிக்கொண்டு உளறியிருக்கிறார்கள். ஆனால் ஆதியிலே இதை மறைத்தவன் ஒரு வல்லவன். அவன் மறைத்ததை இதுவரைக்கும் ஒருவரும் கண்டபாடு இல்லை. அவன் பூட்டிய அந்தப் பூட்டை ஒருவரும் திறக்கவில்லை. அப்படிப்பட்டவன் பூட்டிய அந்த பூட்டை உடைக்க ஒருவரும் இதுவரைக்கும் வரவில்லை" என்று சொல்லிவிட்டு "அதன் இறுதிப் பகுதியில் உள்ள வாசகங்களையும் குறிப்பிட்டுப் படிக்கிறேன். கேளுங்கள்" என்று கூறி மீண்டும் படிக்கிறார்.

"மேலும் இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரிய வொட்டாது அசுத்த மாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்து விட்டார்கள். சுத்த மாயாகாரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை. சன்மார்க்கம் இருந்தால் அனுபவித்து அறியாத அனுபவமும் கேட்டறியாத கேள்வியும் நாம் கேட்டிருப்போம். மேலும் இறந்தவர்கள் மீளவும் எழுந்து வந்திருப்பார்கள். ஆதலால் கேட்டறியாத கேள்விகளைக் கேட்கும்படி ஆண்டவர் செய்தது இத்தருணமே ஆதலால் இத்தருணமாகிய இக்காலமே சன்மார்க்ககொடி கட்டிக் கொண்டது".

"ஆகவே சன்மார்க்க நெறியில் பக்தி செய்யப்படும் கடவுளர்கள் வேறு, மற்ற மதச் சமயக் கடவுளர்கள் வேறா?"

"இல்லை. கடவுளர்கள் என்று பன்மையில் பேச வேண்டாம். கடவுள் ஒருவரே என்பது தான் சன்மார்க்கக் கொள்கை."

"அப்படியா?"

Koviloor Digital Library

"இதோ அருட்பிரகாசர் பாடல் ஒன்று சொல்லுகிறேன் கேளுங்கள்.

"தெய்வம் பலபல சிந்தை செய்வாரும்
சேர் கதி பலபல செப்பு கின்றாரும்
பொய் வந்த கலைபல புகன்றிடுவாரும்
பொய்ச் சமாதியை மெச்சுகின்றாரும்
மெய்வந்த திருவருள் விளக்கம் ஒன்றில்லார்
மேல்விளைவு அறிகிலார் வீண் கழிக்கின்றார்
எய்வந்த அவர்க்கு அறிவுதந்து அருள்வீர்
எனைப் பள்ளி எழுப்பி இன்பம தந்தீரே!"

"அது சரி! இப்படிப் பாடிய ஸ்ரீ இராமலிங்கர் ஏன் பற்பல கடவுளர்கள்மீது பாடியிருக்கிறார்? அதாவது விநாயகர் சுப்ரமணியர், துலுக்காணத்தம்மன், ஸ்ரீராமர் துதி முதலியன பாடியிருக்கிறாரே இது எப்படித் தெய்வம் பல பல சிந்தை செய்யாததாகும்?"

"நீங்கள் கேட்ட கேள்வி சரி. ஆனால் இதற்குக்கூட வள்ளல் பெருமான் இதே கொடி கட்டிக் கொண்ட சமயம் செய்த அருளுபதேசத்தில் பதில சொல்லி இருக்கிறார். அதை வாசிக்கிறேன் கேளுங்கள்.

"இப்போது என்னை ஆண்டவர் ஏரு நிலைமேல் ஏற்றி யிருக்கின்றார்..........இந்த நிலைக்கு என்னைத் தூக்கி விட்டது (யாதென்றால்) அக்காலத்திலேயே எனக்குத் தெரிவிக்க வேண்டியதை ஆண்டவர் தெரிவித்தார். 'தேடியது உண்டு நினைது உரு உண்மை' என்றும் 'எத் தேவரையும் நின் சாயையால் பார்த்ததேயன்றி தலைவ வேறு எண்ணியது உண்டோ?' என்ற பாடல்களாலும் நன்கு அறியலாம்" என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் ஒருவன் ஒன்றைத் தெய்வம் என்று நம்பி வழிபடும்போது அவன் நம்பிக்கை வீண்போகாமல் அவன் ஆண்டவர் மீது கொண்டுள்ள அந்த பக்தி சிறக்க அவனுக்காகப் பாடிய பாடல்கள். பெருமான் மெய்ஞானம் வேண்டி நிற்கும் நான்கு வகையின ருக்கும் ஏற்பப் பாடியிருக்கிறார். அதாவது முன் கூறிய பக்தி காண்டிகள், கர்ம காண்டிகள், யோக காண்டிகள், ஞான காண்டிகள் ஆகிய நால்வருக்கும் பாடினாலும், எல்லாம் அவனே—அவன் ஒருவனே—இவை எல்லாம் அவனுக்குரிய பல பெயர்கள் என்றும் மற்றோர் இடத்தில் பாடுகிறார்கள்.

Koviloor Digital Library

பெருகியபேர் அருள் உடையார் அம்பலத்தே நடிக்கும்
பெருந்தகை என் கணவர் திருப்பேர் புகல் என்கின்ருய்
அருகர், புத்தர், ஆதி என்பேன் அயன் என்பேன் நாரா
யணன் என்பேன் அரன் என்பேன் ஆதிசிவன் என்பேன்
பருகு சதா சிவம் என்பேன் சக்தி சிவம் என்பேன்
பரம் என்பேன் பிரமம் என்பேன் பரப்பிரமம் என்பேன்
துருவு சுத்த பிரமம் என்பேன் துரியநிறை என்பேன்
சுத்தசிவம் என்பேன் இவை சித்து விளையாட்டே
(திரு. 6: 82; 88)

ஆக எல்லாம் வல்ல இறைவன் ஒன்று என்றும் எத் தேவரையும் அவன் சாயலாகப் பாடியது உண்டு என்றும் சொல்வதிலிருந்து தெய்வம் ஒன்று என்பது அவர் கொண்ட கொள்கை என்பது புரிகிறதா? மேலும்;

உருவராகியும் அருவினர் ஆகியும் உரு அருவினராயும்
ஒருவரே உளர் கடவுள் கண்டு அறிமினோ உலகுளீர் உணர்வின்றி
இருவராம் என்றும் மூவரே யாம் என்றும் இயலும்ஐவர்கள் என்றும்
ஒருவராய் உரைத்து உழல்வது என்? உடற்கு உயிர் இரண்டு மூன்று எனலாமே!
திரு 6—128—1

"அதுசரி. வள்ளலார் சுப்பிரமணியத்தைத் 'தெய்வ மணிமாலை" என்ற தலைப்பில் பாடியிருக்கிருரே இல்லையா?"

"ஆம் பாடியிருக்கிருர்!"

"அந்தச் சுப்பிரமணியருக்கும் மனிதருக்கு இருப்பதுபோல கால்களும், கைகள் பன்னிரண்டு என்றும் இருக்கிறதே! அதே விஷயத்தை அவர் கொடியேற்றும் போது கூறிய விளக்க உரையில் 'மனிதரைப் போல் கடவுளுக்குக் கால், கை உண்டா என்று கேட்டால் பக்தர்கள் விழிக்கிருர்களே!" என்று சொன்னுர் அல்லவா? அதற்கு வள்ளலார் என்ன விளக்கம் சொல்லுகிருர்!"

"அதற்கு பெருமான் கூறும் விளக்கம் இதோ படிக்கிறேன்" என்று ஆஸ்திகர் வாசிக்கிருர்.

Koyilpor Digital Library

சுப்பிரமணியம்

நமது மூலாதாரத்திற்கு மேல் மூன்று இடம் தாண்டி விசுத்தியாகிய இருதய ஸ்தானத்தில் இடப்புறத்தில் ஆறு தலையுடைய ஒரு நாடி இருக்கின்றது. இதனைச் சுப்ரமண்யம் என்று சொல்லுவார்கள். சர்வ தத்துவங்களினது அந்தத்தில் உள் மணிக்கப்பால் சாந்த நிறைவாகி உள்ள ஆறுதலாகிய சுத்த ஆன்ம அறிவான உள்ளமே சுப்ரமண்யம். பாத முதல் நாபிவரையில் உஷ்ண உருவாயும், நாபி முதல் கண்டம் முதல் ஆதார நாடி உருவாயும், கண்டம் முதல் புருவ மத்தி வரை மணி உருவாயும், உச்சியில் ஒளி உருவாயும், புத்தியில் சுத்த அறிவாயும், அநுபவத்தில் நித்யமாயும், எங்கும் நிறைவாயும், கோணத்தில் ஆறாயும், மதங்களில் ஆறாயும், சமயத்தில் ஆறாயும், சாதியில் ஆறின் கூட்ட மாயும் விளங்குகிறதே சுப்ரமண்யம்.

நமது புருவமத்தியில் ஆறு பட்டையாய் ஒரு மணிப் பிரகாசம் இருக்கிறது. இந்த மணிப்பிரகாசத்தைச் சண்முகம் என்பார்கள். இந்த தேகத்தில் உள்ள ஆறு அறிவும் ஒருங்கே சேர்ந்த சுத்த விவேகம் என்பதையும் சண்முகம் என்பார்கள்,

ஆறு ஜோதியாயும், ஆறு அறிவாயும், ஆறுதலையுடையதா யும் இருப்பதால் முகம் ஆறு. அறிவுருவமே ஒருமுகம். சுத்த தாமசம், சுத்தராஜசம், சுத்தசாத்வீகமாகிய முக்குண விளக்கமே மூன்று முகம். பசுமனம், சுத்தமனம், உள்மனம், சங்கிலித மனம் ஆகிய நான்கு—தத்துவங்களின் கூட்ட விளக்கமே நான்கு முகம். சுத்த அறிவின் மூலம். ஆத்ம அறிவின்மூலம், வாசனை அறிவின் மூலம். பாச அறிவின் மூலம் என்னும் ஆறுதத்துவ கூட்டறிவின் மூலகாரணப்பிரகாசமேஆறுமுகம்.

தோன்றும் அறிவு, தோற்றுவிக்கும் அறிவு என்னும் விஷய உணர்ச்சியும், நிர்விஷய உணர்ச்சி இரண்டும் கால்கள். ஆறு ஆதாரங்களில் உள்ள பிரகாச அப்பிரகாசமே பன்னிரண்டு கைகள். விச்சிரம் என்பது தீட்சண்ய உணர்ச்சி, வேல் என்பது சக்தி; அருள் என்பது அறிவு. மணி என்பது ஆன்ம விளக்கமாகிய நாதம், துவஜம் என்பது கீர்த்தி. ஸரஸிதம் என்பது தயவு, குக்குடம் என்பது மாச்சர்யம் இல்லாத நிறைவு, பராகம் என்பது பாச நீக்கம், தண்டம் என்பது வைராக்கிய அறிவு. பாணம் என்பது அன்பு, அபயம் என்பது சமாதான உணர்ச்சி, வரதம்என்பது நிராபரமாகிய

Koviloor Digital Library

ஆதரவு என்றும் சகிப்பு, கடட்பமாலே என்பது சர்வ தத்துவ கண்டனம். பல வர்ணம் உள்ளதும் விசித்திர வடிவானதும்; மறதி முதலிய குணங்களுக்குக் காரணம் ஆனதும், மாயைக்கு இருப்பிடமாக உள்ளதும ஆன மூலப் பிரகிருதியே மயில்.

மயிலின் மீது சுவாமி ஏறிக் கொண்டிருத்தல் முதலிய வற்றிற்குக் காரணம் என்னவென்றால்:—பிண்டாண்டமாகிய இந்த தேகத்திலும், அண்டத்திலும், மூலாஞ் ஞான காரண மாயுள்ள கேவலமாகிய பிரகிருதமாயையின் — அசுத்தா, சுத்த—மகா அகங்காரம் என்றும் இராட்சச அம்சமான சூரதத்துவம், அதின் சோதரமான மூவகைத் தத்துவத் தோடு அஞ்ஞான தசையில் ஆன்ம அறிவையும், பிண்ட விளக்கமான தேவர்களையும், விஷம விளக்கமான — இந்திரி யங்களையும், நாடி விளக்கமான யந்திரங்களையும், பிராண விளக்கமாகிய உயிரையும் விழுங்கித் தன்னரசு செலுத்தும், அந்தச் சூரத்தத்துவத்தை வதைக்கும்போது, மேற்படி தத்துவம் மகாமாயை மாயையாகிய மாமரமாயும்,மாச்சர்யம் ஆகிய கோழியாயும், விசித்திர மாயை என்னும் மயிலாயும், யானை முகமாயும், அதிகுரோதமாகிய சிங்க முகமாயும் விளங்கும். சர்வ தத்துவங்களையும் தன் வசம் ஆக்கி, அகங் காரக் கொடி காட்டி, அஞ்ஞான நாடகம் செய்த தத்துவ அகங்கரிப்பை அடக்கி, பதி—பசு—பாசம்—அநாதி நித்தியம் என்னும் சித்தாந்தத்தைவிளக்கிக் காட்டுவதற்காக, மாச்சர்ய குக் டத்தைப் போதமாகிய கையால் அடக்கியும், விசித்திர மாயையாகிய மயிலைக் கீழ்ப்படுத்தி மேல் இருந்து அடக்கி யும், ஆபாச தத்துவங்களைச் சம்ஹரித்தும், சுத்த, விஷய புவனமாகியதேவலோகத்தை நிலைபெறச்செய்தும் இந்திரிய பதியான தேவேந்திரனுடைய பெண்ணாகிய தாந்தர தத்துவம் என்றும் தெய்வயானையை இடப்பால் அமைத்தும், இந்திரியங்களாகிய வேடர்களின் கண்ணில் புலப்பட்ட மானசம் என்னும் மானினது கர்ப்பத்தில் உண்டான வள்ளி யாகிய சுத்த மனத்தை வலதத்தில் வைத்தும், நவதத்துவ காரணமாகிய—நவ வைராக தத்துவமாகிய வீரர்களைச் சபைத்தில் இருத்தியும், சகல கேவலங்களுக்கும் நினைப்புக்கும் மறப்புக்கும்—இடையில்—விவேக வடிவாயும் விளங்குவதே சுப்பிரமண்யம் மயிலின் மேல் ஏறிக் கொண்டிருத்தல் என்பது.

படைவீடு என்பது என்ன? அடங்கி இருக்கும் இடம். அடங்கி இருக்கும் ஸ்தானங்களே இயற்கை விளக்கம் தங்கும்

Koviloor Digital Library

இடங்கள் ஆகும். இவற்றிற்கு ஊர் ஆறு ஆவானேன்? ஏரகம் என்பது அழகு பொருந்திய உள்ளம் என்னும் இடம். திருவாவினன்குடி என்பது திரு—ஆ—இனன்—குடி:—திரு—இலக்குமியாகிய சந்தோஷமும், ஆ—பசுவாகிய விளக்கம் என்னும் ஜீவனும்,—இனன்—சூரியனாகிய புத்தியும், ஒன்று கூடி விளங்கும் ஆன்ம அறிவின் சுத்தகாரிய இடம். பழமுதிர்ச் சோலை என்பது இந்திரிய, கரண, ஜீவ முதலிய அனுபவப் பழங்களாகிய பிரயோசன இன்பங்கள் நீங்கிக் குறைவற்ற அறிவாய் விளங்கும் இடம். திருச்சீரலைவாய்—திருச்செந்தில்—செயந்தி புரம் என்பன,—சுத்த மனத்தின் முகத்தில் விஷயக் கடலில் அவாவாகிய அலை அடித்துக் கொண்டிருக்கும் இடமாகிய கரை, செந்துக்களின் இருதயஸ்தானமாகிய மனம், அஞ்ஞான சூரனை நிவர்த்தித்துச் சந்தோஷகரத்தைப் பெற்ற பதி மனத்தின் விளக்கம். திருப்பரங்குன்றம் என்பது அசைவில்லாத ஒன்றான விளக்கத்தை உடைய விவேக உல்லாச இன்ப நிறைவு. குன்றுதோருடல் என்பது மலை தோருடல். மலை என்பது, அலைவில்லாத உணர்ச்சிக்கு—முதற் காரணமாயுள்ள—துரிய நன்னிலை. இந்தத் துரியம்—ஜீவதுரியம், பர துரியம், சுத்த துரியம், குருதுரியம், சிவ துரியம், சத்தி துரியம் முதலிய துரிய மலைகள் அனுபவக் காட்சியில் அனந்தம் உண்டு. மேறகுறித்த அனுபவக் காட்சிகளுக்குத் தேகத்தில் இடம் எவை? கோசத்தினடி, தொப்புளின் கீழ் தொப்புள், வயிற்றில் தொப்புளுக்கு மேல், மார்புக்குக் கீழ், மார்பு, நெஞ்சு ஆக ஆறு.

பிரம்மாவைச் சிறையில் வைத்தது என்பது யாது? சுத்த மன சங்கல்ப சிருஷ்டித் தொழிலை உடைய பிரமாவாகிய மனத்தைக் கிரியையில் பிரவேசிக்க வொட்டாமல், சுத்த விளக்க விவேக நிறைவாயுள்ள, சுப்பிரமண்ய தத்துவத்தால்—சர்வ பிண்ட விஷயங்களாகிய தோன்றல், வளர்தல், குற்றம் நீங்கல், ஒன்றினிடத்தில் மலைவடைதல், தெளிதல் முதலிய பஞ்ச கிருத்தியங்களை விவேக முன்னிலையில் நடத்துங்கால்—சலிப்பற பந்தித்து இருப்பதே சிறையிட்டது.

ஈசுரனுக்கு உபதேசித்தது என்ன? உருத்திர தத்துவமாகிய பிரேரக நிலையான காரண தத்துவ முடிபான ஈசுவர தத்துவத்தின் இயற்கை ஞானம் ஏறிக் கிரியை குறைந்திருப்பதால் கிரியா காரண பூதமாயும், ஞான காரண அமிசமாயும், விளங்கும் பிரணவமாகிய உண்மை நிறைவான கிரியை யற்ற நிர்விஷய அனுபவம் ஈசுவர தத்துவத்திற்கு—நியதி செய்வது

Koviloor Digital Library

—சுத்த விவேக தத்துவ அதிஷ்டாதாவான சுப்பிரமண்யம் அன்றித் தோன்றுது. இது பற்றி உபதேசம்செய்தார் எனல் ஆயிற்று. (மேலும் என் கருத்து அப்பாவை விட பிள்ளை அறிஞனக இருந்தால்தானே அப்பனுக்கும் பெருமை—அந்தப் பாரம்பரியத்திற்கே புகழ்?)

கங்கையில் உள்ள நாணற் காட்டில் பிறந்ததுஎன்பது என்ன?

ஆன்ம இயற்கைக் குணமாகிய தயவே கங்கை. ஆன்மாவின் அனுபவ மத்திய நிலையாகிய சகித்தல் என்னும் சீவ விஷயங்களிலும் அகங்காரம் என்றும் தலையிடாமல்- கீழ்ப் படிந்த குணமே நாணம். இவ்விரண்டின் மத்தியில் அனுபவத் திற்கு இயற்கை விளக்கமாக விளங்கும் பகுத்தறிவாகிய விவேகம தோன்றுவதே உற்பத்தியானது.

பின் கார்த்திகை அரிவை பால் கொடுத்தது என்பது என்ன?

விவேக விளக்கம் தோன்றும் கால் பெண்பாலின் குணமாகிய சமனே என்னும் சகதியின் விளக்கத்தால் இன்பமாகிய அமுத திரவம் விவேகத்திற்கு ஊட்டுவதே பால்கொடுத்தல்.

சுவாமி அம்மையிடத்தில் குழந்தையைக் கொடுக்க அம்மை குழந்தை ஆறையும் ஒன்ருய்ச் சேர்த்துக் கையால் தடவ முகம் ஆறும் ஒன்றி வேருயும் உடல் ஒன்ருயும், கால் இரண்டாயும் ஆனதென்ன?

பரமாத்வாகிய சுவாமி அருள் என்னும் சக்தியுடன் தயவு என்னும் நதிக்கரையில், சகித்தல் என்னும் நாணற் காட்டில், சமாதி முதலிய காலத்தில் தோன்றி விளங்கும் போது, சுத்த வாசனு தோற்றமாகிய ஆறு பொறியாகிய குழந்தையை அருள் வசமாக்க அருட்சக்தி விகாரமின்றி அவிகாரமாய் ஆறு பொறியையும் அருட்போதக் கையில் அடக்க, விஷயங்களே அறிந்து தேயாமலிருக்க,ஆறுபொறிகள் ஒன்ருயும் குழிஆருயும், அனுபவ விளக்கம்—சாதனவிளக்கம் இரண்டும் திருவடியாயும் தோன்றி சமாதி நிலை விளங்கு வதே!

பிண்டத்தில் இவ்வண்ணமாக இருக்க அண்டத்தில் இவற் றிற்கு ஊர், ஆலயம், மூர்த்தி, செய்கை முதலிடன உண்டா வானேன்?

ஆத்மாக்கள் புண்ணிய பாவ கருமங்களால் பேதப்பட்டு மந்தம், மந்தரம், ராஜசம், தாமசம், கருமம் முதலிய வேறு

Koviloor Digital Library

பாடுகளால் அனாதி தொடங்கி இன்றளவில்— உயிர்த்திரள் ஒன்றாலும்—கரணக் கூட்டுறவால் வெவ்வேறு தன்மையால் விளங்குகின்றன. ஆதலால் மாகருணையுடைய கிருபா நிதியாகிய சிவபெருமான் திருவருளை கங்கையில் கனியென உணர்ந்த அனாதி நித்திய, முத்த சித்தராகிய ஈசுவர தத்துவ புவனாநுபவ ஈசுரனால், நாம் உய்யும் பொருட்டு, உலகத்தின் கண், பாசநூல், பசுநூல், பதிநூல், அனுபவநூல் என்றும் புராண, வேத, ஆகம, உபநிஷத்துக்கள் உண்டு பண்ணப் பட்டிருக்கின்றன. அவற்றின் வாயிலாக சரும சாண்டம், பக்தி காண்டம், உபாசனா காண்டம், தந்திரகலை, மந்திர கலை, உபதேச கலை முதலிய பேதங்களும் இவற்றிற்கு முக்கியமான ஆசாரம், வருணம், ஆசிரமம் முதலியவையும் இவற்றிற்கு ஏதுவான சரியையாதி நான்கும் இவற்றிற்கு அடைவாகிய சாலோகாதி நான்கும், இவற்றிற்கு மார்க்கமாகிய, தத்துவம், புவனம், பதம், வர்ணம், மந்திரம், கலை யாவும் நிர்ணயித்து பாப நாசத்திற்கு ஏதுவான அசைன சாந்திராயண முதலிய பிராயச்சித்தங்கள் விதித்து இவை செய்வதற்கு யோக்கியமானநதி முதலியவற்றையும் அவற்றிற்கும் அங்கமான தத்துவ அனுபவங்கள் ஆகிய உண்மை நாமங்கள் கெடாதிருக்க திருப்பெயர் முதலியவற்றை மூர்த்தி தலம் முதலியவற்றுக்கு ஏற்படுத்தி வழங்கச் செய்தார்கள்?'' என்று ஆத்திகர் வாசித்து முடித்தார்.

''இப்படி தத்துவ விளக்கம் தந்த வள்ளலார்தனக்கென ஒரு வாரிசை அல்லதுசீடரை ஏன் ஏற்படுத்திக் கொள்ளாமல் போனார்?"

அருள்பிரகாச வள்ளல் முதலில் எவ்வுயிரையும் தம் முயிர்போல் எண்ணுபவர், மேலும் மரணம் எய்துபவர்களே தமக்குப் பின்பு ஒருவாரிசு வேண்டும் என்று விரும்பலாம். பெருமான் மரணமிலாப் பெருவாழ்வு எய்தியவர்.

''நோவாது நோன்பு எனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்
சாவா வரம் எனைப்போல் சார்ந்தவரும்—தேவாநின்
பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்
யாருளர் நீ சற்றே அறை—

(திரு 6—74—11)

சாகாவரம் பெற்றவர், அவர் என்றும் இருக்க அவருக்கு வாரிசு தேவை இல்லை, மேலும் சொல்லுகிறார்,

Koviloor Digital Library

"ஆடுகின்ற சேவடிக்கே ஆளானேன்
மாளாத யாக்கை பெற்றேன்
கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே
நடுவிருந்து குலாவுகின்றேன்
பாடுகின்றேன் எந்தை பிரான்
பதப்புகழை அன்பினொடும் பாடிப்பாடி
நீடுகின்றேன் இன்பக் கூத்து
ஆடுகின்றேன் எண்ணம் எல்லாம் நிரம்பினனே!

ஆக பெருமான் இப்போது கூடுகின்ற சன்மார்க்க சங்கத்தே நடுவிருந்து குலாவுகிறார்.

"அது சரி. வள்ளலார் தன் சன்மார்க்கக் கொள்கையைப் பற்றிக் குறிப்பிடும் போது "கடை விரித்தேன் கொள்வாரில்லை—கட்டிவிட்டேன்" என்று சொன்னாராமே! அது உண்மையா?"

நிச்சயமாக அது உண்மை அல்ல. காரணம் அவர் பாடலே அகச்சான்று—

பண்ணிய பூசை நிறைந்தது சிற்றம்பல நடம் கண்டு
எண்ணிய எண்ணம் பலித்தன மெய்யின்பம் எய்தியதோர்
தண்ணிய ஆரமுது உண்டனன் கண்டனன் சாமியைநான்
நண்ணிய புண்ணியம் என்றுரைக்கேன் இந்த நானிலத்தே

6—132—95

வானுகி வான்நடுவே மன்னும் ஒளியதனில்
தானுகி வானுகி சன்மார்க்கர் உள்ளிருக்கும்
தேனுகித் தெள்ளமுதாய்த் தித்திக்கும் தேவே நீ
யானுகி என்னுள் இருக்கின்றான் என்னேயோ?

6—132—35

8. மனதைப் பற்றி...!

இந்த மனம் இருக்கிறதே இது ஒரு குரங்கு மாதிரி. இப்படி வெறும் வார்த்தைகளால் சொன்னால் மட்டும் மனதினைப் பற்றி நாம் முழுதும் தெரிந்து கொண்டது ஆகுமா? ஆகாது. எனவே ஒரு குரங்குக் கதை சொல்லித்தான் நம் மனதின் நிலையை உணரலாமே என்று சொல்லுகிறேன், கேளுங்கள்,

Koviloor Digital Library

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். ஒருவன் பெயர் ஹரி மற்றொருவன் பெயர் அரன். இருவரும் ஒரே பள்ளிக்கூடத்திலும் பின்பு கல்லூரியிலும் இணைந்தே நன்கு படித்துப் பட்டம் பெற்றனர். ஹரிக்கு உயர்ந்த உத்தியோகம் கிடைத்தது. ஆயினும் அவன் அதில் அதிகம் சம்பாதிக்க முடியாது என்று எண்ணித் தன் தந்தையார் செய்த வியாபாரத்தில் ஈடுபட்டான். நல்ல வருவாய்வந்தது. பெரியதனவந்தன் ஆனான்.

அரன் என்பவனுக்கு உலகியல் வாழ்வே பிடிக்காமல் ஒரு சந்நியாசியாக வாழ்ந்து வந்தான். ஊருக்குப்புறத்தே அமைந்திருந்த மலைக்காட்டின் மத்தியில் ஓர் ஆச்சிரமம் அமைத்துக் கொண்டு தெய்வச்சிந்தனையில் ஈடுபட்டான். எனினும் அவன் தன் துணைக்கு இருக்கட்டுமே என்று நினைத்து ஒரு குரங்கை வளர்த்துவந்தான். அந்தக் குரங்கிற்கு நல்ல ஆகாரம் எல்லாம் கொடுத்து நல்ல விதமாகவே பயிற்சி கொடுத்து வளர்த்து வந்தான். பின்பு அந்தக் குரங்கு இவன் இட்ட கட்டளையை நிறைவேற்றும்படியாக அதைப் பழக்கி வைத்திருந்தான்.

அரன், சதா கையிலே ஒரு நீண்ட கோல் வைத்திருப்பான். அந்தக் குரங்கிற்கு 'மனேஜ்' என்று பெயரிட்டிருந்தான். இவன் அதை எப்படி வேலை வாங்குவான் என்பதைக் கேளுங்கள். "அடே மனேஜ்! இங்கே வா!" என்றால் குரங்கு ஓடிவரும். வந்ததும் வராததுமாக தன் கையில் உள்ள கோலால் 'டொக்" என்று ஒரு தட்டு அதன் தலைமீது தட்டுவான். உடனே "டேய் மனேஜ்! நீபோய் அந்தப் பெட்டியை எடு!" என்று ஏவினால் அது அவன் குறித்த பெட்டியை எடுத்துவரும்.

அதுபோல குரங்கை அரன் தண்ணீர் கொண்டு வரும்படி ஏவ நினைத்தால், அதை 'மனேஜ்!' என அழைப்பான். அழைத்ததும் அதன் தலையில் 'டொக்!' என்று தன் கைக் கோலால் ஓர் அடி கொடுப்பான். அது அடியை வாங்கிக் கொண்ட பின்னர் அவன் ஏவுதலை அறிந்து அரனுக்குப் பணி செய்யும். இப்படி இவன் குரங்கு இட்ட வேலையைச் செய்யும்படிப் பழக்கியது கண்டு ஊர் மக்கள் அதிசயித்தனர். ஒரு குரங்கை அடக்கிய சந்நியாசி என்று அரனுக்குப் பேர் புகழ் கிடைத்தது.

Koviloor Digital Library

ஒருசமயம் அந்தக் காட்டின் வழியே ஹரி போய்க்கொண்டிருக்கும்போது ஹரியின் வண்டிக்காரன் மூலம் ஆங்கே மலை அடிவாரத்தில் அரன் ஆச்சிரமம் அமைத்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அத்துடன் 'அரன்' என்ற அச்சந்நியாசி ஹரியோடு கல்லூரியில் படித்தவரே என்றும் விளக்கினன். அந்த வண்டிக்காரன் அவர்கள் வீட்டில் வெகுகாலமாக வேலை பார்த்து வந்ததால் ஹரியும் அரனும் ஒன்ருக இணைந்து படித்தது, விளையாடியது எல்லாம் தெரிந்திருந்தான். ஒருசமயம் காட்டில் வண்டிக்காரன் அரன் என்ற சந்நியாசியைப் பார்த்ததும் இவன் அடையாளம் புரிந்து அவரோடு பேசினன். அது சமயம் அரனும்தான் ஹரியைப பார்க்க விருப்புவதாகவும், சமயம் கிடைத்தால் இங்கு வந்து போகும்படியும் வண்டிக்காரன் மூலம் சொல்லி இருக்கிருன். இந்தச் சேதி வண்டிக்காரனுக்கு இப்போது ஞாபகம் வரவே, ஹரியிடம் விஷயத்தைச் சொல்லி 'அரன்விருப்பத்தை நிறைவேற்றினுல்என்ன?' என்று கேட்டான். ஹரிக்கும் தன் சிநேகிதன் ஒரு சந்நியாசியாக இருப்பது தெரிந்து மகிழ்ந்தான். அத்துடன் ஒரு குரங்கை அடக்கி இப்படி வளர்த்து நல்ல புகழைத் தேடிக் கொண்டான் என்பதை நேரில் கண்டு களிக்க ஆசைப் பட்டான். ஆகவே வண்டியில் ஹரியை அரனுடைய ஆச்சிரமத்திற்கு வண்டிக்காரன் அழைத்துக் கொண்டு வந்து நிறுத்தினன்.

பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமோ? நீண்ட நேரம் அவர்கள் தம் தொன்மை நிகழ்ச்சிகளை எல்லாம் பேசி அளவளாவிக் கொண்டனர். அடுத்து அரன் தன் ஆச்சிரமத்தில் சாப்பிடும்படி 'ஹரி'யை வேண்டிக் கொண்டான். நல்ல பசியும் ஏற்பட்ட தருணம் ஆதலால் ஹரி தன் சிநேகிதனுடைய ஆச்சிரமத்தில் ஆகாரம் உண்ண ஒத்துக் கொண்டான்.

உடனே அரன் 'மனேஜ்' என்று குரங்கை அழைத்தான். அதன் தலையில் தன் கைக் கோலால் ஒரு தட்டு (அடி) கொடுத்துவிட்டு 'முகம் கால்கை கழுவத் தண்ணீர் எடுத்து வா!' என்று ஆக்ஞாபித்தான். குரங்கு ஒரு குவளை நிறைய நீர் கொண்டு வந்து கொடுத்தது. ஹரி தன் முகம் கால்,கை கழுவிச் சாப்பிடத் தயார் ஆகும் முன்பே சமைத்த ஆகார வகைபருக்களை குரங்கு மூலம் ஒன்றன் பின் ஒன்றாக எடுத்துக் கொண்ரும்படி அரன் சொன்னன். குரங்குக்கு ஒவ்வொரு

Koviloor Digital Library

சாமானை எடுத்து வர ஆணை பிறப்பிக்கும் சமயம் எல்லாம் அதன் தலைமீது தன் கையில் உள்ள கோலால் அடிப்பது கண்ட ஹரிக்கு மிகவும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நீண்ட நாளைக்குப் பின்பு ஒரு நண்பனைச் சந்திக்கிறோம். என்ன செய்வது என்று வந்த கோபத்தை அடக்கியவாறு சாப்பாட்டிற்குப் போட்டிருந்த இலை முன்பு வந்தான்.

அதுசமயம் 'டேய் மனோஜ்!' என்று அழைத்து அதன் தலையில் அடித்து 'ஐயா உட்கார மனை எடுத்து வா!' என்று அனுப்பினான். அப்போது அரன் மீது சற்று கடுப்பாகவே ஹரி பேசினான். ''அப்பா அரன்! நீ உன்னை ஒரு சாது சந்நியாசி என்றெல்லாம் அழைத்துக் கொள்கிறாய். ஆனால் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி இந்த மனோஜ் குரங்கு மீது டொம்! டொக்! என்று அடித்து அடித்தே வேலை வாங்குகிறாய். உனக்கு ஜீவகாருண்யம் என்பது கொஞ்சம் கூடக் கிடையாதா?'' என்று கேட்டான்.

அப்போது அரன் சொன்னான். ''இந்தக் குரங்கு கோல் ஆடாவிட்டால் அது ஆடாது. அலுவல் செய்யாதப்பா!'' என்றான்.

''சேசே! என்னால் இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நீ இந்தக் குரங்கை அடிக்கக்கூடாது. முதலில் அந்தக் கைக்கோலை எடுத்து வைத்துவிட்டு என்னோடு நீயும் வந்து சாப்பிடு. சமைக்கப்பட்டவை எல்லாமே வந்துவிட்டன. ஆகவே நீயும் நானும் நமக்கு நாமே பரிமாறிக் கொண்டு சாப்பிடலாம். தயவுசெய்து நான் சாப்பிட்டு ஊருக்குத் திரும்பும்வரை அந்தக் கோலைக் கையில் எடுக்கக்கூடாது. குரங்கை அடிக்கக்கூடாது. இதற்கு நீ சம்மதித்தால் நான் உன் ஆச்சிரமத்தில் ஆகாரம் உண்பேன். இல்லையானால் எனக்கு எதுவும் வேண்டாம். நான் ஊருக்குப் புறப்படுகிறேன்!'' என்று மிகவும் வருத்தமும் சினமும் கலந்து பேசினான்.

இதைக் கேட்ட அரன் ''ஹரி! நான் அப்படியே செய்கிறேன்!'' என்று சொல்லி கோலைத் தூர எறிந்துவிட்டு அவனுடன் இருந்து உண்பான் ஆயினன்,

இவர்கள் இருவரும் உணவு அருந்திக் கொண்டிருக்கும் பொழுதே குரங்கு மெது மெதுவாக ஹரியின் பக்கம் வந்து நின்றது. ஹரி மிகவும் வாஞ்சையாக சதா அடிபட்ட அந்த மனோஜ் குரங்கின் தலையைத் தடவிக் கொடுத்தான். அதைப்

Koviloor Digital Library

பார்த்து அது பல்லை இளித்தது. பிறகு குரங்கு ஹரியின் கழுத்தில் ஏறி உட்கார்ந்து கொண்டு ஹரியின் தலையைத் தடவிக் கொடுத்தது. இதைக் கண்ட ஹரி அன்பு மிகுதியால் மனோஜ் விளையாடுகிறது என்று நினைத்தான். அப்போதும் தன் இடக் கையால் குரங்கின் முதுகுப்புறம் தட்டிக் கொடுத்தான்.

சிறிது நேரம் சென்றது. ஹரி உருண்டைச் சோற்றை உருட்டி வாயில் போடப் போகும் போது அதைத் தட்டிப் பறித்துக் குரங்கு தின்றது. பிறகு ஹரியின் தலைமயிரைப் பிய்த்து அவனை உலுக்கி அவனை அங்கிருந்து எழச் செய்து விட்டு, பரிமாறப்பட்ட இலையில் உள்ள பண்டங்களின் மீது பாய யத்தனித்தது. அது சமயம் ஹரி அரனை ஏற இறங்கப் பார்த்தான்.

''நண்பனே! நான் வாக்குக் கொடுத்திருக்கிறேன். குரங்கை நான் எதுவும் செய்யப் பேவதில்லை. சாப்பிடு!'' என்று அரன் சந்நியாசி தன் நண்பனிடம் பல தடவை சொல்லிக் கொண்டான். குரங்கின் சேஷ்டைகள் அத்து மீறின. ஹரியின் சட்டையை அது பிய்த்தது.

இப்போது ஹரி அரனைப் பார்த்து மிகவும் கெஞ்சிக் கூத்தாடி, ''தயவு செய்து அந்தக் கோலைக் கையில் எடு. இந்தக் குரங்கை அடக்கு,'' என்று சொன்னான். அரன் ஓடிப்போய் அந்தக் கோலைக் கையில் எடுத்ததும் இன்னும் பொருள்களை நோக்கி வந்த குரங்கு திசைமாறி ஓடிவிடப் பார்த்தது. அரன் 'டக்' என்று ஒரு அடி போட்டதும் குரங்கு கண் பிதுங்கி அடக்க ஒடுக்கமாய் இருந்தது.

அதன் பின்பு அவர்கள் உண்டு முடித்தனர். அப்போது அரன் சொன்னான். இது வீட்டில் பழங்கிய குரங்கு. காட்டில் நடமாடிய குரங்கு இருக்கிறதே அதன் சேஷ்டைகளை நீ பார்த்தால் பயப்படுவாய்!'' என்று சொன்னான்.

''ஆம் ''கோல் ஆடக் குரங்காடும்!'' என்பது சரியாயிற்று'' என்றான் ஹரி.

இந்த மனோஜ் குரங்கு என்பது நம் மனக்குரங்கே தான். அதை ஒடுக்க நமக்கு எல்லையற்ற பொறுமை அடக்கம் என்ற கோல் தேவை. இதை வள்ளல் பெருமான் ஓர் இடத்திலே வருணித்திருக்கிறார்கள். மேலும் பல அருளாளர்கள் சொல்லியிருக்கிறார்கள், மனத்தைப்பற்றி, அவர்களில் அருணகிரியாரும்

Koviloor Digital Library

ஒருவர். அவர் கூறியதை நாம் சற்று ஆய்ந்து பார்த்த பின் வள்ளற் பெருமான் வாக்கு என்ன என்பதைப் பார்ப்போமா?

அருணகிரியார் கூற்றை திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் வெகு அழகாக எழுதியிருக்கிறார்கள்.

'அருணகிரியார் மனதை விளித்து மூன்று பாடல்களில் அறிவுரை பகர்கிறார். இவை மூன்றும் மிகவும் இனிமையான உபதேசம். மனம் என்ற குரங்குக்குச் சதா சொல்லிச் சொல்லிப் பதியவைத்தால் தவிர அதன் புத்தி மாறாது என்ப தால் இவ்வாறு உபதேசம் செய்கிறார்.

கந்தரனுபூதி 7, 37ஆம் எண்ணுள்ள பாடல்கள் ''ஏ மனமே! நீ வீணே கெடுகிறாய். பிழைக்கும் வழி கூறுகிறேன் கேள்! வறியவருக்கு ஒளியாமல் கொடு. 'கொடுத்தோம். கொடுத்த உடைமை நம்முடையது' என்ற எண்ணம் வாக் கூடாது. உடைமை யாவும் முருகனுடையவை. உடம்பு, கரசரணாதிகள், மனம் முதலிய கருவி கரணங்கள் எல்லாம் அவன் தந்தவை. ஆதலால் ஏழைகளுக்குத் தரும்போது தான் தந்தேன் என்ற தற்செருக்குத் தலைகாட்டாமல் முருகனை நினை. மனமே! உன்னுடைய நீண்ட வேதனைகளை எல்லாம் நம் பரமபிதாவினுடைய வடிவேல் தூளாக்கி விடும். ஆத லால் அந்த நெடிய துன்பங்களைச் சுட்டுவிடு. வினைகளை எல்லாம் விட்டுவிடு.''

கெடுவாய் மனனே கதிகேள் கரவாது
இடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள் படவே
விடுவாம் விடுவாய் வினை யாவையுமே!

('கந்தரனுபூதி 7ஆம் பாடல்")

மற்றொன்று, ''மனமே! உனக்குச் சினம் மூள்கிறபோது அறிவு அறவே அற்றுப் போகும். ஒரே மயக்கம் தான் உண் டாகும். சீற்றம் மிகுதியாக வந்தவுடன் சொல்வன இன்ன, செய்வன இன்ன என்று தெரியாத நிலை ஏற்படுகின்றது. ஆதலால் மலையே புரண்டு வந்தாலும் வானம் துளங்கி வீழி னும் நிலை கலங்காதே! பொறுமையாக இரு. அந்தப் பொறு மையான பூமியில் ஞானமாகிய மரம் முளைக்கும். அந்த ஞானத் தருவில் அருள் பழுக்கும். இந்த அருள் பழத்தை அழிக்க ஒரு குரங்கு வரும். அதுதான் அகந்தை என்ற குரங்கு. 'நான் தான்' என்ற அகந்தையை ஞான

Koviloor Digital Library

வாளால் வெட்டி எறி. அங்ஙனம் அடியோடு அகந்தையைத் தொலைத்து விட்டு மலையைப் பிளந்த வேலாயுதக் கடவுளுக்குத் தொண்டனாக இரு. தொண்டனாகவே இருக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலிட வேண்டும். அந்த விருப்பம் மிகுதியாக எழ வேண்டும்.

கிரிவாய் விடுவிக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே!

கந்தரநுபூதி-37 ஆம் பாடல்.

அருணகிரியார் இந்தப் பாடல்கள் மூலம் உள்ளபடியே தன் மனத்தை நோக்கித் தான் அறிவுரை கூறிப் பாடினார் என்று எண்ணுகிறீர்கள். உலகில் உள்ள முந்நூறு கோடி மக்களையும் நோக்கிப் பாடியருளினார். ஆ! என்ன அரிய உபதேசம்?''

வள்ளற் பெருமான் சொன்னார். ''இந்த மனக்குரங்கைப் பார்த்து வனத்திலேயே வாழுகிற குரங்கு ஆச்சர்யமும் அதிசயமும் அடைந்ததாம். ஏன்? வனக்குரங்கு காட்டில் பல மைல்களைக் கடந்து செல்ல வேண்டும் என்று நினைத்தால் பற்பல மரங்களின் கொம்பு கிளைகளைப் பற்றித் தொங்கியபடி பாய்ந்து பாய்ந்து குதித்துக் குதித்துக் கடந்துபோகும். தரை வழி நடந்து போகாது. ஆனால் மனக்குரங்குஇருக்கிறதே இது ஒரு கணத்தில் இந்தப் பூமியிலிருந்து பலகோடி மைல்களுக்கு அப்பாலே திகழும் அண்டங்களுக்கும் தாவுமே? இதைப் பார்த்துத் தான் வனக்குரங்கு அதிசயிக்கிறது.

வள்ளலார் தான் படித்த படிப்பு, கேள்வி ஞானம், பற்று முதலியவற்றையும் துறந்தார். பார்க்கிற கண்பார்வை, தொடுகிற ஸ்பரிச உணர்ச்சி நாத்தடிக்க உண்ணும் சுவை, நாசிகுளிர முகர்ந்த வாசனை, தன்சாதி, மதம், குலம் போன்ற சங்கறப விகற்பங்களையும் வளைத்து வளைத்து இவனிடம் வந்த போதிலும் அவற்றை அடக்கினார். ஆனால் பாழாய்ப் போன மனக்குரங்கு அப்போதும் தான் நிற்கமாட்டேன் என்று குதியாய்க் குதித்துத் துடித்ததாம். இத்தனையையும்அடக்கத் தெரிந்த வள்ளல் பெருமான் இந்த மனக்குரங்கை மட்டும் அடக்கமுடியாது தவிப்பது பார்த்தும் வனக்குரங்கு வியந்தது என்கிறார். ஆனால் அதன் துடிப்பை அடக்க அவருக்கு இறைவன் திருவருள் தான் துணை செய்துஅவரை ஆட்கொண்

Koviloor Digital Library

டான் எனவும் அவனே சுத்தநடம் புரியும் துரை என்றும் பேசுகிற பாடலைப் படியுங்கள்:

படிப்படக்கிக் கேள்வி எல்லாம் பற்றற விட்டு அடக்கிப்
பார்த்திடலும் அடக்கிஉறும் (ஸ)பரிசமெல்லாம் அடக்கித்
தடிப்புறும் ஊணசுவை அடக்கி(க்) கந்தமெல்லாம் அடக்கி
சாதி மத சமயம் எனும் சழக்கையும் விட்டு அடக்கி
மடிப்பு அடக்கி நின்றாலும் நில்லேன் நான் எனவே
வனக்குரங்கும் வியப்ப என்தன் மனக்குரங்கும் குதித்த
துடிப்பு அடக்கி ஆட்கொண்ட துரையே என் உளத்தே
சுத்தநடம் புரிகின்ற சித்த சிகா மணியே

(ஆறும் திருமுறை 58-8)

இறைவனுடைய பிள்ளைப் பெருமானாகிய வள்ளல் பெருமானும் இந்த மனம் அடங்க மாட்டாது துடியாய்த் துடித்திருக்கிறார். இந்த மனத்தை எப்படி எல்லாமோ பயங் காட்டி அதை அடக்க யத்தனித்தார் என்பதைக் கீழ்க்கண்ட பாடல்கள் நன்கு விளக்கும்.

''மனம் எனும் ஓர் பேய்க் குரங்கு மடைப்பயலே! நீதான்
மற்றவர்போல் எனை நினைத்து மருட்டாதே கண்டாய்!
இனமுற என் சொல் வழி யிருத்தி எனில் சுகமா(க)
இருந்திடு நீ! என் சொல்வழி ஏற்றிலை யானாலோ
தினை அளவும் உன் அதிகாரம் செல்ல ஒட்டேன்! உலகம்
சிரிக்க உன்ன அடக்கிடுவேன் திருவருளால் கணத்தே
நனவில் எனை அறியாயோ? யார் என இங்கு இருந்தாய்?
ஞான சபைத் தலைவனுக்கு நல்ல பிள்ளை நானே!''

பன் முகம் சேர் மனம் எனும் ஓர் பரியாசப் பயலே
பதையாதே சிதையாதே பார்க்கும் இடம் எல்லாம்
கொல் முகம் கொண்டு அடிக்கடிப் போய்க் குதியாதே எனது
குறிப்பின் வழி நின்றிடு! நின் குதிப்பு நடவாது.
என்முகம் ஓர் புல்முனைமேல் இருந்த பனித்துளி நீ!
'இம்' எனும்முன் அடக்கிடுவேன் என்னை அறியாயோ?
பின்முன் என நினையேல்காண்! சிற்சபையில் நடிக்கும்
பெரிய தனித் தலைவனுக்குப் பெரிய பிள்ளை நானே.

விரிந்த மனம் எனும் சிறிய விளையாட்டுப் பயலே!
விரிந்து விரிந்து அலையாதே! மெலியாதே! விடயம்
புரிந்த நெறி புரிந்து அவமே போகாதே. பொறி வாய்ப்
புரையாதே விரையாதே புகுந்து மயங்காதே

Koviloor Digital Library

தெரிந்து தெளிந்து ஒரு நிலையில் சித்திரம் போல் இரு நீ
சிறிது அசைந்தால் அக்கணமே சிதைத்திடுவேன் கண்டாய்
பரிந்து எனை நீ யார் என்று பார்த்தாய்? சிற்சபை வாழ்
பதிதனக்கே அருள் பட்டம் பலித்த பிள்ளை நானே!''

மனத்தைப் பார்த்து சுவாமிகள் ''ஏ மனமே! நான் யார் தெரியுமா? சிற்சபையிலே நடம் செயும் பெரிய தலைவன் இருக்கிறானே, அவனுக்கு நானே பெரிய பிள்ளை. அதுமட்டுமா? நல்ல பிள்ளை. இன்னும் கேள். நான்தான் அந்தச் சபா பதியினுடைய அருள பட்டம் பலித்த பிள்ளை. ஆக நீ உன் போக்குப்படிப போய் என்னை அலைக்கழிப்பாய் ஆனால் உன்னைச் சும்மா விடமாட்டேன். நீ எனக்கு ஒரு புல்லின்மீது இருக்கும் பனித்துளிக்குச் சமானம். அதன் வாழ்வு எத்தனை காலம் தெரியுமா? ஆக உன்னை ஒழித்துக் கட்டுவேன். ஆக நீ என்னை மருட்டாதே! அடிக்கடி என்னிடம் குதியாதே! விரியாதே! விரிந்து அலையாதே! மெலியாதே, புரையாதே! விரையாதே, மயங்காதே நான் சொன்னபடி ஒருநிலையில் சித்திரம் போல அழகாக அடங்கி ஒடுங்கிவிடு. இல்லை இந்தக் கணமே உன்னைச் சின்ன பின்னம் செய்திடுவேன!'' என்று பயம் காட்டுகிறார். அந்த ஆண்டவனுடைய அருமருந்தன்ன பிள்ளைக்கு மனம் அடங்கியதா? ஊகும் அடங்கவில்லை, எனவே வள்ளலார் இறைவனை நோக்கிப் பேசுகிறார்.

''இறைவா? என் மனம் இத்தனை சொல்லியும் அடங்க வில்லையே! நான் எப்படியெல்லாமோ மாறி மாறி அடித்துத் துடித்து அச்சுறுத்திப் பார்த்தும் இந்தப் பாழ் மனம் என் வசம் அடங்க மறுத்து விட்டதே? ஆக நீ என்னைப் பற்றி என்ன கருத்துக் கொண்டுள்ளாயோ? தெரியவில்லையே. நான் செய்த தீமைகளை எல்லாம் நீ பொறுத்துக் கொள்வாயாக. ஒருவேளை அடியேன் செய்த வல்வினை எல்லாம் ஒன்றுகூடிச் சேர்நது விட்டதோ? அதனால் நின் திருவருள் கிடையாமை யால் என் பாவி மனம் என்வசம் அடங்க மறுக்கிறதோ? எது எப்படி இருந்தாலும் சரி. இந்த வல்வினைகளின் கூட்டத்தி லிருந்து பாதுகாக்க வேண்டியது உன் கடன்! அது உன்னைச் சேர்ந்தது. இன்னும் பலவாறு உனக்குநான் சொல்லித் தெரியவேண்டியது இல்லையே? ஆகவே அம்பலத்திலே கூத் தாடுபவனும் திருஒற்றியூரிலே எழுந்தருளுயிருப்பவனுமாகிய நீஎன்னைப் பாதுகாக்கத் தவறி விட்டால் உனக்குவீண்பழி வந்துசேர்ந்து விடும். ஆம் உனக்கே தான் பழிவரும். ஆக

Koviloor Digital Library

அதற்காகவாவது எம்மை இந்த வினைக்கூட்டத்திலிருந்து விடுவித்துக் காத்திடுவாய்" என்று இரண்டாம் திருமுறை 25 ஆம் பதிகம் 'ஆடல் அமுதப் பத்து' என்ற தலைப்பில் உள்ள பத்தாம் பாட்டில் அவர் கூறுவது காண்க.

யாது நின் கருத்து அறிந்திலேன் மனமோ
என் வசப்படாது இருத்தலை உரைத்தேன்
தீது செய்யினும் பொறுத்து எனைச் சிவனே
தீயவல் வினை சேர்ந்திடா வண்ணம்
பாதுகாப்பது உன் பரம் இன்றேல் பலவாய்
பகர்தல் என்ன காண்? பழிவரும் உனக்கே
யாது காண்டி எம் ஒற்றி ஊர் அரசே?
அம்பலத்தில் நின்று ஆடல் செய் அமுதே!

9. நெடுங் காமக் கடல்

வள்ளல் பெருமான் தன்னைப் பற்றி இப்படிச் சொல்லுகிறார். "எனக்கு எப்படிக் கல்வி கற்க வேண்டும் என்று தெரியாது; அந்த முறை அறியவில்லையே! அதுதான் போகட்டும். எதைக் கற்க வேண்டுமோ அதைக் கற்ற கருத்து உடையவர்கள் கூட்டத்திலாவது நான் கலந்து களித்திருக்க முடிகிறதா? ஐயோ அதுவும் இல்லை. எனக்குத்தான் எந்தமாதிரியான நிலையில் இருந்து வாழ வேண்டும் என்ற முறை வகை தெரியுமா? ஐயோ தெரியாதே! ஆனால் அதெல்லாம் தெரியாது என்று நீ சொன்னால் எப்படி? இப்போது ஏதோ ஒரு நிலையில் நீ இருக்கிறாயே என்று கேட்டால் ஆம் ஒருவகை நிலையில் நான் நிற்கிறேன் என்று சொல்வதை விட அந்த நிலையில் நிற்பவர்களைப் போல நடித்தேன் என்று கூறுவதுதான் சாலப் பொருந்தும். ஏன் அப்படிச் சொல்லுகிறேன். தெரியுமா? காமம் என்று பேசப்படும் நீண்ட பெரும்கடலை நான் கடப்பதற்கு நீந்தும் முறையும் அறிந்தேன் இல்லை. எனவே இழிவான குளத்திலே திளைத்துத் திரிகிறேன். இப்படி இருக்கும் நான் போவதற்குப் புகலிடம் ஏது? இந்த இழி தகு நிலையை நான் யாரிடம சொல்வது? (சொன்னால் கேவலம தானே) ஆக என்ன சொல்வேன்? ஏதும் அறிந்திலேனே!" இப்படிப்பட்ட நான் சித்குணமான அம்பலத்தில் ஆடும் உன் திருவடிகளை என தலையிலே சூடுவது எங்ஙனம் என்ற கருத்தை ஒரு கவியில் சொல்கிறார்.

Koviloor Digital Library

கற்கு முறை கற்றறியேன் கற்பன கற்று அறிந்த
கருத்தர் திருக்கூட்டத்தே களித்திருக்க அறியேன்
நிற்குநிலை நின்று அறியேன் நின்றாரின் நடித்தேன்
நெடுங்காமப் பெரும் கடலை நீந்தும் வகை அறியேன்
சிற்குணமாம் மணி மன்றில் திருநடனம் புரியும்
திருவடி என் சென்னி மிசை சேர்க்க அறி வேனே?
இற் குணஞ்செய் துழல்கின்றேன் எங்ஙனம் நான் புகுவேன்
யார்க்குரைப்பேன் என்ன செய்வேன் ஏதும் அறிந்திலனே!

இந்தப் பாட்டிலிருந்து வள்ளலார் 'உண்மையிலேயே நெடுங்காமப் பெருங்கடல் நீந்த முடியாது தவித்தவரா?" என்று கேட்டால் நிச்சயமாக இல்லை என்று கூறும் அகச் சான்றுகள் பல அவற்றை இந்தப் பக்கத்தின் அடிக்குறிப்பு களின் மூலம் காண்க. அப்படியானால் அவர் தன்னை இப்படி படியாதவர் என்றும் காமாந்தகாரர் என்றும் ஏன் சொன்னார் தெரியுமா? இறைவன் நம்மைத் தீவினையிலிருந்து உய்விக்க வேண்டும் என்பதற்காகவே இப்படிக் கூறுகிறார். ஆம் அவர் தான் இதே பாட்டில் சொன்னாரே, 'நின்றாரில் நடித்தேன்' என்று. இந்தக் கூற்றை ஒரு திருஷ்டாந்தக் கதை மூலம் விளக்கினால் மிகவும் தெளிவு பெறலாம்.

அடிக்குறிப்பு :

''ஏடகத்தே எழுதாத மறைகள் எல்லாம் களித்தே
''என்னுளத்தே எழுதுவித்த என் உரிமைப் பதியே!

ஓதி உணர்ந்தவர் எல்லாம் எனைக் கேட்க
எனைத்தான் ஓதாமே உணர்ந்து
உணர்வாம் உருவுறச் செய்யுறவே—என்றும்

''படித்தேன் பொய் உலகியல் நூல் எந்தாய் நீயே
படிப்பித்தாய் அன்றியும் அப்படிப்பில் இச்சை
ஒடிந்தேன் நான் கடித்தேனே ஒடிப்பித்தாய்—என்றும்

கற்றது பற்றிக் கூறுகிறார். 2—5—73

பெண்ணைத் தான் தொட்டது பற்றி வள்ளலார் வாக்கால் அறிவோம்.

Koviloor Digital Library

ஒரு குடும்பத்தில் தாய், தந்தை, பாட்டி, மகள், மகன் என்று ஐந்து பேர் இருந்தனர். தந்தையின் பெயர் தத்தன். தாயின் பெயர் அன்னம், தத்தனைப் பெற்ற தாயாரின் பெயர் பொன்னி. தத்தனுக்கும் அன்னத்திற்கும் திருமணம் ஆன இரண்டாவது வருடத்தில் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு மீனு என்று பெயரிட்டனர். மீனு பிறந்த பின் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் ஆண் குழந்தைபிறந்தது. அதற்குக் கிட்டு என்று பெயரிட்டனர்.

கிட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து இரண்டாம் வகுப்புப் படித்து வந்தான்.

தத்தன் ஒரு நவதானிய வியாபாரி. அடிக்கடி வெளியூர் போய்வருவது உண்டு. ஒவ்வொரு தடவையும் வெளியூர் போய் விட்டுத் திரும்பும்போது தன் பிள்ளைகளுக்குத் தின் பண்டங்களும் விளையாட்டுச் சாமான்களும் மனைவி, தாயாருக்குத் துணிமணிகளும் வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து அவர்களை மகிழ்விப்பது வழக்கம்.

அந்தத் தடவை அவன் டில்லி போயிருந்த சமயம் அழகிய பளிங்குக் கல்லால் வெகு நேர்த்தியான வேலைப்பாடுடன் கூடிய குட்டித் தாஜ்மஹால் பொம்மை ஒன்று வாங்க வேண்டும் என்று நினைத்தான். அதுசமயம் மகன் கிட்டு இதற்குமுன் வாங்கிக் கொடுத்த பொருள்களை எல்லாம் வீணடித்து இருக்கிறானே; இதையும் உடைத்து எறிந்து

''முன் செய்த வல் வினையோ நின்னருட் செயலோ அறிந்திலேன்.
மோகமேலின்றி தனித்தனி நடுசார் மடந்தையர் தமக்குள்
ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்: குனிந்த மற்று அவரைத்
தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்!"

என்று கூறுவது காண்க.

''முன்னொடு பின்னு நீதருமடவார் முயக்கினில் பொருந்தினேன் அதுவும், பொன்னோடு விளங்கும் சபைநடத் தரசன் புணர்ப்பலால் என் புணர்ப்பு அலவே, என்னோடும் இருந்து இங்கு அறிகின்றநினக்கே எந்தையே இயம்புவதென்னே சொன்னோடு வானத்து அரம்பையர் என்னும் துரும்பெனக் காண்கின்றேன் தனித்தே.''

Koviloor Digital Library

விட்டால் பணம் வீண் விரயம் ஆனதாக விசனத்தை ஏற்படுத்துமே என்று நினைத்துக்கொண்டான். அந்த பொம்மைக கடைக்காரர் தாஜ்மஹால் பளிங்கு உருவத்திற்குள் பொருத்தப்பட்டிருந்த மின்விளக்கை ஏற்றியதும் தாஜ்மஹால் ஒளி சிந்தியது. அப்போது தத்தன் உள்ளத்தைப் பறிகொடுத்தான். 'என்ன ஆயினும் பரவாயில்லை, என்று நினைத்து திடசித்தத்தோடு பொய்மைத் தாஜ்மஹாலை வாங்கி ஊர் மீண்டான். மற்றும் பிள்ளைகளுக்குத் தின்பண்டங்களும் பெரியோருக்கு ஆடை அணிகலன்களும் வாங்கி வந்தான்.

அவற்றைக் கொடுத்துவிட்டுத் தன் மனைவியை அழைத்துச் சொன்னான். ''அன்னம்மா! இந்த அற்புதமான தாஜ்மஹால் பொம்மையை வாங்கும் முன்பு ஆயிரம் தடவை வாங்க வேண்டாம் வாங்க வேண்டாம் என்று உள்மனம் சொன்னது. இருந்தாலும் ஆசை யாரை விட்டது? எப்படியாவது நல்ல முறையாக வீட்டில் பாதுகாப்பான இடத்தில் அதைவைத்து சர்வ ஜாக்கிரதையுடன் இருந்தால் போச்சு, அதற்கு ஓர் ஆபத்தும் வரப்போவதில்லை" என்ற முடிவோடு வாங்கி வந்து விட்டேன். இனி இதை எங்கே எப்படி வைத்தால் பாதுகாவலோ அதை அப்படி வைத்துப் பராமரிக்க வேண்டியது உன் பொறுப்பு!" என்றான்.

அப்போது அன்னம் சொன்னாள்: ''இங்கே பாருங்கள். எனக்கு வீட்டில் இருக்கும் வேலைப் பளுவோ மிகவும் அதிகம். இதில் தாஜ்மஹாலைக் காவல் காக்கும் வேலைக்கு வேண்டுமானால் உங்கள் அம்மாவை வைத்துக் கொள்ளுங்கள். எனக்கு முடியாது. பின்பு ஏதாவது பொம்மை கெட்டழிந்தால் இதற்கு நான் பொறுப்பாளி அல்ல!'' என்றாள்.

''என்னடி அன்னம்மா, இப்படிப் பேசுகிறாய்?'' என்று கேட்டான் தத்தன். ''நம்ம வீட்டிற்கு இந்த தாஜ்மஹால் பொம்மை எல்லாம் ஒத்து வராது. தயவுசெய்து உங்கள் வியாபார ஸ்தலத்தில் கொண்டு பாதுகாவலாக வைத்துப் பராமரித்துக் கொள்ளுங்கள். இல்லை யாரிடமாவது விற்று விடுங்கள். அல்லல் இருக்காது!'' என்றாள் அன்னம்மாள். பிள்ளைகள் கிட்டுவும் மீனுவும் ''அப்பா! தாஜ்மஹால் பொம்மை வெகு நேர்த்தியாக இருக்கிறது. நம்ம வீட்டிலேயே இருக்கட்டும்!'' என்றனர். பிள்ளைகளின் பாட்டி பொன்னி அம்மாள் ''அப்பா தத்தா! அன்னம் சொன்னது போல யாருக்காவது அதை விற்றுவிடு!'' என்றாள்.

Koviloor Digital Library

"போங்க பாட்டி! அது மின் விளக்குப் பொருத்திய தாஜ்மஹால் பொம்மை. அது நம்ம வீட்டிலேயே இருக்கட்டும் பாட்டி!" என்றார்கள் குழந்தைகள். "அப்படி யானால் நீங்கள் அக்காளும் தம்பியும் சர்வ ஜாக்கிரதையாக அதன் பக்கமே போகாமல் இருந்தால் சரி. பத்திரமாக அந்தப் பொம்மை இருக்கும்" என்றாள் பாட்டி.

"ஓ! அதற்கு ஐந்து அடிக்கு அப்பால் நாங்கள் நட மாடுகிறோம். போதுமா பாட்டி?"

"குழந்தைகளுக்கு வேலை என்ன? நீங்கள் அதை விற்றுக் காசாக்கி விடுங்கள். அதுதான் என் யோசனை, என்னால் அதைக் கிஞ்சித்தேனும் கண்காணிக்க முடியாது. உங்கள் பிள்ளைகள் பொல்லாததுகள்" என்றாள் அன்னம்.

"அவர்கள் தான் அதன் பக்கமே போகமாட்டேன் என்று சொல்கிறார்களே! பொம்மை இருக்கட்டும். அவர்கள் மிகவும் ஆசைப்படுகிறார்கள். அதை நம்ம வீட்டிலேயே உயர்ந்த அந்தப் பெரிய மாடத்தில் மாட்டி வை!" என்றாள் பொன்னிப் பாட்டி.

பொம்மை அழகுற மாடத்திற்குள் பொருத்தப் பெற்றது. வீட்டில் விளக்கு ஏற்றும் போது பொம்மைக்குள்ளும் மின் விளக்கு எரிய அதன் விசையை அழுத்தி ஒளி உமிழச் செய்வார்கள் குழந்தைகள். அந்த பொம்மை வந்ததிலிருந்து மீனுவுக்கும் கிட்டுவுக்கும் பெருமை மிகவும் அதிகரித்தது. தங்கள் சகாக்களை எல்லாம் அழைத்து வந்து காண்பித்து அகம் மகிழ்ந்தனர்.

பத்துப் பதினைந்து நாள்களுக்குப் பின் ஒரு நாள் தாஜ் மஹாலில் உள்ளே எரிந்த பல்பு ஒன்று கெட்டுப் போய் அது எரியவில்லை. ஃபியூஸ் ஆயிற்று. அதற்கு வேறு பல்பு போட வேண்டும் என்று நினைத்து கிட்டு அந்த தீய்ந்து போன பல்பைக் கழற்ற மாடத்தின் பக்கம் வீட்டு ஏணியை வைத்தான். காரணம் மாடம் 9 அடிக்கு மேலே இருந்தது. ஏணியை நிறுத்தி தாஜ்மகாலைத் தொட்டு மெதுவாக மிகவும் ஜாக்கிரதையாகவே அந்த பல்பைக் கழற்றினான். அவன் எடுத்துத் திரும்பும் போது அவன் இடது புஜம் தாஜ்மஹால் மீது மோதியது. அதனால் அதன் இடப்புறதது ஸ்தூபிகள் இரண்டு வீழ்ந்து ஒடிந்தன. ஒடிந்த ஸ்தூபிகளை ஒட்ட வைக்கக் கிட்டு பெரும்பாடு பட்டான். அது நிற்கவில்லை. இதை மீனு

Koviloor Digital Library

கவனித்துக் கொண்டிருந்தாள்." ஏண்டா? என்ன பொம்மை'ஸ்தூபியை ஒடித்து விட்டாயா?'' என்று வினவினுள். ஃபயன் கிட்டு ''நான் வேண்டுமென்று உடைத்தேன்?" அது தாளுகவே என் சட்டையில் பட்டு உடைந்து விட்டது! இதற்கு நான் என்ன செய்ய முடியும்?'' என்றுன்.

பிள்ளைகளின் இந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த பாட்டி ''பொம்மை உடைந்தது என்பது உண்மை தானே? அதை நாம் ஒன்றும் பழுது பார்த்துச் சீர் செய்ய முடியாதா?'' என்று கேட்டாள். அவளுக்குச் சற்று கண் பார்வை மங்கல், ''அதெல்லாம் ஒட்டக் கிட்ட முடியாது பாட்டி!'' என்று உரக்கக் கத்தினுள் மீனு.

ஒரு நாளும் இல்லாத திருநாளாக தினம் தினம் தெருவில் இரவு 8 மணி வரை சுற்றி விட்டு வீட்டிற்கு வந்து ஒப்புக்கு ஏதோ பாடங்களைப் படிக்கும் கிட்டு அன்று வெளியே போகவில்லை. கால் கைகளைச் சுத்தம் செய்து விபூதி தரித்து மிகவும் அமைதியாக அடக்க ஒடுக்கமாக அமர்ந்து நல்ல பிள்ளையாக பாடங்களை ஏழு வீடுகளுக்குக் கேட்கும்படி உரக்கப் படித்துக் கொண்டிருந்தான். கடை பூட்டி வீடுதிரும்பி வந்த தத்தனுக்குத் தன் பையன் படிக்கும் குரல் வாசல் பக்கம் வந்ததைக் கேட்டு மிக மகிழ்ச்சி. எனினும் வந்ததும் வராததுமாக மின் விளக்குகளைப் போட்டு தாஜ்மகாலைப் பார்த்தான். அது இரண்டு ஸ்தூபிகளற்று மூளியாக இருந்ததைக் கவனித்தான்.

சட்டையைக் கழற்றும் போதே தன் இடுப்பில் அணிந்திருந்த பெல்ட்'டைக் கையில் எடுத்த வண்ணம் அதிர்வெடி போல ''இந்தப் பொம்மையை உடைத்தது யார்" என்று வெடித்தான்.

"நானில்லை அப்பா! அவ்வளவுதான் எனக்குத்தெரியும்!" என்று பதில் சொல்லி விட்டு மீனு சமையல் அறைக்குள் ஓடினுள்.

''ஊ......ம்'' தத்தன் உறுமல்!

''நான் உடைக்கவில்லை அப்பா!'' என்று சற்று உரக்கக் கத்தியமாதிரி கிட்டு சொன்னுன். எனினும் அவன் நெஞ்சு படபடத்தது.

''நான் தான் ஆரம்பத்திலேயே சொன்னேனே! இந்தப் பொம்மை கிம்மை எல்லாம் நம வீட்டிற்கு ஒத்து வராது

Koviloor Digital Library

என்று. இப்போ நீங்கள் உறுமியும் செறுமியும் என்ன பயன்?'' என்று அதிர்ந்தாள் அன்னம்.

''அதெல்லாம் பிதற்றல்! இந்த பொம்மையை யார் உடைத்தார்கள் என்ற சமாச்சாரம் இப்போதே எனக்குத் தெரிந்தாக வேண்டும். அதற்குப் பிறகுதான் நான் அமைதி பெறமுடியும்'' என்று கூறியவாறு குட்டிபோட்ட பூனை திரிவது போல வீட்டில் ரேழியில் தத்தன் நடந்தான். அப்போது பொன்னிப் பாட்டி மெதுவாகத் தட்டுத் தடுமாறி தன்மகன் தத்தன் பக்கம் வந்தாள்,

''நீ ஏன் இப்போ இங்கே வருகிருய்''? என்று வினவினான் தத்தன்.

''மகனே! நான் என் சேலையைக் கொடியில் உலர்த்தியிருந்தேன். அதை எடுத்தேன். அப்போ அது மாடத்துப் பக்கம் இருந்த ஆணியில் மாட்டியது. உடனே ஒட்டடைக் குச்சி எடுத்து என் சேலையை நகர்த்தும்போது கைதவறி அந்தக் குச்சி பொம்மையில் பட்டு ஏதோ கீழே விழுந்த சத்தம் கேட்டது. அப்போ அந்த பொம்மையில் தான் நான் வைத்திருந்த குச்சி பட்டிருக்கும் போல் தெரிகிறது. ஆக பொம்மை என்னுல் தெரியாத்தனமாக உடைந்து விட்டது ராஜா! பிள்ளைகளைக் கோபித்துக் கொள்ளாதே?'' என்று கூறி அவன் தாடையைப் பிடித்துத் தாங்கியவாறு அவனை அரவணைத்தாள்.

தத்தனின் கோபம் அடங்கியது. ''ஏம்மா சேலையை உலர்த்த உனக்கு இந்த அறைதாஞ கிடைத்தது?''

''நாளைக்கோ ஏகாதசி. உலர்த்தும் புடவையை யாரும் தொட்டுத் தொலைத்து விடுவார்களே என்று அந்த மாடக் குழிப் பக்கத்துக் கொடியில் போட்டேன்'' என்றாள் பொன்னிப் பாட்டி.

வீட்டில் பிள்ளைகள், அன்னம்மாள் எல்லோரும் உள்ளூரப் பாட்டியைப் புகழ்ந்து கொண்டனர். ஆனால் கிட்டுப்பயல் மட்டும அவன் அம்மா காதோரம் சென்று ''அம்மா! பாட்டி ஏம்மா பொய் சொல்லுகிருர்கள்!'' என்று கிசுகிசுத்துக் கேட்டான்.

''எல்லாம் நமக்காகத்தான். அந்தப் பழுத்த பழம் தன் தலையிலே அந்தத் தப்பை வாங்கிப் போட்டுக் கொண்டதால் நம் தலை தப்பியது'' என்ருள் அன்னம்.

Koviloor Digital Library

இந்தக் கதையில் இருந்து என்ன தெரிகிறது? பழுத்த அநுபவஸ்தர்கள் ஞான வித்துகள். வள்ளற் பெருமான் போன்ற ஞானிகள் இறைவனிடம் நாம் செய்யும் தவறு களையும், தீய வல்வினைகளையும், நெடுங் காமச் சேட்டை களையும் தான் புரிந்ததாகக் கூறி நமக்காக அவனடியில் மன்றுடுகிறார்கள் என்பது தான் உண்மை. இதிலிருந்து தெளிந்த நாம் அவர்தம் பொன்னடிகளுக்கு பல்லாயிரம் கோடி வந்தனம் செலுத்தலாம் அல்லவா?

10. மாயை

''பெண் திறல் புறத்தும் ஆண் திறல் அகத்தும்
ஆண்டுற வகுத்த அருள் பெரும் ஜோதி''

என்று வள்ளல் பெருந்தகை அருட்பா அகவல் 711ஆம் வரி யில் கூறுவார்கள். அதாவது பெண்கள் தம் புற அழகைப் பெரிதுபடுத்தி மற்றவர் மனதைச் சுண்டி இழுத்துககவரும் வண்ணம் அலங்காரம் செய்வார்கள். அப்போது ஆண்மனம் அலைபாயும். இதற்குப் பெயர்தான் மாயை என்பர்.

இதுபோல ஆடவரும் பெண்டிரைத் தம்பால் கவர் வதற்குப் பற்பல மாய்மாலங்களைச் செய்தால் அதற்கும் மாயை என்று சொல்வதில் தவறில்லை. இதைத் தானே ''பெண்ணியல் ஆணும், ஆணியல் பெண்ணும் அண்ணுற அமைத்த ''அருட்பெருஞ்ஜோதி'' என்றுரோ?

பெண்களை மனத்திற்கு ஒப்பிடுவார்கள். காரணம் மனம் தான் மாய்மாலம் செய்து அதற்கு ஆளாகி விண்ணுக்கும், மண்ணுக்கும் தாவி அலமுறும். அதுபோல ஆண்களை அறிவுக்கு ஒப்பிடுவர். மாயை என்ற மனத்தோற்றத்திற்கு அறிவுஇலக்காகி மயங்கும். இது ஆசை மோகமாகி காமாந்த காரத்திற்கு இழுத்துச் சென்றுவிடும்.

இந்த மாயை பற்றி விளக்க வந்த பெருமானுர் ''மாய விளக்கம்" என்ற பதிகத்தில் பற்பல பாக்களைத் தந்திருக் கிறுர்கள். அதில் ஒன்றை மட்டும் தருகிறேன்.

''தந்தையே! நான் சிறுகுழந்தையாக இருந்தபோது என்னைத் தூங்கச் செய்ய நீரும் அம்மாவும் சேர்ந்து 'மாயை' என்ற செவிலியிடம் கொடுத்துத் தொட்டிலில் போட்டுத் தாலாட்டும்படி கூறினீர்கள். அந்தப் பாழும் 'மாயை' என்ற செவிலி என்னை அவளு

Koviloor Digital Library

டைய மகள் கையில் கொடுத்தாள். அந்த மகள் என்ன நினைத்தாளோ தெரியாது. அடிக்கடி என்ன நினைப்பிலோ என்னைக் கிள்ளித் தொட்டிலில் போட்டு ஆட்டி உணர்ச்சியால் தூங்கவும் விடாமல் விழித்துக் கிடக்கவும் விடாமல் என்னைத் துடிக்க வைக்கிறாள். நானோ ஏங்கித் தவிக்கிறேன். அப்பா! பெற்றவர்களுக்குத்தானே தெரியும், பிள்ளையின் பெருமை?'' என்ற கருத்துடைய பாடல் கீழே:—

''வாங்கிய செவிலி அறிவொடும் துயிற்ற
மகள் கையில் கொடுத்தனள் எனைத்தான்
ஈங்கு இவள் கருத்தில் எது நினைத்தாளோ?
என் செய்வேன் என்னையே உணர்ந்து
தூங்கவும் ஒட்டாள் அடிக்கடிக் கிள்ளித்
தொட்டிலில் மாட்டிடுகின்றாள்
ஏங்குறுகின்றேன் பிள்ளைதன் அருமை
ஈன்றவர் அறிவரே எந்தாய்

(திரு 6—28—5)

இந்தப் பாடல் மாயை—மா மாயையின் மாய்மால வேலைகளுக்கு உதாரணம். எனவே வள்ளலார் மாயை என்ற பெண்ணை அழைத்து நேராகப் பேசுகிறார். ''அடி திருட்டுப் பெண்ணே! நீ கேள். உனக்கு ஒன்று சொல்லுவேன். நீ இந்த மாய்மால வேலைகளைச் சுமையாக்கி வரிந்து கட்டிக் கொண்டு உன் தலைமேலும், மீதியை உன் சாயலாகத் திரியும் பெண் இனத்தார் தலைமேலும், சுமந்துகொண்டு, ஏதாவது சந்து வழியே போகவேண்டும். அதுவும் பேய் போலப் பறந்தோடி ஏதாவது காட்டுக்குள் போய்ப் பிழைத்துப்போ. இல்லை எனில் நீ எதிர்ப் பேச்சு சொல்வதற்கு முன்பே உன்னை அழித்து விடுவேன். இதனால் ஏற்படும் முன்பின் விளைவுகளைப் பற்றி நான் ஆய்ந்து பார்க்கப் போவதில்லை, மேலும் உனக்கு நான் யார் என்று தெரியும் என்றே நினைக்கிறேன். நான் எல்லாம்வல்ல இறைவனுடைய அருள் அமுது உண்டு அருள் நிலையில் அமர்ந்துள்ள அவருடைய பிள்ளை நான்தான்!'' என்று எச்சரிக்கிறார்.

மாயை எனும் படு திருட்டுச் சிறுக்கி இதுகேள் உன்
மாயை எலாம் சுமைசுமையாய் வரிந்து கட்டிக்
கொண்டு, உன்
சாயை எனும் பெண் இனத்தார் தலைமேலும் உனது
தலைமேலும் சுமந்து கொண்டு ஓர்சந்து வழி பார்த்தே

Koviloor Digital Library

பேய் எனக் காட்டு இடைஓடிப் பிழைத்திடுநீ,
இல்லையேல்
பேசு முன்னே மாய்த்திடுவேன் பின்னு முன்னும்
பாரேன்
ஆயெனை நீ அறியாயோ? எல்லாம் செய் வல்லார்
அருள் அமுது உண்டு அருள் நிலைமேல் அமர்ந்த
பிள்ளை நானே!

ஏன் இப்படி மாயை என்பவளை எச்சரிக்கிறார் தெரியுமா? இந்த மாயை என்ற சிறுக்கி முன்பு ஆதி சங்கர பகவத் பாதாள் விஷயத்தில் நடந்து கொண்ட சரிதம் அவருக்குத் தெரியாமல் இருந்திருக்குமா? அரும் பெரும் சித்திகள் எல்லாம் செய்யவல்ல ஞானியாகிய ஆதிசங்கரர் வாழ்வில் அவர் மாய் மாலத்துக்கு ஆள்பட்டு அல்லோலகல்லோலப்பட்டார். அந்த நிகழ்ச்சியைப் பற்றி இதோ கூறுகிறேன் கேளுங்கள்.

ஸ்ரீசங்கரருக்கும் மண்டன மிச்ரர் என்பவருக்கும் வாக்கு வாதம் நடைபெற்றது. இறுதியில் மண்டன மிச்ரர் சங்கரரிடம் தோற்றார், ஆனால் அவருடைய மனைவி உபய பாரதி என்பவளோ சங்கரரிடம் தோல்வியை ஒப்புக் கொண்டாள் இல்லை. ''மனைவி என்பவள் கணவனின் மறுபாதி. எனவே வாக்கு வாதத்தில் நீங்கள் என்னையும் தோற்கடித்தால்தான் தாங்கள் பெற்ற வெற்றி முழுமை பெறும்'' என்று கூறிச் சங்கரரை காம சாஸ்திரம் பற்றி வாதாடக் கேட்டுக் கொண்டாள். அவரோ தர்ம சந்நியாச தர்மத்தை மேற்கொண்டிருந்த காரணத்தால் அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. ''நான் காம சாஸ்திரத்தைப்பற்றி உன்னோடு தர்க்கமிட வேண்டுமாயின் எனக்கு நீ அதற்காக ஒரு மாத தவணை தரவேண்டும், காரணம் நான் அதை ஆராய்ந்து விட்டுப் பேசவேண்டியவனாக இருக்கிறேன்'' என்றார். இதை உபயபாரதி ஏற்றுக் கொண்டாள். ஆக அவர்கள் இருவரும் மீண்டும் இதுபற்றி வாதாடுவதாக முடிவாயிற்று.

அப்போது சங்கரர் தம் சீடர்களுடன் புறப்பட்டு வேறு இடத்திற்குப் பயணமானார். குருவும், சீடர்களும் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தனர். அத்தகைய சித்துகளைக் கைவரப் பெற்றவர் அவர்கள். ஆங்கே அப்படி ஆகாய வழி செல்லும்போது பூமியில் ஓர் அரசனுடைய

Koviloor Digital Library

பிணத்தைச் சங்கரர் கண்டார். அந்தச் சடலம் சவக்களை தட்டாமல் இந்திரனின் உடலைப்போல காம்பீர்யமாகக் காணப்பட்டது. அந்தச் சடலத்தைச் சுற்றி ராணிகளும் அரசிளங்குமரிகளும், மந்திரி, பிரதானிகளும் சூழ நின்று கண்ணீர் வடித்துக் கொண்டு நின்றனர். சங்கரர் அதுசமயம் தன் பிரதான சிஷ்யனை பத்மபாதர் என்ற சனந்தனரிடம் சொன்னார். ''ஸனந்தனே! இதோ பிணமாக இருக்கும் இந்த அரசன் பெயர் அமருகன். இவன் பேரும், புகழும் பெற்றவன். இவனுக்கு அழகு மனைவியரோ நூறு பேர். இந்த உடலில் நான் புகுந்து (கூடுவிட்டுக் கூடு பாய்ந்து செல்வது ஒரு சித்து. அதற்குப் பெயர் பிரகாமியம் என்பதாகும்). அரண்மனையில் அந்த ராணிகளுடன் ஒரு மாதம் வசித்துக் காமசாஸ்திரத்தைப் பற்றிய நேர்முக அறிவைப் பெறலாம் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்லுகிறாய்?'' என்று கேட்டார்.

தம் குரு கேட்ட வினவுக்குப் பத்மபாதர் மிகவும் பய பக்தியோடும் சாதுர்யமாகவும் பதில் சொன்னார். ''குருவே! தாய் அறியாத சூல் இல்லை என்பார்கள். ஆக உங்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. எனினும் நான் இது பற்றிய ஒரு நிகழ்ச்சி ஒன்றை ஆச்சார்யாளுக்கு விளக்கிச் சொன்னால் நல்லது என்று கருதுகிறேன்!''

''அப்படியா சனந்தனரே? சொல்லும்.''

''அந்தக் காலத்தில் மத்லியேந்திரர் என்ற ஒரு யோகி இருந்ததைச் சந்நிதானமும் கேள்விப்பட்டிருக்கக் கூடும். அவர் பெரிய யோகி. அவர் தமது சடலத்தைத் தன் சிஷ்யனை 'கோரக்ஷகன்' என்பவனிடம் ஒப்படைத்துவிட்டு, ஓர் அரசனுடைய உடம்பில் புகுந்தார். அவனுடைய ராஜ்ய பரிபாலனத்தை ஏற்று இவர் நடத்தினார். அவர் நன்கு ஆட்சி புரிந்தாலும் நாளாவட்டத்தில் தன் புலன் அடக்கங்களை எல்லாம் இழந்தார். கேவலம் இந்திரிய சுகத்திற்கு அடிமையானார். அப்போது அந்தச் சீடர் ஒரு நட்டுவனார் போல வேடம் தரித்து அரண்மனையில் புகுந்தார். புகுந்து சாஸ்திர தத்துவங்களைப் புகட்டினார். அவரை யார் என்று அவருக்கு ஞாபகப்படுத்தினார். ஆக வெகு சிரமத்தோடு அந்த யோகியை அரசனுடைய சடலத்திலிருந்து வெளிவரச் செய்து காப்பாற்றினார்''

Koviloor Digital Library

"அப்படி என் விஷயத்திலும் ஏதாவது ஏற்படலாம் என்பது உம் அபிப்ராயம். அப்படித்தானே?"

"குருநாதா! ஆதலால் நாம் ஒருதடவை பிரம்மச்சரியத்தை இழக்க நேர்ந்தால் அது மறுபடியும் திரும்ப கைவரப்பெறுவது என்பது எவ்வளவு கடினம் என்பது தெரிகிறது. இந்தக் காலத்தில் சந்நியாசிகளைப் பற்றி மிகவும் இழிவாகப் பேசுவதற்கு யாரும் தயங்காத காலம். இதை அறிந்துதான் தாங்கள் வேதாந்த தத்துவத்தை விளக்கியும் துறவு நிலைக்கு இலக்கணம் ஆக சந்நியாச ஆச்ரமத்தை நல்ல உயர்ந்த நிலைக்குக் கொண்டு வரவும் தாங்கள் அரும்பெரும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். இந்த நிலையில் நீங்கள் அமாகன் உடலில் பிரகாமியம் செய்தால் தங்களுடைய மேலான வேதாந்த தெய்வப் பணிக்கு ஊறு வந்து சேர்ந்து விடுமோ என்று அஞ்சுகிறேன். நான் இவ்வாறு அதிகப் பிரசங்கித் தனமாகப் பேசுவதற்கு என்னை மன்னித்தருள வேண்டுகிறேன்."

இதற்குச் சங்கரர் அளித்த பதில்: "பத்மபாதரே! நீர் கூறியது ஒரு விதத்தில் சரியே ஆனால் மாயை மாமாயையின் மாய் மாலங்களின் மூலம் பூரண விவேகமும், திட வைராக்கியமும் கொண்ட பிரம்மத்தை உணர்ந்து பிரம்மமாகவே இருப்பவனுக்கு எந்தச் செயல்களில் ஈடுபட்டாலும் எந்த ஆபத்தும் ஏற்படாது."

"எனக்கென்னமோ இது ஒரு தர்ம சங்கடத்தை ஏற்படுத்தி விடுமோ என்று ஐயுறுகிறேன்."

"உலக விஷயங்கள் மனச் சங்கல்பத்தை வென்றவனைப் பாதிப்பு ஏற்படுத்த இயலாது. ஏன் தெரியுமா? சம்சாரம் என்ற மரத்தின் வேர் அடியோடு கல்லி எறியப்பட்டு விட்டதே? சொப்பனம் கண்டவனுக்கு அவன் கனவில் கண்ட சம்பவங்களும் சுக போகங்களும் பயனற்றதாகத் தெரிகிறதே, அதுபோலவே, கர்ம பலன்கள் ஜீவன் முக்தனைப் பாதிக்கமாட்டா. சதா யோக நிலையில் இருந்து கொண்டே ஜனக மகாராஜன் ராஜ்ய பரிபாலனம் செய்தான் என்று இதிகாசம் பேசுகிறதே! புராணத்தில் கோபியர்களோடு கண்ணபிரான் ஜலக்கிரீடை எல்லாம் செய்வது பற்றி நீர் படித்திருப்பீரே! எனினும் ஒன்று சொல்லுவேன். இந்தச் சந்நியாச கோலத்தில் இல்லறத்தில் ஈடுபடுவது என்பது சாத்யம் இல்லை. உத்தம கிருகஸ்தன் ஒருவனின்

Koviloor Digital Library

உடலில் புகுந்துதான் இதை அறிந்து கொள்ள முடியும். ஆகையால் நான் அமருகன் உடலில் புகுந்து சிறிது காலம் வாழ்ந்து வருவேன். அச்சமயம் நீங்கள் என் சடலத்தைச் சர்வ ஜாக்கிரதையாக இந்தஉயர்ந்த மலைமுகடுகளில் உள்ள குகை ஒன்றில் வைத்துக் காப்பாற்றி வாருங்கள், ஜாக்கிரதை!" என்று கூறிவிட்டுத் தம் உடலைவிட்டுவிட்டு அமருக அரசன் சடலத்திற்குள் சங்கரர் புகுந்தார்.

தகனத்திற்கு முன்பு செய்யவேண்டிய கிரியைகள் செய்து கொண்டிருக்கும் போது அமருகன் உயிர் பெற்று எழுந்தான். இதைக் கண்ட ராணி மற்றும் பிரதானியருக்கும் பெரு மகிழ்ச்சி. ஆகவே இதற்கான பிராயச்சித்த காரியங்களைச் செய்துவிட்டு அமருகன் ராஜ நிர்வாகத்தில் இறங்கினான். அன்று முதல் ராஜ்ய பரிபாலனம் செய்தபின் நாட்டில் செல்வச் செழிப்புற்று மக்களுக்கும் மட்டிலா மகிழ்ச்சி ஏற்படுவதாயிற்று.

அந்தப்புரத்தில் ராணிகளோடு பழகிய சங்கரருக்கும் புதுப்புது அனுபவங்களும், ஆனந்தமும் உண்டாயின. ஸ்ரீ சங்கரர் அரசனாகிய அமருகன் உடலிலிருந்து கொண்டு இல்லறம் பற்றிய நேர்முக அனுபவம் கிடைக்கப் பெற்றார்.

'இல்லறம் அல்லது நல்லறம் அல்ல' என்ற முதுமொழி பொய்யாகுமா? நிற்க.

அந்தப்புரத்தில் ராணிகளும் ஒருவருக்கொருவர் அரசனுடைய நடையுடை பாவனைகளில் சற்றே மாற்றம் கண்டனர். ராஜப்பிரதானிகளும் அமைச்சர்களும் அதையே கவனித்து எல்லோரும் கூடி மந்திராலோசனை செய்து அரசர் அமருகன் உடலில் யாரோ ஒரு மகான் புகுந்திருக்கிறார். என்று தீர்மானித்தார்கள். எனவே ஓர் அரச கட்டளை பிறப்பிக்கப்பட்டது. அதன்படி தேசம் நெடுகிலும் மனிதச் சவம் எங்கு எங்கே கிடைக்கிறதோ அதைத் தகனம் செய்ய வேண்டும் என்பதே இந்த அரசாங்க ஆணை.

குருவால் வரையறுக்கப்பட்ட காலம் முடிந்தது. குரு மீளவில்லை என்பதால் சீடர்களுக்குப் பெருங்கவலை. ஆகவே அவர்கள் பாடகர்கள் போல வேடம் தாங்கி அரண்மனைக்குள் புகுந்தனர். அவர்களைச் சங்கீதக் கச்சேரி நடத்தும்படி உத்திரவு கிடைத்தது. அச்சமயம் வேதாந்த தத்துவத்தைப் பாடி ஸ்ரீ சங்கரருக்கு சுயநினைவு வரும்படிச் செய்தனர்.

Koviloor Digital Library

இசைக் கச்சேரியில் அவர்கள் ஐந்து சுலோகங்களைப் பாடினர். ஒவ்வொரு சுலோகத்தின் முடிவிலும் 'தத்துவமசி, தத்துவமசி, தத்துவமசி ராஜன்'' என்று பாடினர். இதைத்தான் தத்துவமசி பஞ்சகம் என்று சொல்லுவார்கள்.

மாயாஜாலத்திற்குள் சங்கரர் மீள முடியாது தவித்த நிலையால் தத்துவமசி பஞ்சகம் உலகில் உள்ள ஆத்ம ஞான சாதனர் அறியக் கிடைத்தது. சாந்தோக்கிய உபநிடதம் முதன் முதலாக இந்த தத்துவமசி வாக்கியத்தை வெளியிட்டது. இதைக் கொண்டே வேதாந்தம், சித்தாந்தம் முதலிய அந்தங்களில் குறிப்பிடப்படும் துவிதம், அத்துவிதம், விசிட்டாத்துவிதம் என்னும் நிலை அனுபவக் கோட்பாடுகளை விளக்குவர். ஆக மாயை அகலும் நிலை இதுவே.

இதை வள்ளற் பெருமான் எளிதாக எல்லோருக்கும் புரியுமாறு விளக்கும் பாடல் இதுவே.

''புறப்புணர்ச்சி என் கணவர் புரிந்த தருணந்தான்
புத்தமுது நான் உண்டு பூரித்த தருணம்
சிறப்புணர்ச்சி மயமாகி அகப்புணர்ச்சி அவர்தாம்
செய்த தருணம் சுகத்தைச் செப்புவது எப்படியோ?
பிறப்புணர்ச்சி விடயமில்லை சுத்த சிவானந்த
பெரும் போகப் பெரும் சுகம்தான் பெருகி
எங்கும் நிறைந்தே
மறப்புணர்ச்சி இல்லாதே நான் அதுவாய் அது என்
மயமாய்ச் சின்மயமாய் தன்மயமான நிலையே

(6—82—9)

11. ஜீவகாருண்யம்

எல்லா ஞானிகளும் சாதாரணமாகச் சொல்வது, இது. ''நம் துன்பங்களுக்கு மூல காரணம் ஆசை, ஆகவே ஆசையை ஒழிமின்!'' என்று புத்தர் முதல் இன்று வரை அவதரித்த சித்தர் வரையில் பேசுவது ''ஆசையை ஒழியுங்கள் ஆசையை ஒழியுங்கள். அது தான் முக்திக்கு முதற்படி'' என்று சொன்ஞர்கள். ஏன் திருக்குறளே ''பற்றுக பற்றற்ருன் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'' என்று கூறி பற்று நீக்குதலுக்கு வழி சொல்லித் தருகிறது. அதாவது இக்குறளுக்கு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த திருவாளர் வி. ஆர். ராமச்சந்திர தீட்சிதர் என்ன பொருள் தர எழுதினர் தெரியுமா?

Koviloor Digital Library

"Cling fast to Him who is free from all desire
Seek Him for your freedom from attachment"
(V. R. R.)

இந்தப் பாட்டின் கருத்தை வலியுறுத்த அவர் "இறைவனை உடனே (Fast) பற்றுக. அவன் ஆசைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டவன். அந்த ஆண்டவனை நீ தேடிக்கொண்டால் நீ பந்தபாசங்களிலிருந்து விடுபட்ட. சுதந்திரம் பெற்றவனாக லாம்!" என்கிறார்.

அதே வள்ளுவப் பெருந்தகை 'இரவச்சம்' என்ற அதி காரத்தில் 2 ஆம் பாட்டாகச் சொன்னது இது.

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

இதற்குப் பரிமேலழகர் உரை மிகச் சிறப்பானது.

'உலகு இயற்றியான் இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் —இவ்வுலகத்தைப் படைத்தவன் இதன்கண் வாழ்வார்க்கு முயன்று உயிர் வாழ்தலையன்றி இரந்தும் உயிர் வாழ்தலை வேண்டி விதித்தானாயின்; பரந்து கெடுக-அக்கொடியோன் தானும் அவரைப்போன்று எங்கும் அலமந்து கெடுவானாகுக என்றவாறு'

பாரதியாரும் கூட "தனி ஒருவனுக்கு உணவு இல்லை யெனில் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்று சூள் உரைத்தார்.

வள்ளலாரும் கூட "பற்றற்றான் பற்றினைப் பற்றியி ல் வேண்டும். அது. பற்றற்றால் அன்றிப் பலியாதால்!" என்று கூறுகிறார். எனினும் வள்ளலார் அவர்கள் இதற்கெல்லாம் மேலான அரியகருத்துப் 'பசி'யை நீக்குதல் வேண்டும் என்றே வலியுறுத்தினார். ஒருவன் கருவில் உருவாகும் போதே பசி வந்து புகுந்து விடுகிறது. அன்று தொட்டு அவன் மரணம் அடையும் வரை அது வாட்டி எடுக்கிறது. ஆசையோடு ஒருவன் உயிர் வாழ முடியும். ஆனால் பசியோடு அவன் உயிர் வாழ இயலுமா?

நாம் செய்திகளைப் பார்க்கிறோம். படிக்கிறோம். எங்காவது 'ஒருவன் ஒருத்தியின் மேல் ஆசைப்பட்டான். அவன் இறந்தான்' என்று வந்திருக்கிறதா? ஆனால் அதற்கு மாறாக 'ஒருவன் பசி தாள மாட்டாமல் செத்தான்!' என்ற சேதி

Koviloor Digital Library

நாம் படித்துக் கொண்டுதான் இருக்கிறோம். முழுவதுமாக அந்தப் பட்டினிப் பட்டாளத்தைப் பராமரிக்கும் பாக்கியம் நய அரசினர்க்கும் சரி நமக்கும் சரி கிடைக்கவில்லை. ஆகவே ''பசி ஆற்றுக! பசி ஆற்றுக!'' என்று பலமுறை வள்ளல் பெருமான பல பாடல்களிலே சுட்டிக்காட்டுகிறார்.

''கட்டோடே களத்தோடே வாழ்கின்றோம் என்பீர்
கண்ணோடே கருத்தோடே கருத்தனைக் கருதீர்
பட்டோடே பணியோடே திரிகின்றீர். தெருவில்
பசியோடே வந்தாரைப் பார்க்கவும் நேரீர்
கொட்டோடே முழக்கோடே கோலம் காண்கின்றீர்
குணத்தோடே குறிப்போடேகுறிப்பதைக் குறியீர்
எட்டோடே இரண்டு சேர்த்து எண்ணவும் அறியீர்
எத்துணை கொள்கின்றீர் பித்து உலகீரே!',

இந்தப் பாட்டில் ''நாங்கள் ஜனக்கட்டோடும் நல்ல கருத்தோடும் வாழ்கிறோம் என்று சொல்லும் நீங்கள், ஒரே கண்ணும் கருத்துமாக என்றாவது இறைவனைச் (கருத்தனை) சிந்தித்தது உண்டா? பட்டும் அணியும் போட்டுக்கொண்டு திரிகிறீர்கள். ஆனால் உங்களுக்கு எதிரே தெருவில் ''அம்மா தாயே! நாள்களாகப் பட்டினி அம்மா! கொஞ்சம் சாதம் போடுங்கம்மா!" என்ற சொல் காதில் பட்டாலும் படாதது போல நகர்ந்து போய்விடுகிறீர்கள். கும்மளாம் போட்டுக் கொட்டம் அடித்துக் கோலாகலமாக வாழ்கிறீர்களே! நீங்கள் நல்ல குணவானாக எதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டுமோ அதைக் கைக் கொண்டது உண்டா? அதாவது எட்டோடே இரண்டும் சேர்த்து எண்ணியது உண்டா?" என்று கூறுகிறார்.

''8" என்ற இலக்கத்திற்குத்தமிழ் வடிவம் ''அ' தமிழில் 8 எழுதும் முறை ''அ". ''2'' என்ற இலக்கத்தை ''உ" என்று தமிழ் வடிவில் எழுதுவார்கள். இதற்குப் பொருள் 'அகரம் என்பது ஜீவன்.உகரம் என்பதுஇறைவன் என்பதே. இந்த இரண்டும் சேருமாறு நீங்கள் என்றாவது தியானம் செய்தது உண்டா?'' என்று வள்ளலார் வினவுகிறார். அதாவது நம் கண்களை மூடி நம் உள்ளத்தைப்புருவமத்தியில் நிறுத்தி இறைவனைத் தியானம் செய்வதே எட்டும் இரண்டும் சேர்த்து எண்ணுவதாகும். இதை வள்ளற் பெருமான் அகவற்பா விலே இவ்வாறு எழுதுகிறார்.

Koviloor Digital Library

> "எட்டு இரண்டு என்பன இயலும் முற்படி யென
> அட்டம் நின்று அருளிய அருட் பெருஞ்ஜோதி—"

என்றும் சொல்லி இப்படியே நீ உன் கண்களால் புருவமத்தி என்கிற ஆக்ஞாபீடத்தைப் பார்த்துக்கொண்டுவந்து பரயாத்மாவைத் தெரிந்து கொண்டால் அப்படியே தொடர்ந்து இறைவனோடு நீ ஐக்கியமாகி விடமுடியும் என்பதையும் அடுத்த இரண்டு வரிகளில் கூறுகிறார்.

> "இப்படிக் கண்டனை இனியுறு படி எல்லாம்
> அப்படியே எனும் அருட்பெருஞ் ஜோதி!"

ஆக இறைவனை அடைவதற்கு இரண்டு வழிகளை இந்தப் பாடல்மூலம் தருகிறார். ஒன்று ஜீவர்களுக்கு இரங்குதலாகிய 'பசிநீக்குதல்.' மற்றொன்று 'தியானத்தைக் கடைப்பிடித்தல்' என்பவையே. ஆயினும் முதலிலே ஜீவகாருண்யத்தைச் சொன்னார். அதன்பின்பே தியானம் ஆகிய பக்தி செய்வதைப் பேசுகிறார்.

அது ஏன்? வள்ளல் பெருமான் தன் வாழ்நாளில் முதல் முதலிலே "சத்திய தருமச்சாலை" என்ற ஓர் அமைப்பை ஏற்படுத்தினார்கள். சாலையின் மூலம் வடலூருக்கு வந்தோருக்குப் பசியாற்றுவிக்கும்படிச் செய்தார்கள். அதற்குப் பின்னர்தான் இறை வழிபாடு செய்ய 'ஞான சபையை' அமைத்தார்.

இந்த "ஜீவகாருண்யமே முக்திக்கு முதற்படி.' என்றும் அவர்கள் எழுதியது காண்க.

"நம்முடைய தலைவராகிய கடவுளை நாம் அடைவதற்கு அவர் எழுந்தருளியிருக்கும் கோட்டையின் சாவியாகிய அருள் வேண்டும். இவ்வருள் அன்பினால் அல்லது வேறு வகையினால் அடைவது அரிது. இந்த அன்பு ஜீவகாருண்யத்தால் அன்றி வேறு வகையால் வராது. ஜீவகாருண்யத்தின் லாபமே அன்பு.'

ஆக "அன்பே சிவம்!" என்று சொல்லும்போது ஜீவகாருணயம் இல்லை என்றால் 'சிவம்" எங்கிருந்து வரும்? இதை திருமூலர் திருமந்திரத்தில் அழகாகக் கூறுகிறார்.

> "அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
> அன்பும் சிவமும் ஒன்று என்று அறிகிலார்
> அன்பும் சிவமும் ஒன்று என்று அறிந்தபின்
> அன்பே சிவமாய் அமர்ந்து இருந்தாரே!"

Koviloor Digital Library

அருட்சோதிப் பிரகாசரும் 'அறநிலை விளக்கம்" என்ற பதிகம் இரண்டாம் திருமுறையில் சொல்லுகிறார்கள். ''ஒருவன் பெரிய சித்தன். அவன் ஆணைப் பெண் ஆக்குவான். அடுத்த ஒரு சிலநொடிகளில் அந்தப் பெண் கண் விழிப்பதற்குள் அந்த பெண்ணை மீண்டும் ஆணாக்குகிறான். செத்தவரைஅவன் எழுப்புகிறான்'' என்று சொல்லும் சித்திகள் கைவரப் பெற்ற ஒரு சித்தன் கூட. அவன் உயிர் இரக்கம் இல்லாமல், உயிரிருக்கும் ஒரு ஜீவனுடைய உடம்பைக் கடித்து உண்ணும்கடின சித்தனாக இருந்தால், என் குருவின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். என் சிவக்கொழுந்து மீது ஆணையாக அவனை நாம் ஞானி என்று கூறமுடியாது!" என்று சொல்லுகிறார்கள்.

மருவாணைப் பெண்ணாக்கி ஒரு கணத்தில் கண் விழித்து
வயங்கும் அப்பெண்
உருவாணை உருவாக்கி இறந்தவரை எழுப்புகின்றவுறுவ
னேனும்
கருவாணை யுறஇரங்காது உயிர் உடம்பைக் கடிந்து
உண்ணும் கருத்தனேல் எம்
குருவாணை எமது சிவக் கொழுந்தாணை ஞானி எனக்
கூறேனே,"

மேலும் ஜீவகாருண்ய விளக்கமாக ஐயா அவர்கள் பாடிய பாடல்களைக் கீழே தந்திருக்கிறேன்.

''உயிருள் யாம் எம் உள் உயிர் இவை உணர்ந்தே
உயிர் நலம் பரவுக என்று உரைத்த மெய்ச்சிவமே!''
''உயிரெலாம் நீ திருநடம் புரியும் ஒருபொதுவெனத்
தெரிந்தேன்! !

''யாரே எனினும் இரங்குகின்றார்க்குச்
சீரே அளிக்கும் சிதம்பர சிவமே!''
''எங்கே கருணை இயற்கையில் உள்ளன
அங்கே விளங்கிய அருட்பெருஞ் ஜோதி!''

இவைதவிர ''ஜீவகாருண்ய ஒழுக்கச் சுருக்கம்.'' என்று மகுடமிட்டு வள்ளற் பெருந்தகை உரைநடையாக எழுதியது நெஞ்சைத் தொடும்பகுதி ஆகும். பசியின் அவஸ்தையை—ஒருவன் அடைந்தால்—அவன் நிலை என்னஎன்பதைத் தெள்ளத் தெளிவுற எடுத்துக் கூறியிருப்பதைப் படியுங்கள். இதைப் படித்தவனும் சரி, படிக்கப் பக்கம் நின்றும் கேட்டவனும் சரி 'பசி' என்று ஒருவன் வந்தால் அவனுக்கு இதோ 'புசி!'

Koviloor Digital Library

என்று ஆகாரம் கொடுக்காமல் போக மாட்டான். இது சத்தியம். அந்தப் பகுதியைத் தயவு கூர்ந்து நிதானத்தோடு அட்சர சுத்தமாக வாசித்துப் பாருங்கள். பசியின் கொடுமை மனிதனை என்னபாடு படுத்துகிறது என்பதைக் காணலாம்

பசியின் அவத்தை

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்தில்: ஜீவ அறிவு விளக்கம் இல்லாமல் மயங்குகின்றது. அது மயங்கவே அறிவுக்கு அறிவாகிய, கடவுள் விளக்கம் மறைபடுகின்றது. அது மறையவே புருடதத்துவம் சோர்ந்து விடுகின்றது. அது சோரவே பிரகிருதி தத்துவம் மழுங்குகின்றது. அது மழுங்கவே குணங்கள் எல்லாம் பேதப்படுகின்றன. மனம் தடுமாறிச் சிதறுகின்றது. புத்தி கெடுகின்றது. சித்தம் கலங்குகின்றது. அகங்காரம் அழிகின்றது. பிராணன் சுழல்கின்றது. பூதங்கள் எல்லாம் புழுங்குகின்றன. வாத பித்த சிலேத்துமங்கள் நிலை மாறுகின்றன. கண் பஞ்சடைத்து குழிந்து போகின்றது. காது கும்மென்று செவிபடுகின்றது. நா உலர்ந்து வரளுகின்றது. நாசி குழைந்து அழல்கின்றது. தோல் மெலிநது ஸ்மரணை கெடுகின்றது. கை கால் சோர்ந்து துவளுகின்றது. வாக்குத் தொனி மாறிக் குளறுகின்றது. பற்கள் தளருகின்றன. மலசல வழி வெதும்புகின்றது. மேனி கருகுகின்றது. உரோமம் வெறிக்கின்றது. நரம்புகள் குழைந்து நைகின்றன. நாடிகள் கட்டு விட்டுக் குழைகின்றன. எலும்புகள் கருகிப் பூட்டுக்கள் நெக்கு விடுகின்றன. இருதயம் வேகின்றது. மூளை சுருங்குகின்றது. சுக்கிலம் வெதும்பி வற்றுகின்றது. ஈரல் கரைகினறது. இரத்தமும் சலமும் சுவறுகின்றன. மாமிசம் குழைந்து தன்மை கெடுகின்றன. வயிறு பகீரென்று எரிகின்றது. தாப சோபங்கள் மேன்மேலும் உண்டாகின்றன. உயிர் இழந்துவிடுவதற்கு மிகவும் சமீபத்த அடையாளங்களும், அனுபவங்களும் மேன்மேலும் தோன்றுகின்றன. பசியினுல் இவ்வளவு அவத்தைகளும் தோன்றுவது ஜீவர்களுக்குப் பொதுவாகவே இருக்கின்றது."

(இந்தப் பசி சகியாமையைப் பற்றியும் கூறுகிறார்கள்.)

"எப்பேர்பட்டவனும் பசி நேரிட்ட காலம் நிலை குலைந்து அலமுறுகின்றான்.

"உலகம் முழுவதும் ஆளுகிற சக்கரவர்த்திக்கும், எதிரிட்ட பகைவரை அஞ்சாது வெல்லும் சுத்த வீரனுக்கும்

Koviloor Digital Library

போக போக்கியங்களை முற்றும் துறந்த முனிவர்களுக்கும் இந்திரியங்களை அடக்கி மனோலய நிட்டையிலிருக்கும் யோகிகளுக்கும், சித்தர் முனிவர் முதலிய தபஸ்விகளுக்கும், சாதி சமய ஆச்சாரங்களில் அழுந்திய ஆச்சாரியர்களுக்கும் கல்வி கேள்விகளில் சிறந்துள்ள வல்லுநர்களுக்கும், இராப் பகலின்றி புணர்ச்சியில் பொங்கும் காமிகளுக்கும், நாமே பெரியவர் என்று நினைக்கும் அகங்காரிகளுக்கும், ஒரே வகைக் காரியங்களில் அனேகவகைகளாக உபகரிக்கச் செய்கிற டபபர்களுக்கும், பசி நேரிட்டபோது தங்கள் தங்கள் அனுபவ லட்சியங்களை விட்டு உண்ணும் உணவுக்காக ஓடி ஆடித் திரிகிறார்கள். ஆகாரம் கிடைக்காத போது நிலை கலங்குகிறார்கள். இவர்கள் இப்படி என்றால்—ஒருவருக்கு ஆகாரமும் இலாத ஏழைகள் பசி வந்த காலத்தில் என்ன பாடு படுவார்கள்?''

ஆகவே ஆகாரம் கிடைத்தபோது பசி நீங்குகிறது. தத்துவங்கள் தழைக்கின்றன. உள்ளம் குளிர்கிறது. அறிவு விளங்கி அகத்திலும் முகத்திலும் ஜீவகளையும் கடவுள் களையும் ததும்பி ஒப்பில்லாத திருப்தி உண்டாகின்றது.

ஒரு சமயம் காளமேகப் புலவர் ஊர்வழி சென்றார். அப்படி வழிப் பயணம் செல்பவர்களுக்கு அந்தக் காலத்தில் ஊண் உண்டி விற்பனை செய்யும் விடுதிகள் கிடையா. அன்னச் சத்திரங்களே உண்டு, மிகவும் பசித்துக் களைத்த காளமேகம் ஓர் அன்னச் சத்திரத்திற்குள் நுழைந்தார். அந்தச் சத்திரத்திற்கு நாகைக் காத்தான் என்பவன் அதிபதி. அவன் காளமேகப் புலவர் தலையைக் கண்டதும் 'உலை' வைத்து இருப்பான் போலும். சமையல் முடிந்து சாப்பாடு போட வெகு நேரம் ஆயிற்று. எனவே இதை நினைத்துக் காளமேகம் ஒரு செய்யுள் பாடினார்.

''கத்து கடல்சூழ் நாகைக் காத்தான் தன் சத்திரத்தில்
அத்த மிக்கும் போதில் அரிசி வரும்—குத்தி
உலையிலிட ஊர் அடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்,''

'பசி' என்பது மானிடர்களில் எத்தகையோருக்கும் ஏற்படக் கூடியது. அவர்கள் அறிஞராயினும், கவிஞராயினும் ஞானியாயினும், இல்லறத்தானாயினும் எவருக்கும் ஏற்படக் கூடிய ஒன்று. இந்தப் பசியை வள்ளலார் 'பசிப்பிணி' என்றே குறிப்பிடுவது காணலாம்.

Koviloor Digital Library

ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் 'ஜீவகாருண்யம்' என்ற தலைப்பில் வசன பாகத்தில் எழுதியவற்றை—வாசகர்கள் அவர் வாய்மொழியாகவே படித்துப் பயன் பெற—அப்படியே கீழே தந்திருக்கிறேன்.—

ஜீவகாருண்யம்

1. பசியென்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் —ஜீவகாருண்யம்.

2. பசியென்கிற விஷக்காற்றானது ஏழைகள் அறிவாகிய விளக்கை அவிக்கின்ற தருணத்தில் ஆகாரங் கொடுத்து அவியாமல் ஏற்றுகின்றதே ஜீவகாருண்யம்.

3. கடவுள் இயற்கை விளக்கத்திற்கு இடமாகிய ஜீவ தேகங்கள் என்கிற ஆலயங்கள் பசியினால் பாழாகுந்தருணத்தில் ஆகாரங்கொடுத்து அவ்வாலயங்களை விளக்கஞ் செய்விப்பதே ஜீவகாருண்யம்.

4. கடவுள் இன்பத்தைப் பெறுகின்ற நிமித்தம் தேகங்களிலிருந்து குடித்தனஞ் செய்கின்ற ஜீவரது தத்துவக் குடும்பம் முழுவதும் பசியினால் நிலைதடுமாறி அழியுந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அக்குடும்ப முழுவதும் நிலைபெறச் செய்வதே ஜீவகாருண்யம்.

5. பசியென்ற புலியானது ஏழை உயிர்களைப் பாய்ந்து கொல்லத் தொடங்குந் தருணத்தில் ஆகாரங் கொடுத்து அப்புலியைக் கொன்று அவ்வுயிரை இரட்சிப்பதே ஜீவகாருண்யம்.

6. பசியென்ற விஷம் தலைக்கேறி ஜீவர் மயங்குந் தருணத்தில் ஆகாரத்தில் அவ்விஷத்தை இறக்கி மயக்கந் தெளியச் செய்வது ஜீவகாருண்யம்.

7. பசியென்கிற கொடுமையாகிய தேள் வயிற்றிற் புகுந்து கொட்டுகின்றபோது கடுப்பேறிக் கலங்குகின்ற ஏழைகளுக்கு ஆகாரத்தால் அக்கடுப்பை மாற்றிக் கலக்கத்தைத் தீர்ப்பதே ஜீவகாருண்யம்.

8. நேற்று இராப்பகல் முழுதும் நம்மை அரைப்பங்கு கொன்று தின்ற பசியென்கிற பாபி இன்று வருமே! இதற்கென்ன செய்வோம்! என்று ஏக்கங் கொள்கிற ஏழை ஜீவர்களது ஏக்கத்தை நீக்குவதுதான் ஜீவகாருண்யம்.

Koviloor Digital Library

9. வெயிலேறிப் போகின்றதே! இனிப் பசியென்கிற வேதனை வந்து சம்பவிக்குமே! இந்த விதிவசத்திற்கு என்ன செய்வது? என்று, துடிப்பவர்க்கு அதை மாற்றும் நிழலாவதே ஜீவகாருண்யம்.

10. இருட்டிப் போகின்றதே இனி ஆகாரங் குறித்து எங்கே போவோம்! — யாரைக் கேட்போம்! — என்ன செயவோம்-என்கிற விசாரத்தில் அழுந்திய ஏழை ஜீவர்களது விசாரத்தை மாற்றுவதுதான் — ஜீவகாருண்யம்.

11. நடந்து நடந்து காலுஞ் சோர்ந்தது, கேட்டுக் கேட்டு வாயுஞ் சோர்ந்தது. நினைத்து நினைத்து மனமும் சோர்ந்தது. இனி இப்பாவி வயிற்றுக்கு என்ன செய்வோம்! என்று கண்ணீர் வடிக்கின்ற ஏழைகளுக்கு ஆகாரங்கொடுத்து அவர்களது கண்ணீர் மாற்றுவதே ஜீவகாருண்யம்.

12. பகற்போதும் போய்விட்டது, பசியும் வருத்து கின்றது. வேறிடங்களில் போக வெட்கந்தடுக்கிறது. வாய் திறந்து கேட்க மானம் வலிக்கின்றது — வயிறு எரி கின்றது. உயிரை விடுவதற்கும் உபாயந்தெரியவில்லை.— இவ்வுடம்பை ஏன் எடுத்தேம்?— என்று மனமும் முகமும் சோர்ந்து சொல்வதற்கு நாவெழாமல், உற்பாத சொப்பனங் கண்ட ஊமையைப் போல் மனம் மறுகுகின்ற மானிகளாகிய ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து மானத்தைக் காப்பதுவே ஜீவகாருண்யம்.

13. நாம் முற்பிறப்பில் பசித்தவர்கள் பசிக் குறிப்பு அறிந்து பசியை நீக்கியிருந்தால் இப்பிறப்பில் நமது பசிக் குறிப்பறிந்து பசியை நீக்குவதற்கு பிறிதொருவர் நேர்வார் அப்போது அப்படி நாம் செய்ததில்லை இப்போது நமக்கு இப்படிச் செய்வாருமில்லை, என்று விவகரித்துக் கொண்டு தூக்கம் பிடியாமல் துக்கப்படுகின்ற ஏழை ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்துத் துக்கத்தை நீக்கித் தூக்கம் பிடிக்க வைப்பதே ஜீவகாருண்யம்.

14. தேகமுழுதும் நரம்புகள் தோன்றப் பசியினால் இளைத்து உயிரொடுங்க மூர்ச்சை மூடிய காலத்தும் அயலாரைக் கேட்பது துணியாமற் கடவுளை நினைத்து நினைத்து நெருப்பிற் படுத்து—நித்திரை செய்யத் தொடங்கு வாரைப் போல — அடிவயிற்றிற் கொடிய பசி நெருப்பை வைத்துப் படுக்கத் தொடங்குகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங் கொடுத்து அந்தப் பசி நெருப்பை ஆற்றுவதே ஜீவ காருண்யம்.

Kovlloor Digital Library

15. நேற்று பட்டினி கிடந்தது போல் இன்றும் பட்டினி கிடப்பது எப்படி? துர்பாக்கிய வசத்தால் இன்றும் பட்டினி கிடக்கத் துணிவோமாயினும், பட்டினி சகியாத நமது ஏழை மனைவி வயிற்றுக்கு யாது செய்வோம்? இவள் பசியைக் குறிப்பதும் பெரிதல்ல. அந்திம தசையால் மிகவுஞ்சோர்ந்த நமது தாய் தந்தைகள் இன்னும் பட்டினி கிடந்தால் இறந்து விடுவார்களே. இதற் கென்ன செய்வோம்? பசியினால் அழுதழுது இளைத்த நமது புத்திரர்களது சோர்ந்த முகத்தை எப்படிப் பார்ப்போம்? - என்று எண்ணி எண்ணிக் கொல்லன் உலையிலூத மூண்ட நெருப்பைப் போல், பசி நெருப்பும், பயநெருப்பும், விசார நெருப்பும்— உள்ளே மூண்டபடியிருக்கக் கன்னப் புடையில் கைகளை வைத்துக் கொண்டு கண்களில் நீர்கலங்க வருந்துகின்ற ஏழைகளுக்கு ஆகாரங் கொடுத்து வருத்தத்தை மாற்றுவதே — ஜீவகாருண்யம்.

16. 'கண், கை, கால் முதலிய உறுப்புகளிற் குறைவில்லா தவர்களாகி ஆகாரஞ் சம்பாதிக்கத் தக்க சக்தியுள்ள வர்களும் பசியால் வருந்தி இதோ படுத்திருக்கிறார்கள். குருடும், செவிடும், ஊமையும், முடமுமாகவிருக்கின்ற நமக்கு ஆகாரம் எந்த வழியிற் கிடைக்கும்! பசி எப்படி நீங்கும்! — என்று தனித் தனி நினைத்து நினைத்துத் துக்கப்படுகின்ற ஏழை களுக்கு ஆகாரங் கொடுத்து துக்கத்தை நீக்குவதே ஜீவ காருண்யம்.

17. பசியினால் வருந்துகின்றவர்கள் எந்த தேசத்தவரா யினும் — எந்த சமயத்தாராயினும் எந்த ஜாதியாராயினும் எந்தச் செய்கையராயினும் — அவர்கள் தேகவொழுக்கம் சமயவொழுக்கம், ஜாதியொழுக்கம், செய்கையொழுக்கம், முதலானவற்றைப் போதித்து விசாரியாமல்—எல்லா ஜீவர் களிடத்தும் கடவுள் விளக்கம் பொதுவாய் விளங்குவதை அறிந்து பொதுவாகப் பார்த்து அவரவர் ஒழுக்கத்திற்குத் தக்கபடி, அவர்கள் பசியை நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்.

18. சன்மார்க்க ஒழுக்கத்திற்கு ஒத்த சத்துவ ஆகாரத் தால் பசி நிவர்த்தி செய்து கொள்ளத்தக்க மிருகம், பறவை, ஊர்வன, தாவரம் என்கின்ற உயிர்களுக்குப் பசி வந்தபோது, பசி நிவர்த்தி செய்விப்பதே ஜீவகாருண்யம்.

19. பசியை நிவர்த்தி செய்து கொள்ளத் தக்க புவன போக சுதந்தரங்களைப் பெறுவதற்குரிய அறிவு இருந்தும் —பூர்வ கர்மத்தாலும், அஜாக்கிரதையாலும், அச்சுதந்திரத்

Koviloor Digital Library

தைப் பெற்றுக் கொள்ளாமல் பசியினால் வருந்துகின்ற ஜீவர்களுக்கு ஆகாரங்கொடுத்து அந்தப்பசி வருத்தத்தை நீக்கித் திருப்தி இன்பத்தை உண்டு பண்ணுவதற்குக் காரணமாகிய ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைக் கொண்டுதான் மோட்சமாகிய மேல் வீட்டுக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து எக்காலத்தும் அழியாத இன்பத்தை அனுபவித்து வாழ வேண்டும்.

ஆதலின், ஜீவகாருண்யமென்கிற மோட்ச வீட்டுத் திறவுகோலைக் காலமுள்ள போதே சம்பாதித்துக் கொண்ட சம்சாரிகள் — சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கிற சாதன சகாயங்களை வேண்டாமல், எக்காலத்தும் அடையாத இன்ப வீட்டை அடைந்து, அவ்வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு, உள்ளே புகுந்து, நித்திய முத்தர்களாய் வாழ்வார்கள்.

1. புண்ணிய பூமிகளை வலஞ்செய்தல்- 2. புண்ணிய தீர்த்தங்களிலாடல்.—3. புண்ணிய தலங்களில் வசித்தல், 4. புண்ணிய மூர்த்திகளை தரிசித்தல்,— 5. தோத்திரஞ் செய்தல்— 6. ஜெபஞ் செய்தல், 7. விரதஞ் செய்தல்,— 8. யாகஞ் செய்தல்,—9. பூஜை செய்தல் — முதலிய சரியை கிரியைகளைச் செய்கின்ற விரதிகளும், பக்தர்களும்- இருடிகளும்- உணவை நீக்கி, உறக்கத்தை விட்டு, விடயச் சார்புகளைத் துறந்து,- இந்திரியங்களை அடக்கி, மனோலயஞ் சார்புகளைத் துறந்து- யோகத்திலிருக்கின்ற யோகிகளும், அளவிறந்த சித்தியின்பங்களைப் பெற்ற சித்தர்களும், நித்தியா நித்தியங்களை அறிந்து, எல்லாப் பற்றுக்களையும் துறந்து பிரமானுபவத்தைப் பெற்ற ஞானிகளும்-ஜீவகாருண்யம் என்கிற திறவுகோலைச் சம்பாதித்துக் கொள்ளாதவர்களானால், மோட்சமென்கிற மேல் வீட்டிற்கு முன்னும் பின்னுமாக ஏறிச் சமீபத்தில் காத்திருந்து மீளவும் அத்திறவுகோலைச் சம்பாதிக்கத் திரும்புவார்களல்லாது, கதவைத் திறந்து உள்ளே புகுந்து இன்பத்தை அடைந்து வாழமாட்டார்களென்றும் உண்மையாக அறியவேண்டும்.

இதனால் அறிவு விளங்கிய தேவர்களுக்கெல்லாம் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடென்றும் அறியப்படும். அன்றியும் ஜீவகாருண்ய ஒழுக்கத்தை உடையவர்களாகி, அழுந்திப் பொருந்தல் முதலிய பிரபஞ்ச யோகங்களை அனுபவிக்கின்ற சமுசாரிகளெல்லாம், சர்வ சக்தியையுடைய கடவுளருக்கு முழுதும் பாத்திரமாவார்கள்.

Koviloor Digital Library

ஜீவகாருண்ய ஒழுக்கமில்லாமல் ஞானம். யோகம், தவம் விரதம், ஜெபம், தியானம் முதலியவற்றைச் செய்கின்றவர்கள் கடவுளருக்குச் சிறிதும் பாத்திரமாகார்கள். அவர்களை ஆன்ம விளக்கமுள்ளவர்களாகவும் நினைக்கப்படாது; ஜீவ காருண்யமில்லாது செய்யப்படுகிற செய்கைகளெல்லாம் பிரயோசனமில்லாத மாயா ஜாலச் செய்கைகளேயாகும் என்று அறிய வேண்டும்.

மழை

புகையின் மூன்றுவது கலையின் சீதளசக்தியினுல் மழை உண்டாகிறது. இது போல் சூரிய கிரண உஷ்ண ஆவியாகிய புகை ஒஷதிகளிலும், நீரிலும், பாரிலும், பொருப்பிலுள்ள திரவ சக்தியைக்கிரகித்து, வாயுமண்டலத்தில் சேர்த்து மேலும் கீழும் உஷ்ணம் நிரம்ப,மத்தியிலுள்ள திரவ அணுக்கள் புழுங்கி நீராய் கால பேதவண்ணம் வாயுவால் பிரேரிக்கப் பட்டு அசைக்கும்போது, கீழும் மேலுமுள்ள உஷ்ண வாயு தடிப்பு விலகும்போது சத்தமாகிய இடியும். அத்தொனியால் படலம் போல் மூடியிருந்த காராகிய மேகம் விலகி வாயுவால் கலங்கிய போது, மழையும் உண்டாகும். இதன்றி; மேகம் கடல் ஜலத்தை உண்டுமழைபெய்வதென்பது பொய்"

இந்த மழையைப் பற்றி இன்றும் விஞ்ஞான புத்தகத்தில் கடல் நீர் ஆவியாக மாறி மழை பெய்கிறது என்று எழுதியிருக்கிருர்கள்.

இது முற்றிலும் தவறு என்பதை தன் மெய் ஞான அறிவால் ஐயா விளக்கியதை மேலே தந்திருக்கிறேன்.

அணுவைப் பற்றி அலசு அலசு என அலசி பற்பல அணுக் களின் பெயர்களையும் தன்மையையும்; அது போல கதிர் வீச்சுகளைப் பற்றியும் திருவருட்பாவில் பேசப்பட்டிருக்கிறது.

வள்ளல் பெருமான் விஞ்ஞானத்தோடு கூடிய மெய் ஞானத்தையும் அருட்பாத் தேனில் குழைத்துத் தந்த மாட்சியை எங்ஙனம் புகல்வேன்? எப்படி புகழ்வேன்?

12. மானம்

ஒருவனிடம் நாம் பின்வரும் கேள்வியைக் கேட்பதாக வைத்துக் கொள்வோம். "உனக்கு உயிர் வேண்டுமா? மானம் வேண்டுமா?' என்று கேட்டால் அவன் நற்குடிப் பிறந்தோனுக இருந்தால் "எனக்கு மானம்தான்வேண்டும்!' என்பான், அவனே மனிதன். தன் மயிர்த்திரளில் ஒருமயிர்

Koviloor Digital Library

நீங்கினும் கவரிமான் உயிர் நீத்து விடுமாம். ஆக தன்மானம் இழக்க நேரிடும் காலத்தில் உயிரையும் இழக்கத் தயங்காத மனப்பண்பே மானம். அப்படி மானத்திற்கு உயிரையும் விடத் தக்கவனே உயர் குடிப் பிறந்தவன் என்று அறநூலார் கூறுவர்.

'மானம்' என்ற சொல்லுக்கு பரிமேலழகர் மிக அழகாகவும் தெளிவாகவும் பொருள் தருகிறார். ''எஞ்ஞான்றும் தம் நிலையில் நின்று தாழாமையும், தம்மால் தடுக்கமுடியாதபடி ஒரு தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம்'' என்று இதையே வள்ளுவர் குறளில்

''மயிர் நீப்பின் வாழாக் கவரிமான் அன்னார்
உயிர் நீப்பர் மானம் வரின்''

என்று கூறுகிறார். குடியியல் என்ற அதிகாரத்தில் (பத்தாம்) குறள் கூறுவது காண்க.

''நலம் வேண்டின் நாணுடைமை வேண்டும், குலம் வேண்டின் வேண்டுக யார்க்கும் பணிவு''

மேலும் வள்ளுவர் சொல்லுவார். ஒருவனுக்குச் செல்வம். வந்து குவிந்து அவனை உயர்த்தும் பொழுது அவன் பணிய வேண்டும். நல்குரவால் நலிவுற்றுத் தாழும் பொழுது தான் உயர்ந்து பணியாது இருக்க வேண்டும்.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.

அதாவது உயிர் பிழைக்க வேண்டி, மனிதனுக்கு மனிதன் அடிமையாகி இழிதொழில் புரிவது மானமாகாது. ஆனால் கடவுள் உண்டு என்று அறிந்து அவனுக்கு ஆளாகி நாம் வழிபடுவதற்கும் இந்த மான உணர்ச்சியாகிய சுயமரியாதை வந்து குறுக்கிட்டு நம்மைக் கெடுத்து விடுதல்கூடாது.

இங்கே நான் ஏதோ அரசியலை ஆய்வதாக எண்ண வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு கட்டுரையைத் தொடர்கிறேன். காலம் சென்ற பேரறிஞர் திரு சி.என். அண்ணாதுரை அவர்கள் தன்மான இயக்கம் என்ற பெயரில் நீதிக்கட்சியை வளர்த்தவர்களில் ஒருவர் என்பது நாமறிந்ததே. அந்தக் கட்சியின் அன்றையக் கொள்கை நாஸ்திகம். அதாவது நிர்ரீஸ்வர வாதம். ''கடவுள் இல்லை இல்லவே இல்லை'' என்று கூறிவந்த சமுதாய சீர் திருத்தக் கட்சி. அதை விட்டு நீங்கி மதிப்பிற்குரிய அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த நேரத்தில்

Koviloor Digital Library

தம் கட்சியின் கொள்கைகளில் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்!'' என்று உலகறியப் பறை சாற்றினார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் ஆண்டவன் திருமுன்னர் நம் கொள்கை நம்மை வணங்காமுடி மன்னர்களாகச் செய்துவிடக்கூடாதே என்றுதான்... அவர் செய்கை வள்ளுவர் கூற்றுக்கு மதிப்புத் தருவதாக அமைந்தது.

மனிதனின் அறிவுக்கும் மானத்திற்கும் உகந்த செயல் எது? திருவள்ளுவர் இதைத் தம் இரண்டாவது குறளிலேயே சொல்லுகிறாரே.

''கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின்''

அதைத்தான் அண்ணா அவர்கள் கழகக் கொள்கையாகச் சொன்னார்கள்.

மெத்தப் படித்தவர்கள் கூட இந்தக் காலத்தில் கோயிலைக் கண்டால் கும்பிடக் கூசுகிறார்கள். தான் சாமி கும்பிடுவதால் தம்மைப் பார்த்தவர்கள் தம்மை ஏளனம் செய்வார்களோ என்ற தவறான எண்ணத்தால் ஆண்டவனுக்கு அஞ்சலி செய்வதற்குத் தயங்குகிறார்கள். பகுத்தறிவுப் பாதை பகவத் வந்தனத்திற்கு 'மானம் அற்ற செயல்!' என்ற பொருள் தருவதாக அவர்கள் எண்ணுவதே இதற்குக் காரணம்.

திருநாவுக்கரசர் ஒருபாடல் மூலம் மனத்தைப் பற்றிப் பேசுவார். அதுபோல மணிவாசகரும் சொல்லுவார்.

ஒரு மனைவி எப்படித் தன் கணவன் முன்பு மானத்தை விட்டு நடந்து கொள்கிறாளோ அதுபோல ஆண்டவன்முன்பு நமக்கு மானம் கெட்டு ஒழியவேண்டும். அதுவே பக்தியான நிலை. 'யான்'' எனது என்ற செருக்கிலே அடங்கியது தான் மானம். ஆகவே தன்னைத் தானே அழித்துக்கொண்ட நிலையில் தான் ஆண்டவன் வெளிப்படுகிறான்.

''யான் எனது என்னும் செருக்கறுப்பான் வானோர்க்கு
உயர்ந்த உலகம் புகும்.''

என்பது பொய்யா மொழி. ஆகவே இந்த வீண்மானமும் தற்பெருமையும் ஆண்டவனிடம் நான் செலுத்தக் கூடாது.

அட என்னய்யா: நீர் மானத்தை இழந்து விடச் சொல்லுகிறீர்? உமக்கு ஏதாவது மானம் ஈனம் இருக்கிறதா? என்று நீங்கள் என்னைக் கேட்கிறீர்களா?

Koviloor Digital Library

இதற்கு என் பதில் எடுகோள். ஆகவே திருநாவுக்கரசரை, திருஞான சம்பந்தரை, மணிவாசகர் உரைகள்மற்றும் சுத்தசன்மார்க்க தத்துவத்தை விளக்க வந்த வள்ளல் ஸ்ரீராமலிங்க சுவாமிகளின் அருள்வாக்கு ஆகியவற்றைக் கேட்டு, சற்று சிந்தியுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மணிவாசகர் பாடல்

''மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கை நல்லீர்
வானந் தொழுந் தென்னன வார்கழலே நினைந்தடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள் பெறில் நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகி நின்று ஆடாமோ தோணோக்கம்.''

ஆண்டவன் முன்பு நாம் மானத்தை விட்டு பக்தி செய்வோமானால் அவன் உலகத்தார் முன்பு நாம் மானம் போகவொட்டாது பார்த்துக் கொள்வான்.

ஒரு சமயம் பெரும் புலவனான பக்தன் ஒருவனுக்கு மானம் போகுமாறு ஓர் அரசன் நடந்து கொண்டான். அப்போது அந்த பக்தனுடைய மானம் காக்கப் பரந்தாமன் கை கொடுக்கிறான். அந்த வரலாறு இதோ:

திருமழிசை ஆழ்வார் பெரும் புலவர். பரமபக்தர். அவர் பரந்தாமனைத் தவிர மற்றவரைப்பாடாதவர். இந்தத் திருமழிசை ஆழ்வார் தன்னை ஒரு பாட்டால்பாடிப் புகழ்ந்து விட வேண்டும் என்று அந்த நாட்டு மன்னவன் ஆனமட்டும் முயன்று பார்த்தான் திருவரங்கனைத் தவிர மற்றவர்களுக்கு தன் மனதில் இடம் கொடுக்காத திருமழிசை ஆழ்வார் அரசனுடைய ஆணைக்கு இணங்கவில்லை. எனவே ஆழ்வார் பாடாவிட்டால் போகட்டும். அவருடைய சீடர்களில் ஒருவனான 'கணி கண்ணன்' என்பவனைக்கொண்டாவது தன்னைப் பற்றிப் புகழ்ந்து பாடும்படி செய்யலாம் என்று நினைத்து அரசன் பணித்தான். சீடனோ அதற்கு மசியவில்லை: மறுத்தான். தன் குருநாதன் வழியே தன் வழி என்று சொல்லி விட்டான்.

இதனால் அரசனுக்கு அடக்கமுடியாத ஆத்திரம்வந்தது. ஆகவே அரசனின் கோபம் இளைத்தவன் மேல் எகிறிப்பாய்ந்தது. சீடனான கணிகண்ணனைத் தன் திருநகரை விட்டே (காஞ்சி என்று கூறுவார்கள்) வெளியேற்றிவிட்டான். இதனால் திருமழிசை ஆழ்வார் மனம் நொந்தார். தன் சீடனுக்கு அரசன் இழைத்த தீங்கால் தன் மானமே போனதாக உணர்ந்தார்.

Koviloor Digital Library

இப்படிமானம் பறிபோனவருத்தத்தில் அவர்காஞ்சியில் 'திருவெஃகா' என்னும் பகுதியில் பள்ளி கொண்டிருந்த அரங்கநாதப் பெருமானை அணுகினர். இறைவனிடம் ஒரு பாட்டு மூலம் தன் வேண்டுகோளை விடுத்தார்.

''கணி கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டா—துணிவுடைய
செந்நாப் புலவனும் சொல்லுகின்றேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்''

என்று பாட்டால் சொல்லிவிட்டு. அவரும் ஊரைவிட்டுக் கிளம்பினர் சீடர் முன்னே போக சீடரின் பின்னால் அவரும் சென்றார். அரங்கநாதப் பெருமானும் தன் பாம்புப் படுக்கையைச் சுருட்டிக் கொண்டு ஆழ்வாரைத் தொடர்ந்து கிளம்பிவிட்டான். கோயிலில் இருந்த அரங்கநாதன் சிலை காணுமல் மூலஸ்தானம் சூன்யமாகக் காணப்பட்டது.

மாதவன் இல்லாத இடத்தில் மக்கள் இருப்பார்களா? ஊர்மக்களும் திரண்டு புறப்பட்ட சேதி அரசன் காதுக்கு எட்டியது. அரசன் உடனே பதறி அடித்துக் கொண்டு திருமழிசை ஆழ்வாரிடம் ஓடோடி வந்தான். அவரிடம் மன்னிப்புக் கேட்டான். அரங்கநாதப் பெருமாள் மீண்டும் திருக்கோயிலில் எழுந்தருளச் செய்ய வேண்டும் என்று வேண்டினன். உடனே திருமழிசை ஆழ்வார் பாட்டைச் சற்று திருத்தி இப்படிப் பாடினராம்.

''கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்கவேண்டும்—துணிவுடைய
செந்நாப் புலவனும் சொல்லுகின்றேன் நீயும் உன்றன்
பைந்நாகப் பாய் விரித்துக் கொள்."

திருவெஃகாவின் ஸ்தல புராணம் இதனை விளக்குகிறது.

இராமாயணத்தில் கூடகம்பர் மானம் பற்றி அற்புதமாகச் செய்யுள் இயற்றியிருக்கிறார். சீதையை இராவணன் சிறை எடுத்து வந்தது அவனுக்கு மானக் கேடாகத் தெரியவில்லை. ஆஞ்சநேயர் இலங்கையைச் சுட்டெரித்தது கண்டு, ''ஐயோ! ஒரு குரங்கு இலங்காபுரியைத் தீக்கிரையாக்கிற்றே—மானம் மலையேறி விட்டதே!" என்று அலறுகிறான். இராவணன் பேசியது மானம். ஆனல் அவன் செயல்கள் அனைத்தும் அவமானம்.- இதை அவன் தம்பி கும்பகர்ணன் நன்றாகக் குத்திக் காட்டுவதாகக் கம்பர் எழுதும் பாடல் இது.

Koviloor Digital Library

''ஆசில் பரதாரம் அவை அஞ்சிறை அடைப்பேம்
மாசில் புகழ் காதலுறுவேம் வளமை கூறப்
பேசுவது மானம் இடை பேணுவது காமம்
கூசுவது மானுடரை நன்று நம் கொற்றம்.

இப்போது மானத்தைப் பற்றி நாவுக்கரசர் பேசுவதைக் கேட்போம்.

பொங்கி எழுகின்ற அனவமே! மானமே! காமவெகுளி பயக்கமே! சடும்பற்றுள்ளமே! பொறுமையே! நீங்கள் பல உணர்ச்சிகளாய்க் கிளர்ந்து எழுந்து உலகை ஆட்டிப் படைப்பவர்கள் என்பதை நான் அறிவேன். ஆயினும் உங்கள் தீவினை என்னிடம் பலிக்காது, நான் சிவபெருமான் திருவடிகளைச் சரண் புகுந்தவன் உங்கள் வலையில் விழமாட்டேன்!" என்று நாவுக்கரசர் பாடுகிறார் இதோ பாடல்:

''பொங்கு மத மானமே ஆர்வம் செற்றக்
குரோதமே லோபமே பொறையே நீங்கள்
உங்கள் பெரு மாநிலத்தின் எல்லை எல்லாம்
உழலுமிது குறை முடிப்பிற்கு அரிதேயானேம்
அங்கமலத்து அயனொடு மால் ஆகிமற்றும்
அதற்கு அப்பால் ஒன்றாகி அறிய ஒண்ணாச்
செங்கனகத் தனிக்குன்றைச் சிவனை ஆரூர்
செல்வனைச் சேர்வேன் உம்மால் செலுத்துவேனே''

நம் மானம் பறிபோகும் போது இறைவன் திருவருள் நமக்குத்துணை நிற்கும் என்று ஆளுடைப் பிள்ளையாராகிய ஞானசம்பந்தரும் இயற்றிய பாடல் இதோ:

''நம் மானம் மாற்றி நமக்கு அருவாய் நின்ற
பெம்மானைப் பேயுடல் ஆடல் புரிந்தானை
அம்மானை அந்தணர் சேரு மணிகாழி
எம்மானை ஏத்த வல்லார்க்கு இடர் இல்லையே.

இதையே வள்ளலார் சொல்லுகிறார். ''எவர் கல்மனதால் உன்னைத் தொழாது இருக்கிறார்களோ அவரே மானம் இல்லாதவர்கள். அப்பேர்கொத்த ஈனர் அவர்பால் போய் இளைத்தேன், இனி நான் இளைப்பாறுவதற்கு உன் ஞான அடியின் நிழல் நண்ணி மகிழ்வேனோ?'' என்று பாடும் பாடல் இதோ.

''மானமிலார் நின்தாள் வழுத்தாத வன் மனத்தார்
ஈனரவர்பால் போய் இளைத்தே இளைப்பாற
ஊனமிலார் போற்றுகின்ற ஒற்றியப்பா, உன்னுடைய
ஞான அடியின் நிழல் நண்ணிமகிழேனோ?''

Koviloor Digital Library

இப்படிப் பேசிய வள்ளற் பெருமான் உலக மக்களையும் அறை கூவி அழைத்துச் சொல்லுகிறார். "ஆன்ம நேயர்களே! எல்லாம் வல்ல பெருமான், நீங்கள் செய்த தீவினைகளை எல்லாம் பொறுத்துக் கொள்வான். பொதுவில் நடம் புரியும் பெருங்கருணைத் திறம் அது. அவனை நீங்கள் அணுகுவதற்கு நினைத்து சமரச சன்மார்க்க சங்கம் மேவுக என்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி நான் உங்களைக் கேட்பதுபற்றி என்னை நீங்கள் ஏசினாலும் சரி, பேசினாலும் சரி. பொறுத்துக் கொள்வேன். நீங்கள் என்னைஅப்படி வைதால் நான் அதை உங்கள் வாழ்த்தாகவே எடுத்துக் கொள்வேன். இதற்காக மனம் கோணமாட்டேன். காரணம் என் மானத்தை இதற்காக அதுபோனவழி விட்டுவிட்டேன். இது பொய்யோ புனை சுருட்டோ நான் கிஞ்சித்தும் சொல்பவன் அல்ல. சத்திய மாகச் சொல்லுகிறேன். நீங்கள் எல்லாம் பாவம் நீங்கிப் புனிதராகும்படி வேண்டிக் கூறும் வார்த்தை இது" என்று கூறும் பாடல் இதோ:

"செய்தாலும் தீமையெலாம் பொறுத்தருள்வான் பொதுவில்
திருநடம செய் பெருங்கருணைத் திறந்தான் அங்கு அவனை
மெய்தாவ நினைத்திடுக சமரச சன்மார்க்கம்
மேவுக என்று உரைக்கின்றேன் மேதினியீர் எனைத்தான்
வைதாலும் வைதிடுமின் வாழ்த்தெனக் கொண்டிடுவேன்
மனம் கோணேன் மானம் எல்லாம் போனவழி விடுத்தேன
பொய் தானோர் சிறிது எனினும் புகலேன் சத்தியமே
புகல்கின்றேன் நீவிரெலலாம் புனிதமுறும்பொருட்டே —
(திரு. 6 — 110 — .2)

அருட்பாவைப் பற்றி ஐயாவும் அன்பர்களும்

திருவருட் பிரகாச வள்ளலார் ஸ்ரீ இராமலிங்க சுவாமி களைத் தந்தை, தாய், குருவாகவும் மதிக்கும் சன்மார்க்க சீலர்கள் அவரை 'ஐயா' என்று கூறுவது வழக்கம்.

எனவே, இந்தச் சிறிய கருத்துரையின் தலைப்பை அருட் பாவைப்பற்றி ஐயாவும் அன்பர்களும் என்று மகுடமிட்டேன்.

தன் பாடலைப் பற்றி அவர்கள் பாடியிருப்பார்களா? இல்லை, ஆனால் அருட்பாக்கள் பலபாடியவற்றுள் தம்பாடலைப்

Koviloor Digital Library

பற்றிய அவர் கருத்துரைகள் ஆங்காங்கே பல மிளிர்வன; ஒளிர்வன. அவற்றில ஒன்றிரண்டை 'அருட்பாவைப் பற்றி ஐயா!' என்று சொன்னதில் தவறு இல்லை அல்லவா? தன்னையும் மறந்து தம் பாடல் மூலம் பெற்ற பயன், மற்றும் இறைவன் அதை ஆரமாக அணிந்து கொண்டது பற்றி அவர்கள் பெற்ற இன்பம் எல்லாம் பேசுகிறார்கள்.

தவிர வேறு பல தொண்டர்கள் திருவருட்பாவைப்பற்றி எழுதிய சுவை மிகு பாடல்கள் அனந்தம். அவற்றில் ஒன்றைத் தெளிவுரையோடு தந்திருக்கிறேன்.

'சற்குரு துதிகள்' என்ற தலைப்பிலே பலர் எழுதியவை 'அருட்பா' நூலில் வெளியாகி இருக்கின்றன.

பிரதம சீடர் என்று போற்றப்படும் தொழுவூர் திரு. வேலாயுத முதலியார் அவர்கள் இந்நூல் தொட்டவரைச் சிவமாககும என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்குக் காரணம் வள்ளலார் பெருமானை இறைவன் தன் பிள்ளை என்று ஏற்றிருக்கிறான். ஆக உன் பாட்டில் குற்றம் ஒன்றும் ஆய்வு செய்யேன என்று சொன்னான். அவன் என் உள் இருக்கின்றான். ஆகவே என் பாடலை அவன் அணிந்து கொண்டான் என்று சொல்லும்போது அதைத் தொட்டவனைச் சிவம் ஆக்கததானே செய்யும்? மேலும் ''இறைவன் படிபபித்தவாறு நான பாட்டைப் படித்தேன் படிக்கிறேன். படிப்பேன்'' என்று கூறும் பாடல்கள் தேன் என நாவும் உடல், உயிர், யாவும் இனிக்கும தானே?

அதைப் பற்றித் திருவருள் சிலர் வேறு ஒருவர் எழுதிய பாடல் இதோ;-

''வான் என்கோ! வான் திரட்டும் அமுதம் என்கோ
வழுத்திடும் முக்கனி என்கோ! மதுரமான
தேன் என்கோ! தெவிட்டாத சீனி என்கோ!
செங்கரும்பின் சாறுஎன்கோ! திராட்சை என்கோ!
ஊன் என்கோ ஊன் இருக்கும் உயிர்தான் என்கோ!
உயிர் உடம்பாய் ஓங்குகின்ற உணர்வு முற்றும்
தான்என்கோ இராமலிங்கத் தலைவா நீ சொல்
தனி அருட்பா எனும் பொருளின் தன்மை தானே!!!

திருவருட் பிரகாசப் பெருமானுடைய திருவருட்பா என்ற பாடல் திரட்டை வான்-அதாவது உயர்ந்த தன்மையாகிய வானம் என்று சொல்லலாமா? வானத்திலே திரளுகின்ற தூய மழை அமுதம் எனபோமா? நல்ல பழுத்த நாம

Koviloor Digital Library

இறையை வணங்குவதற்குப் பயன்தரும் மா பலா வாழை எனப்படும் முக்கனி என்று சொல்லுவோமா? தேனே இனிக்கும், அதிலும் மதுரமென இனிக்கும் தேனுநின் திருவாசகம்! சினி ஆகிய 'அஸ்கா' என்று அழைக்கப்படும்சர்க்கரையைத் (தென்னுட்டில் சினி என்று பேசப்படும் அஸ்கா தமிழகத்தே வடபுல நாட்டில் சர்க்கரை என்பார்கள்) தின்றால் திகட்டும். ஆனால் இந்தத் திருவருட்பா என்னும் சீனி தெவிட்டாதது. இதைச் செங்கரும்புச் சாறு என்றுசொல்லலாமா! திராட்சை என்று செப்பலாமா! ஊன் தானு இது! ஊன் இருக்கும் உயிரா! உயிர் உடம்பில் ஓங்குகின்ற உணர்வா? இல்லை அத்தனையும் (முற்றும்) தான் என்று கூறலாமா! இராமலிங்கப் பெருமானே! நீ சொன்ன தனித்தன்மை வாய்ந்த ஒப்பிலாத் திருவருட்பா என்றும் செலவாய செல்வத் (பொருள்) தன்மைதான் என்னே என்னே? தவிர. வள்ளல் பாட்டைப் படித்தேன் படிக்கிறேன் படிப்பேன் என்று கூறும் மற்றும் ஒரு சில பாக்களையும் ரசித்து மகிழ்க!

தாம் பாடிய பாடல்களைப் பற்றி பெருமான் கூறியவை :

பின் முன் அறியேன் நான் பிதற்றிய சொல் மாலை எலாம்
தன் முன் அரங்கு ஏற்று எனவே தான் உரைத்தான்-என்முன்
இருந்தான் என் உள்ளே இருக்கின்ருன் ஞான
மருந்தான் சிற்றம்பலத்தான் வாயந்து

நீயே என்பிள்ளையிங்கு நின் பாட்டில் குற்றம் ஒன்றும்
ஆயேம் என்று அந்தோ அணிந்து கொண்டான-நாயேன்.செல்
புண்ணியம் இவ் வானின் புவியின் மிகப் பெரிதால்
எண்ணிய எல்லாம் புரிகின்றேன்.

காட்டைக் கடந்தேன் நாட்டை அடைந்தேன்
கவலை தவிர்த்தேன் உவகை மிகுந்தேன்
வீட்டைப் புகுந்தேன் தேட்டமுது உண்டேன்
வேதாக மத்தின் விளைவு எல்லாம் பெற்றேன்
ஆட்டைப் புரிந்தேன் அம்பலத்து ஓங்கும்
ஐயர் திருவடிக்கு ஆனந்தமாக
பாட்டைப் படித்தேன் படிக்கிறேன் மேலும்
படிப்பேன் எனக்குப் படிப்பித்த வாறே.

13. சற்குரு துதி

திருவருட் பிரகாச வள்ளல இராமலிங்கசுவாமிகள் மீது ஓர் அன்பர் பாடிய சற்குருமாலைஎன்ற பகுதியில்இருந்துஒரே பாடலைமட்டும் இதன் மூலம் வெளியிட்டு இந்நூல் நல

Koviloor Digital Library

முடன் நயமுடன் முடிந்ததோடு இதைப்படிக்கும் நல்ல மெய்யன்பர்கள் வாழ்வும் வளமும் வற்றாத செல்வமும் யோகமும் போகமும் பெற்று திருநெறித் தெய்வ சீலராய் அவாகள் திகழச் செய்ய வேண்டி 'ஐயா' அவர்கள் துதியை இங்கே வெளியிட்டு அருட்பிரகாசர் பொன் மலரடிகளுக்கு வந்தனை செய்வோமாக:-

உலகம் தழைக்க வந்துதித்த உருவே வருக! ஓதாதே
உற்ற கலைகள் அனைத்தினையும் உணர்ந்தோய் வருக
ஒன்று இரண்டு அற்று
இலகு பரமானந்த இயல்பே வருக இம்பர்தமை
இறவாக்கதியில் ஏற்றுகின்ற இறையே வருக
என்போல்வார்
கலகம் தவிர்த்துக் கதி அளிக்கும் கண்ணே வருக
கண்ணிறைந்த
களிப்பே களிப்பில் ஊறுகின்ற கனிவே வருக
கலைமதி தோய்
வலகம் செறிந்த வடற்பராதியின் வாழ்வே வருக இராமலிங்க
வள்ளல் எனும் ஓர் மாணிக்க மணியே வருக வருகவே!

அடுத்து வள்ளலார் பாடிய ஜோதிப் பாட்டு

ஜோதி ஜோதி ஜோதி சுயம்
ஜோதி ஜோதி ஜோதி பரம்
ஜோதி ஜோதி ஜோதி அருள்
ஜோதி ஜோதி ஜோதி சிவம்

வாம ஜோதி; சோம ஜோதி; வான ஜோதி ஞான ஜோதி
மாக ஜோதி யோக ஜோதி வாத ஜோதி நாத ஜோதி
ஏம ஜோதி வியோம ஜோதி ஏறு ஜோதி வீறு ஜோதி
ஏக ஜோதி ஏகஜோதி ஏகஜோதி ஏக ஜோதி

ஆதி நீதி வேதனே; ஆடல் நீடு பாதனே
வாதி ஞான போதவன! வாழ்க வாழ்க வாழ்க நாதனே;
அருட் பெருஞ் ஜோதி அருட் பெருஞ் ஜோதி
தனிப் பெருங் கருணை அருட் பெருஞ் ஜோதி

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க. திருவருட் பிரகாச வள்ளலார் திவ்ய திருவடிகளே சரணம்!சரணம்!சரணம்!

முற்றும்.

BOARD OF STUDIES SECTION
SPECIMEN COPY

Koviloor Digital Library

Koviloor Digital Library

பாரதி பதிப்பக நூல்களைப் பார்த்தவர்கள் பரவசப் படுகிறார்கள் படித்தவர்கள் பாராட்டுகிறார்கள். நாட்டுக்குத் தேவையான நல்ல நூல்களை வெளியிடும் ஒரே ஸ்தாபனம் பாரதி பதிப்பகம் தான்.

பாரதி பதிப்பகம்
108 உஸ்மான் சாலை
தி. நகர்: சென்னை-17
போன் : 440205